வடபாங்குக் கூத்து

எண்டிறீக்கு எம்பரதோர் நாடகம்

பதிப்பாசிரியர்:

சு. வித்தியானந்தன்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

மன்னார் மாவட்ட
உள்ளூராட்சி மன்றங்களின்
வெளியீடு

எண்டிறீக்கு எம்பரதோர் நாடகப்

பாடியவர் :

மாதோட்டப் புலவர்
கீத்தாம்பிள்ளை

பதிப்பாசிரியர் :

கலாநிதி
சு. வித்தியானந்தன்

மன்னார் மாவட்ட
உள்ளூராட்சி மன்றங்களின் வெளியீடு

Mannar District Local Bodies

Publication No. 17

Editor :

S. VITHIANANTHAN, M. A., Ph. D.

UNIVERSITY OF CEYLON,
PERADENIYA.

FIRST EDITION, 1964

Price Rs. 2-00

இந்நூலில்

	பக்கம்
தோற்றுவாய்	vii
Introduction	xi
கதைச் சுருக்கம்	xiii
நாடகப் பாத்திரங்கள்	xvi
எண்டிறீக்கு எம்பரதோர் நாடகம்	1

மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின்

வெளியீடு: 1

முதலாம் பதிப்பு: ஆனி 1964

எல்லா உரிமையும்
மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கே

விலை ரூபா 2-00

அச்சுப்பதிவு :

கலைவாணி அச்சகம்,
யாழ்ப்பாணம்

தோற்றுவாய்

"பாடுபடுபவர்க்கே இந்தப் பாரிடம் சொந்தமையா" என்றார் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை. இடையறாது பாடுபட்டுப் பிறர் வாழத் தாம் வாழ்பவர் கிராம மக்கள். அவர்கள் வாழ்வில் மலர்ந்த கலையே நாட்டுக் கூத்து. இது பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் சொத்து ;அவர்களின் உணர்ச்சியையும் செயல்களையும் வெளியிடும் சாதனம்.

அக்காலத் தமிழ் மக்கள் தமது நல் வாழ்விற்கு உதவும் கருவிகளில் ஒன்றாக இதனைக் கொண்டனர். பல நூற்றாண்டாகக் கூத்துப் பொது மக்களின் சமுதாய வாழ்விலே தனியிடம் பெற்றிருந்தது. நாட்டு மக்களின் உள்ளக்கருத்துக்கள், வாழ்க்கை முறை, பண்பாடு முதலியவற்றை அக்கலை எடுத்து விளக்கியது.

பல நூற்றாண்டாக யாழ்ப்பாணம், மன்னார், சிலாபம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளிலே நாட்டுக்கூத்துக்கள் ஆடப்பட்டு வந்தன. சிலாபப் பகுதியில் முனீஸ்வரம் மருதங்குளம் போன்ற இடங்களில் விழாக்காலங்களிற் கோயில் முன்றிலில் மார்க்கண்டன் நாடகம், வாளபிமன் நாடகம் போன்றவற்றை இன்றும் நடித்து வருகின்றனர். மன்னார் மாவட்டப் பகுதிகளில் எம்பரதோர் நாடகம், ஞானசுந்தரி, மூவிராசாக்கள் வாசகப்பா போன்ற நாட்டுக் கூத்துக்கள் இன்றும் அரங்கேற்றப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாணத்திற் பண்டைக்காலத்தில் தென்மோடிக் கூத்துக்களும் விலாசங்களும் நடிக்கப்பெற்றன. இன்று அவற்றை ஆடுவோர் தொகை அருகிவிட்டது. மட்டக்களப்பிலே இன்றும் காரைதீவு, கழுதாவளை, மண்டூர், ஆரப்பற்றை, தம்புலுவில், வந்தாறுமூலை போன்ற இடங்களில் அலங்காரரூபன் நாடகம், கர்ணன்போர், நொண்டி நாடகம் முதலிய நாடகங்கள் ஆடப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் ஆடப்படும் நாடகங்கள் மாதோட்டப்பாங்கு எனவும் யாழ்ப்பாணப் பாங்கு எனவும் இருவகைப்படுவன. மாதோட்டப் பாங்கு நாடகங்கள் காப்பை வெண்பாவாகக் கொண்டவை; பாத்திரங்களுக்கு ஆடல்தரு பெறுதவை; ஏனைய பகுதிகள் கவி இன்னிசை மற்றும் பாவகைகள் ஆகியவற்றால் ஆக்கப்பட்டுப் பெரும்பாலும் வல்லோசை உடையனவாய் வருபவை. யாழ்ப்பாணப் பாங்கின் காப்பு விருத்தத்தினால் ஆக்கப்படும். தெய்வவணக்கமும் செயற்படுபொருளும் சரிதச்

சுருக்கமும் தோடையம் என்னும் பாவகையாற் கூறப்படும். தரு, சிந்து, வண்ணம் முதலியவற்ருற் கதை கூறப்படும். எல்லா விதப் பாவினங்களும் பெரும்பாலும் மெல்லிசையாகவே வரும்.

தென்பாங்கில் நாடகபாத்திரங்கள் தத்தம் நிகழ்ச்சி முடிந்ததும் போய்வருவர். வரவுக்கும் செலவுக்கும் தனித்தனியே தருக்களும் சிந்துக்களும் அவற்றிற்கான நடனமுறைகளும் உண்டு. ஒரு பாத்திரம் எத்தனை முறையும் போய்வரலாம். நாடகக்கதை, பாத்திரங்களின் உரையாடலினுலும் தரு சிந்து வண்ணம் ஆகியவற்ருலும் கூறப்படும். வட பாங்கில் ஒரு பாத்திரம் ஒரு முறையே வரவுக் கவியுடன் ஆடல் தருச் சொல்லி வரலாம். அப்பாத்திர நிகழ்ச்சி முடிந்ததும் போகும் நியதியில்லை. அப்பாத்திரம் மேலும் தோன்றவேண்டுமாயின் வரவில்லாமலே கலந்து கொள்ளும். கதை முழுவதும் தரு, சிந்து, வண்ணம் ஆகியவற்ருற் பாடப்படும். கவி, இன்னிசை போன்ற பாவினங்கள் உள்ளுறக் கலந்து நிற்கும்.

நாடகங்களின் சுருக்கங்களாக அமைவன வாசகப்பாக்கள். வாசகப்பா என்ற சொல் வசனம் கலந்தபாட்டு எனப் பொருள்படும். ஒரே கதையை நாடகமாகவும் வாசகப் பாவாகவும் பாடுதல் உண்டு. உதாரணமாக அந்தோனியார் நாடகம், அந்தோனியார் வாசகப்பா, சந்தொம்மையார் நாடகம், சந்தொம்மையார் வாசகப்பா, மூன்றிராசாக்கள் நாடகம், மூன்றிராசாக்கள் வாசகப்பா எனக் கூத்துநூல்கள் இருப்பதைக் காணலாம்.

மாதோட்டப் பாங்கைத் தென் பாங்கென்றும் தென் மெட்டென்றும், யாழ்ப்பாணப் பாங்கை வட பாங்கென்றும் வட மெட்டென்றும் வழங்குவதுண்டு. ஒரே கதையை ஒருவர் மாதோட்டப்பாங்கிற்பாட, இன்னெருவர் யாழ்ப்பாணப் பாங்கிற் பாடுவர். எண்டிறீக்கு எம்பரதோர் வரலாற்றைக் குருகுல நாட்டுத்தேவர் மாதோட்டப்பாங்கிற் பாடக் கீத்தாம்பிள்ளை யாழ்ப்பாணப் பாங்கிற் பாடினுர்.

இத்தகைய சிறந்த இலக்கணங்கொண்ட நாடகங்களை இயற்றிய புலவரிற் காலத்தால் முந்தியவர் லோறஞ்சுப்பிள்ளை என்பவர். இவரே மாதோட்ட முதல் நாடக ஆசிரியராகக் கொள்ளப்படுபவர். பதினேழாம் நூற்ருண்டின் முற்பகுதிக்குரிய லோறஞ்சுப்பிள்ளை இயற்றிய மூவிராயர் வாசகப்பாவே முதன் முதல் யாக்கப்பெற்ற நாடக நூலெனக் கொள்வர். இது மாதோட்டப்

பாங்கிலே ஆக்கப்பட்டது. இவரிடம் கற்ற மாணவருட் குறிப்பிடற்குரியவர் கோதுகப்பித்தான் நாடகம் பாடிய சந்தியோகுப் புலவர், மரிகருதாள் நாடகம் பாடிய வெள்ளைப்புலவர், திருச்செல்வர் நாடகம் பாடிய குருகுல நாட்டுத்தேவர் முதலியோர். இவர்கள் யாவரும் தமது நாடகங்களைத் தென்பாங்கிற் பாடினர். லோறஞ்சுப்பிள்ளையின் பேரனுகிய கீத்தாம்பிள்ளை எருமை நாடகம், நொண்டி நாடகம், எம்பரதோர் நாடகம் ஆகியவற்றை யாழ்ப்பாணப் பாங்கெனப்படும் வடமெட்டிற் பாடினர். இந்நாடகங்களை விட, தைரியநாதர் நாடகம், சித்திரப்பிள்ளை நாடகம், ஞான சௌந்தரி நாடகம், காஞ்ச நாடகம், சாந்தரூபி நாடகம், இலேனுள் கன்னி நாடகம், மத்தேசு அப்போத்தலர் நாடகம், அகினேச கன்னிநாடகம், நாய் நாடகம் போன்ற பல நாடகங்கள் மாதோட்டப் புலவர்களாற் பாடப்பட்டன.

ஆயினும், இந்நாடக நூல்களில் ஒன்றேனும் இதுவரை அச்சில் வெளிவரவில்லை. ஒரு நாடகத்தை ஏட்டில் எழுதச் செலவு ரூபா பத்து அல்லது இருபது மரக்கால் நெல். இந்தக் காசையோ நெல்லையோ கொடுக்க இயலாமற் பல நாடகங்கள் சரவைப் பிரதிகளாகவே ஆண்டுக் கணக்காக இருந்தன. இந் நிலையில் ஒரு நூலாயினும் அச்சேருததில் வியப்பில்லை.

இக்குறையைத் தீர்ப்பதற்காகவே கீத்தாம்பிள்ளை பாடிய எண்டிறீக்கு எம்பரதோர் நாடகத்தை அச்சிட்டு வெளியிடுகின்ரேம். இந்நாடகம் மன்னர் மாவட்டத்திற் பெரிதும் போற்றப்படும் நாடக நூல். இது 1798-ம் ஆண்டில் இயற்றப்பெற்றது. நாட்டுக் கூத்தைப் பேணும் நோக்கத்துடன், மன்னர் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் ஒன்று சேர்ந்து இந்நூலை வெளியிடுவதற்குரிய செலவை ஏற்றுக்கொண்டன. மக்கள் இலக்கியத்தைப் பேண மக்கள் ஸ்தாபனங்கள் முன்வந்திருப்பது போற்றற்குரியதே. இம்மன்றங்களுக்குத் தமிழ் மக்கள் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றனர். இப்பணியில் இம்மன்றங்களைச் செலுத்தி நல்வழிப் படுத்திய உள்ளூராட்சித் துணைத் தலைவர் திரு. ந. சிவராசா அவர்களின் தமிழ்த் தொண்டு எமக்கு எப்பொழுதும் கிடைக்கவேணடும். அன்னருக்கு எமது உளம் நிறைந்த நன்றி. இந்நாடகத்திற்குரிய முக்கிய ஏட்டைத் தந்து உதவியவர் நானட்டானைச் சேர்ந்த திரு. பெஞ்சமின் செல்வம் அவர்களாவர். மன்னர் நாடகங்களைப் பற்றிய பல குறிப்புக்களையும் இவரிடம் கேட்டறிந்தோம். தமிழ்த் தொண்டுக்கென வாழும் இப்பெரியாரின்

ஒத்துழைப்புக்கும் பயன்தரு கருத்துக்களுக்கும் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். இவரின் அரும் பெருந் தொண்டைத் தமிழுலகம் என்றும் போற்றும். இப்பெருந்தகை அளித்த பிரதியுடன் ஒப்பிடுவதற்கு மூங்கில் முறிச்சான் என்னும் இடத்திலிருந்து ஓர் ஏடு கிடைத்தது. கீத்தாம்பிள்ளையின் பூட்டப்பிள்ளையாகிய திரு. ம. சந்தியாப்பிள்ளையே இப்பிரதியைத் தந்துதவியவர். அப்பெரியாருக்கும் எனது நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் மிக விரைவில் அச்சிட்டுதவிய கலைவாணி அச்சகத்தாருக்கு எமது உளம் நிறைந்த நன்றி.

மட்டக்களப்பிற் பெரிதும் கொண்டாடப்படும் தென்மோடிக் கூத்து நூலாகிய அலங்காரரூபன் நாடகத்தை 1962-ம் ஆண்டில் வெளியிட்டோம். அதனை நன்கு வரவேற்ற தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலையும் அன்புடன் ஏற்று எம்மை இத்துறையில் மேலும் ஊக்குவிக்குமென எதிர்பார்க்கின்றோம்.

இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை, 27-6-64.

சு. வித்தியானந்தன்

INTRODUCTION

THE Folk Arts of any country serve as a mirror, clearly reflecting the dynamic aspects and living significance of that society and as such are of fundamental importance to the understanding of that society. The Tamils of Mannar have a rich heritage of folk arts, especially of folk drama. A study of this folk drama clearly reveals the part played by folk drama in the social life of the people.

Unfortunately Folk Drama, which was once a vital element in the community life of the people of Mannar, seems today to be on the verge of extinction. The social surroundings are so much revolutionised during the last century that folk drama has lost much of its value. It is in a dying condition primarily because it has been denied the social status it once enjoyed by the sophisticated society of today.

This age old institution of folk drama deserves to be encouraged. One of the ways of preserving this art is to print the large number of folk plays which are available to us only in manuscript form. It is with this intention that the Mannar District Local Bodies financed this publication, The printing of folk plays with a view to preserve folk drama was undertaken by me five years back and one of the most popular folk plays of Batticaloa–Alankara rupan Natakam – was published by me in 1962 as an Arts Council publication. This is the second play to be edited by me and I am very grateful to the Mannar District Local Bodies who have made it possible for me to bring out this edition. This is the first folk dramatic work of the Mannar District which has come out in print. There are many more manuscripts which are on the verge of destruction. It is hoped that the example set by the Local Bodies will be followed by other institutions.

Endirikku Emperathor Natakam deals wiih the story of Henry, the Emperor of Rome. It is one of the most popular folk dramas of the Mannar district and is perhaps one of the oldest written in Mannar. The plays of the Mannar District fall into two broad divisions, the Mannar Panku or Mannar style and Yalppanap Panku or Jaffna style. They are also called Ten panku (Southern Style) and Vada panku (Northern style). The book which has now be printed was written in 1798 by Kithampillai of the Mannar District. Another work with the same name was composed earlier in the Mannarp panku by Kurukula Nadduththevan of Puthukkamam in 1792.

The present edition is mainly based on a manuscript belonging to Mr. M. Benjamin Selvam of Nanattan. I am very grateful to him for having so graciously lent this manuscript. A manuscript from Munkilmurichchan was also used to prepare this edition. My thanks are due to M. Santhiap-pilai, the great grandson of the author who made this manuscript available to me.

I am very much indebted to Mr. N. Sivarajah, Assistant Commissioner of Local Government, Mannar but for whose efforts this book would never have come out in print. I am thankful to the Kalaivani Press, Jaffna for printing this book within a very short time.

The Tamils can ill afford to neglect this valuable legacy of folk drama and it is our earnest hope that more folk plays of the Mannar district will be printed before they are lost to us.

University of Ceylon,
Peradeniya,
27-6-1964.

S. Vithiananthan

கதைச் சுருக்கம்

எண்டிறீக்கு எம்பரதோர் உரோம இராச்சியத்தின் சக்கரவர்த்தி; ஈடிணையற்ற கிறித்த பக்தன். கற்பு நெறிதவறாத மனைவிக்கு முடிசூட்டிச் செருசலம் பதிக்கு யாத்திரைக்குப் புறப்படுகிறான். அவனின் தம்பி, தமையன் போனபின் அரசன் மனைவிமீது இச்சையாகி வாட்டமுறுகின்றான். இதைக் கண்ணுற்ற அரசி வாட்டத்தின் காரணத்தை அவனிடம் விசாரிக்கிறாள். அவள்மேற்கொண்ட மையலால் துன்பமடைவதாக மைத்துனன் விடையளிக்கின்றான். தோழியரோடு ஆலோசித்து, மாளிகையொன்று கட்டினால் அதில் வந்து சந்திப்பதாகச் சொல்கிறாள் அரசி.

உடனே தச்சரை அழைத்து மண்டபமொன்று கட்டும்படி கட்டளையிடுகின்றான் மைத்துனன். மண்டபம் முடித்து மைத்துனி வரவுகாத்திருக்கும் வேளை, கதவு பூட்டி யன்னல் வழியாக உணவு கொடுக்கப்படுகின்றது. தலயாத்திரை சென்ற அரசன் ஐந்தாண்டு கழிந்து திரும்புகிறான். தமையன் வரும்வேளை தம்பியை மறியல் வைப்பது சரியல்லவெனவுணர்ந்து மைத்துனனை விடுதலை செய்கின்றாள், அரசி. ஓடோடியும்போய், தான் செய்த யாவையும் மைத்துனி செய்ததாக வரும் வழியில் முறையிடுகின்றான் அரசனுக்குத் தம்பி. அப்போது அரசனைக் காண வருகின்றாள் அரசி. அவளை வெட்ட உத்தரவளிக்கின்றான் அரசன். காப்பிலிகள் அரசியைக் கானகத்திற் கொண்டுபோய்த் தங்களோடு இணங்கும்படி நிற்பந்திக்கின்றனர்.

அவ்வேளை தண்டலை நாட்டரசன் வேட்டைக்குப் போகின்றான். அவ்விடம் அரசியைக் காப்பாற்றி, ஊர் கொணர்ந்து, தன் பிள்ளைக்குத் தாதியாக்குகின்றான். தண்டலை மன்னனின் தம்பி அவள்மேல் மோகங்கொண்டு கேட்க, அவள் மறுக்கின்றாள். எனவே, தமையன் மகனைக் கொன்று, அதனைத் தாதி செய்தாளெனச் சாட்டுகின்றான்.

அதை விசாரித்த மன்னன் கப்பலேற்றி நாடு கடத்துகின்றான். நடுக்கடலில் தன்னோடிணங்கும்படி கட்டாயப்படுத்துகிறான் கப்பல் மாலுமி. அற்புதத்திருவருளால் அவளின் கற்புக்கு இடருறாது தப்புகின்றாள்.

மனித சஞ்சாரமற்ற தீவில் விடப்பட்டு மூன்றாண்டு காய்கனி கிழங்குகளிற் சீவிக்கின்றாள் அரசி. அவள் திரும்பி ஊர் போவாள் என்றும், அவளுக்குத் துயர் செய்தோருக்கு மன்னிப்பளிக்கக் குட்டநோய் மாற்றும் குழை மருந்தொன்று கொடுபடுகிறதென்றும் அசரீரி வாக்குக் கிடைக்கின்றது. மீண்டுமொரு கப்பல் அவளைத் தண்டலை நகரிற் சேர்க்கின்றது.

தண்டலை நாட்டிலே தீராக் குட்டநோயினாற் பீடிக்கப்பட்ட வழிப்போக்கன் ஒருவன் இப்பெண்ணின் குழை மருந்தாற் சுகப்படுகின்றான். இதனையறிந்த தண்டலை அரசன் தனது தம்பியின் குட்ட நோயையும் மாற்றும்படி அவளை அழைத்து வேண்டுகின்றான். தம்பியைக் கவனித்த அப்பெண் இது உடல் நோயன்று, பழி நோய்; குருவானவரிடம் சென்று பாவசங்கீர்த்தனம் பண்ணி மன்னிப்புப் பெற்று வந்தால் யாவும் குணப்படும் என்று சொல்லுகிறாள். தன் பேரிலுள்ள குற்றத்தைத் தாதியின் பாற்சுமத்திய விபரத்தைக் குருவானவரிடம் சொல்ல, இதை உன் தமையனிடம் போய்ச் சொல் என்று அனுப்பிவைக்கின்றார் குருவானவர். தமையனிடம் உள்ளதை உள்ளபடி சொல்லுகிறான் தம்பி. அதைக் கேட்டு அடங்காக் கோபமுற்ற அண்ணனைச் சாந்தப்படுத்துகிறாள் வைத்தியப் பெண். அவளின் இரங்கலால் தமையன் மன்னிப்பு அளிக்கவே, குட்டம் மாறிச் சுகம் பெறுகிறான் தம்பி. தன்னையும் இன்னாரென்று கூறுகிறாள் வைத்தியப்பெண்.

எண்டிறீக்கு அரசனின் தம்பிக்கும் குட்டம் பிடித்து, எவ்வித மருந்துக்கும் குணமுறாது மன்னன் வாட்டமுற்றிருக்கும் வேளை, தண்டலை நாட்டு வைத்தியப் பெண்ணின்

புகழை அறிந்து, தூதுவனை அனுப்பி, அவளை அழைத்துத் தம்பியின் குட்ட நோயை மாற்றும்படி கேட்கின்றான். அதற்கு அவள், அது ஒரு பாவ நோய் என்றும், குருவிடம் பாவமன்னிப்புப் பெற்றாற் குணமாகுமென்றும் கூறுகின்றாள்.

தன்னாலான நடத்தைகளைத் தமையனின் மனைவிமேற் சுமத்தி அவளை வெட்டப் பண்ணிய பாவத்திற்குக் குருவிடம் பொறுதி கேட்கிறான், அரசனின் தம்பி. இப்பாவம் தன்னாற் பொறுக்கப் படுவதன்று என்றும், தமையனிடம் சொல்லி மன்னிப்புப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் குரு கூறுகின்றார்.

தமையனிடம் உற்ற யாவற்றையும் மறைக்காமற் சொல்லவே, அரசன் ஆறாக் கடுங்கோபமுற்றுத் தம்பியை வெட்டப்போகின்றான். அப்போது அவன் மேல் இரங்கும்படி வைத்தியப்பெண் கேட்கவே, மன்னவன் சாந்தமடைந்து மன்னிப்பளிக்கின்றான். கைக்குழை மருந்தால் மைத்துனனின் குட்டநோயை மாற்றித் தன் வரலாறுகளையும் அரசனுக்குரைக்கவே, அரசன் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து, அனைத்தையும் ஆண்டளித்த அன்னை மாமரியின் அடிமலர் பாதாரவிந்தத்தை அயரா மனத்தாலே துதித்து, மனைவியை அணைத்துக் கொண்டான். அவளுக்குக் கற்புக்கிராக்கினி என்ற பெயரும் சூட்டினான்.

நாடகப் பாத்திரங்கள்

புலசந்தோர்	—	பாயிரமுரைப்போர்
பறையன்	—	இராச வருகை கூறுவோன்
எண்டிறீக்கு	—	உரோம இராச்சிய மன்னன்
கன்னி	—	எண்டிறீக்கின் மனைவி
தோழி	—	கன்னியின் ஏவற் பெண்
மந்திரி		
கட்டியன்		
சேனாபதி		
தம்பி	—	எண்டிறீக்கின் உடன் பிறவி
தோழன்	—	தம்பியின் நண்பன்
பேய்	—	தம்பிக்குத் துற்புத்தி கூறுபவர்
தச்சன்	—	மாளிகை கட்டுவோன்
காப்பிலி	—	கொலைசெய்பவன்
தண்டலைராயன்	—	தண்டலைநாட்டரசன்
தண்டலைராயன் தேவி	—	தண்டலைராயனின் மனைவி
வேடர்	—	வேட்டையாடுவோர்
கப்பித்தான்	—	தண்டலைநாட்டரசின் சேனாதிபதி
மதிமன்	—	தண்டலைராயனின் தம்பி
தோழன்	—	மதிமதனின் நண்பன்
தண்டேல்	—	கப்பல் மாலுமி
கலாசு	—	தண்டேலின் ஏவலாள்
சம்மனசு	—	தேவதூதன்
பரிகாரி	—	குட்டத்துக்குவைத்தியம்செய்வோர்
குரு	—	பாவமன்னிப்பு அளிப்பவர்
தூதுவன்	—	எண்டிறீக்கின் ஏவலாள்

எண்டிறீக்கு எம்பரதோர்

நாடகம்

காப்பு

விருத்தம்

ஏர்மேவு பொற்றிகிரி கரத்தி லேந்தும்
    எண்டிறீக் கெம்பரதோர்க் கினிய காந்தை
சீர்மேவு கற்புராக் கினிதன் காதை
    சிறப்புயர்நா டகப்பாவாய்த் தேர்ந்து கூறப்
பார்மேவு பெத்தலையம் பதியில் வெல்லைப்
    பருப்பதத்தில் மனுச்சுரூபம் படைத்து வந்த
நேர்மேவு மேசுநச ரேனு பாதம்
    நித்தியமுங் காப்பெனமுன் நிறுத்தி னேனே

பின் விருத்தம்

திருஞான மறைக்குகந்த செல்வ னுகைச்
    செகம் புரக்கு மெண்டிறீக்கெம் பரதோர் பாரி
பெருஞான நேசகற்பு ராச மாது
    பேருலகில் நடந்தசரித் திரத்தின் காதை
அருஞான முனிவோர்சொல் லுரையின் வண்ணம்
    அரங்கினில்நா டகப்பாவா யறையப் பாரிற்
குருஞான முபதேச முரைக்கு மாதி
    குமாரனிரு சரணமலர் கும்பிட் டேனே

பின் விருத்தம்

பூமாது இருந்துலவு புயவொய் யாரன்
புரவலனென் டிறீக்குசெல்வப் புகழு தாரன்
மாமாது கற்புநெறி வழுவா ராச
மடந்தையரால் நடந்தகதை வடிவு லாவும்
நாமாது [வாணர்முந்நா ளோது கின்ற
நவமான [சரிதையைநா டகப்பன் பாடக்
கோமாது] கோவடையுங் குடிலி லீன்ற
கொற்றவன்பா தந்துணையாய்க் கொள்கின் றேனே

தோடையம்

ஏரார்பொன் மவுலிபுனைந் தெண்டிறீக்கெம் பரதோரும்
இனியமனை யாளுமர சியற்றுகதை பாடக்
பேரார்வின் கதிருடுவும் பிறைநிலமூங் கடல்மலையும்
பெருகுபல பொருளுதவு சருவபரன் துணையே

எம்பரதோர் காந்தையென்னும் இராக்கினிக்கு முடிசூட்டி
இனியசெரு சலைநாட்டுக் கேகுகதை பாட
அம்பரம்பா தாளமும்மூ வங்குலியிற் றுங்குகின்ற
அற்புதன் றிருக்கமலப் பொற்சரணந் துணையே

மன்னனுமந் திரியுமெங்கள் வானபரன் பாடுபட்ட
வளர்நகரங் கண்டுமனம் மகிழ்ந்தகதை பாடப்
பொன்னணியும் புரத்திகற்புப் பூவையருக் கரசியென்னும்
பூரணமெய்ஞ் ஞானகன்னி பூஞ்சரணந் துணையே

மன்னவன்பின் னவன்ராச மாதைமைய லால்மருட்ட
மங்கைகற்பு வழுவாத தன்மைதனைப் பாட
இந்நிலத்திற் பரமதிவ்விய இரவியுதித் திடமுன்னெழு
இனியவிடி யுடுவாய்வந்த கன்னிபாதந் துணையே

தரணிபனுக் கிளையதம்பி தான்புரிந்த பிழையை மங்கை
தன்பேரி லெடுத்துவைத்த தகைமைதனைப் பாட
புரணமதி பதித்தபரி பூரணிகற் பாரணிமெய்ப்
புண்ணியத்தன் னதியான கன்னிமரி துணையே

தம்பிசொல்லை நம்பிமங்கை தனையிறைவன் வினைபுரியத்
தற்பரன்தற் காத்தவந்த அற்புதத்தைப் பாடக்
கும்பிநர கலகைகளைக் கொடுஞ்சிறையிட் டுகந்தெமையாட்
கொண்டபரப் பொருளைமனத் தென்றும்வை துணையே

கன்னியைத்தன் டலைராயன் கண்டழைத்துச் சென்றவன்றன்
கான்முளையை வளர்க்கவைத்த காதைதனைப் பாடச்
சென்னியிலீ ராறுவுடுத் திகழ்மகுட முடிசூடுந்
தேவமரி யாயிபத்ம பாதமலர் துணையே

தண்டலைமன் தம்பியுமித் தருமகன்னிக் காசைகொண்டு
தமையன்மக வினையரிந்த தகைமைதனைப் பாட
அண்டபகி ரண்டமுல கனைத்துமுய்ய விரக்கமருள்
அற்புதனைப் பெற்றதிவ்ய கற்புமரி துணையே

மங்கைதனை மீண்டுமந்த வனத்தில்விட மடக்கொடிக்கு
மரியன்னைதன் னருள்கிடைத்த மகிமைதனைப் பாடக்
கங்கைதன்னி லுருவாகிக் காரணனே வைகிளையைக்
காத்தகன்னி மரிசரணந் தோத்தரித்தல் துணையே

பாவிகட்கு வருபிணிநற் பாக்கியகன்னி நீக்கியதும்
பாரில்நெறி விளங்குகின்ற காரணமும் பாடக்
காவில்முனி மோசேநின்று கரங்குவிக்க இளந்துளிர்கள்
கருகாமல் மரமெரியக் காட்டுகன்னி துணையே

புலசந்தோர் வரவு

விருத்தம்

எழில்தரு வரத்தி தன்ன இரத்தின வடங்க நன்னத்
தளிர்மலர்ப் பதத்தில் வன்னச் சதங்கைகள் கலக லென்ன
வழுவகல் கற்பு ராச மடந்தைதன் கதையைக் கூறப்
புளகிதமுட னிரண்டு புலசந்தோர் தோற்றி னாரே.

சபைத்தரு

அருள்செறி பரமதெய் வீகனும் — பர
னடியிணை தனைநிதங் கும்பிட்டுத்
தருமரா சகன்னி காதையைச் — சொல்லச்
சபைதனிற் புலசந்தோர் தோற்றினார்

மணிதங்கு பசுந்தங்கச் சிலுவையும் — எழில்
வாய்ந்தசெங் கரந்தன்னி லேந்தியே
அணிதங்கு ராக்கினி காதையின் — வள
மறைந்திடப் புலசந்தோர் தோற்றினார்

புலசந்தோர் தரு

1ம் பேர். சறுவபொருளும்படைத்த ஏகனே - போற்றி போற்றி
தந்தைசுத னிஸ்பிரீத்துச் சாந்துவே-போற்றி போற்றி
மறுவில்லா மெய்ஞ்ஞான ரூபனே - போற்றி போற்றி
மகிமைநிறை தத்துவதெய் வீகனே - போற்றி போற்றி

2ம் பேர். ஆதியதஞ் செய்பாவந் தொலைத்தவா-போற்றி போற்றி
ஆறிலக்க கணமேவு தேவனே - போற்றி போற்றி
நீதியிடை யர்குடிலிற் பிறந்தாவா - போற்றி போற்றி
நீணிலத் தெமைமீள மரித்தாவா - போற்றி போற்றி

1ம் பேர். பாவவிரு ளைநீவும் பரியே - புகழ்ச்சி புகழ்ச்சி
படியிலறி ஞர்புகழும் சுருதியே - புகழ்ச்சி புகழ்ச்சி
தேவலோ கமேவு வாசலே - புகழ்ச்சி புகழ்ச்சி
திவ்வியகன்னி மரிய நாயகி - புகழ்ச்சி புகழ்ச்சி

2ம் பேர். முத்தர்க் கதிகமகிமை படைத்திடும் - வரதத்துவநன்
முனிசஞ்சூ சைப்புனித யோகனே - தினமும் புகழ்ச்சி
தத்துவ தளகத்தர் மூவர்க்கும் - நவசபைவளர்
சம்மன சினர்மென்மலர்ப் பாதமே - புகழ்ச்சி புகழ்ச்சி

1ம் பேர்: தேவபரன் தன்சீடர் கன்னியர் — சகலஅர்ச்சிய
சிட்டவர் செழுநற்பங்கய பாதமே — புகழ்ச்சி புகழ்ச்சி
மாவிறல்செறி வேததிருச் சபை — தலைமையாக
வளரிராச குருவின் பாதமே — வணக்கம் புரிவோம்

புலசந்தோர் பாயிரம்

அகவல்

சீர்மலி யேக திரீத்துவ மாகிய
ஏர்மலி பிதாச்சுத னிஸ்பிரீத்துச் சாந்து
என்னு முப்பொரு ளேகமு மானோன்
பொன்னுறை பாதாம் புயமலர் பணிந்தேன்

இந்நிலத் தெம்மை இரட்சிக்கும் ஞானக்
கன்னிமா மரியைக் கரங்கொடு குவித்தேன்
முனிவர்கள் சகல மோக்கிஷ வாளர்கள்
அனைவர்கள் பாதமும் அஞ்சலி செய்தேன்

தற்பரன் வேதந் தழைக்குமெய்ஞ் ஞான
அற்புத றோமை அணிநகர் புரக்கும்
எம்பர தோரெண் டிறீக்குநன் மனையாம்
விம்பமென் கனியிதழ் மின்னிராக் கினியும்

கற்பினிற் சிறந்த கதிரனை ராய
நற்புயர் நீதி ஞானமுள் ளளவாய்
தரைநர ரெவர்க்கும் தாயர்தந் தையராய்
அரசர்யா வோர்க்கும் அரியே றிணையாய்த்

தருமமுற் றிருவருஞ் சகோதரர் போல
இருநில மரசுற் றிருந்திடு நாளில்
வானநா யகனார் மனுவுரு வெடுத்து
மாநிலத் தவர்க்காய் மரித்திடு தலமாம்

செருசலை நகரந் தரிசனை காணப்
பிரியமுற் றண்ணல்தன் பெண்கொடிக் குரைத்துத்
தம்பியை யழைத்துத் தாயிவ ளென்றுங்
கொம்பனை யாட்குன் குலமக னென்றும்

சொல்லிமங் கையர்க்குச் சுடர்முடி சூட்டி
எல்லையி லரசுற் றிருமென விருத்தி
மந்திரி கூட மன்னவ னேகிச்
சுந்தர நகரச் சோபனம் யாவும்

மகிழ்வுறக் கண்டு வருடமை யாண்டு
தகைமையாய் நிற்கத் தரணிபர்க் கிளையோன்
துய்யராக் கினிதன் சுரூபவண் ணத்தின்
மையலால் மெலிந்து வருந்திய வாறும்

தவமலி யிறைவன் தம்பியைக் கண்டு
அவகட நினைவை அறியா ததனால்
தோழிய ருடனே துணைவனுக் கிணைய
காளைமுன் னேகிக் கவலையே துனக்கு

துன்பமுண் டெனிலுஞ் சொல்லெனக் கேட்க
என்துய ருரைக்க இருளையை யகற்றி
வந்திட லாமென வஞ்சகன் சொல்லத்
தந்தரப் பாங்கியர் தன்னைவிட் டேகித்

தாயர்நா னுனக்குத் தனையன்நீ யெனக்குச்
சேயனே யேது தேவைசொல் லென்ன
அன்னவ னுனது ஆசைமோ கத்தால்
என்னுடல் மெலிந்தே னிணங்கெனக் கேட்கப்

பூவைய ரநேகம் புத்திகள் சொல்ல
ஆவதை யுணரா தவன்மிக நெருங்கத்
தாய்மரி யனையே தஞ்சமென் றலற
வாய்மைசேர் தோழி வந்துடன் கேட்க

மன்னர்பின் ஞேன்சொல் மாறுபா டுரைக்க
அன்னவள் சூதொன் றறிவையர்க் குரைக்கப்
புத்தியென் றறிந்து பூவையாங் கவனைச்
சித்திர மனைநீ செய்திரு வருவேன்

என்றசொல் லவன்கேட் டியற்றியங் கிருக்கச்
சென்றவன் கவாடஞ் சிக்கெனப் பூட்டி
வைத்தருங் காவல் வல்லபோ சனமுஞ்
சித்திர மதிலாற் சிறப்புடன் நல்க

உத்தர வருளி வுலகெலாம் புரந்து
நித்திய நீதி நெறிபுரி வாறும்
செருசலைப் பார்க்கச் சென்றவெம் பரதோர்
திருவருள் பெருகு திசையெலாம் பார்த்து

வந்துதன் பதியெனும் மாநகர் ரோமை
அந்தநன் நகர்சேர்ந் தங்கொரு மடத்திற்
றங்கியே யிருக்கத் தருமரா சாத்தி
துங்கனை நினைந்து துயருறும் போது

பாங்கியங் கவட்குப் பார்த்திபன் வந்த
ஆங்கதை யுரைக்க அரிவையும் மகிழ்ந்து
அணிநக ரெல்லாம் அலங்கிர்தஞ் செய்து
பணிவளர் தண்பூம் பந்தல்கள் போட்டு

சித்திரம் புரிந்து செகபதிக் கிளைய
புத்தியில் லானைப் புரிசிறை விடத்தன்
தோழியர்க் குரைக்கத் தோழியு முரைத்தாள்
ஏழைமை மதியீ தெனிலுமுன் சித்தம்

ஆம்படி யென்ன அதனையெண் ணுமல்
தாம்பனை வாகர்கள் துணைவர்பின் னவனைச்
சிறைவிட்ட வுடனே சேட்டன்முன் னேபோய்
பிறைநிகர் நுதலாள் பிழைபுரிந் தென்மேல்

மிஞ்சிய மோக வெறியிரு லாண்டோர்
அஞ்சுமே மறிய லடைத்தன ளென்றும்
இறைவனுக் குரைக்க ஏந்தல்நம் பாததால்
உறுதிசேர் சாட்சியு முண்மையும் பண்ண

மன்னவன் கோபம் வடவைபோ லெழுந்து
தன்னில்நொந் திருக்கச் சதிவினை யறியா
இராசமங் கையர்தன் இறைவனைக் காண
ஆசையோ டேக அரசனும் வெகுண்டு

கன்னமீ தடித்துக் கணிகையென் றுரைத்து
என்னிடம் வெட்கமில் லாமல்வந் தவளைக்
கொண்டுபோய் வனத்திற் கொல்லுமென் றுரைக்க
நின்றிடு மழுவர் நேரிழை தன்னை

வெளவியே பிடித்து வரிப்புலி போலே
வெவ்வியே யிழுத்து மின்னனை யாளைக்
கொண்டுபோய் வனத்திற் கொடுமைசெய் **வேளை**
தண்டலை யிறைவன் தருவன வேட்டை

ஆடவந் தன்போ டவள்நெறி யழியா
தேடவிழ் குழலேந் திழையை மீட்டதுவும்
பிள்ளையை வளர்க்கப் பெருகுகைத் தாயாய்க்
கிள்ளைவா யிதழைக் கீர்த்திசெய் திருத்த

(முதலிரா முற்றும்)

ஞானமுந் தவமும் நன்மையுங் கற்பும்
மானமு முடையாள் வந்தநாள் முதலாய்
அந்நகர் செழிக்க அரிவையர் தன்னை
மன்னனு மநேக மகிபரும் புகழ

வண்டணி கரத்தாள் மகிழ்ந்திருந் திடுநாள்
தண்டலை ராயன் தம்பியா மொருவன்
தெருவளம் பார்க்கச் செல்லுமவ் வேளை
சுரிகுழ லவள்தான் தோன்றலை யேந்தி

மாளிகை யிருக்கும் வடிவெழில் கண்டு
வாளணி கரத்தான் மையல்கொண் டவளை
ஆரெனக் கேட்க ஆங்கவன் பாங்கன்
வாரணி தனத்தாள் வரல்வா றுரைக்க

கன்னிமுன் சென்று காதல்மோ கத்தைச்
சொன்னது கேட்டுத் துய்யகன் னிகையார்
தம்பிநீ யெனது சகோதர னென்ன
வம்பனுங் கதற்கு மறுத்துரை பேச

கன்னிகை தன்மேற் கருத்திணங் காததால்
மன்னவன் தம்பி வன்மமே கொண்டு
முத்துமிழ் நகைகான் முளைதனை அணைத்து
நித்திரை செய்யும் நிசியினில் வந்து

பாலனைத் தடிந்து பார்த்திவ னிடம்போய்
வேலனை விழியாள் வெட்டினு ளென்று
சொன்னசொற் கேட்டுத் தோன்றலை யீன்ற
மன்னவன் சலித்து மாதிவ ளிப்படிச்

செய்வளோ வென்று சிந்தனை மீது
மெய்மைகொள் ளாத விதமதை யறிந்து
பின்னவன் வந்து பெண்கொடி செய்ததாய்
உன்னரு மநேக ஒப்பனை காட்டத்

தார்குழ லாளைத் தரணிப னழைத்துக்
காளையை யார்சிரங் களைந்ததென் றுரைக்க
கற்புடை மயிலென் கன்மமென் றுரைக்க
விற்பொலி சுடிகை வேந்தனங் கவள்மேற்

பிழையில்லை யென்னப் பின்னவன் மீட்டும்
பழிபல கூறப் பார்த்திவன் பயந்து
மரக்கல ரிடத்தில் மங்கையை யீந்து
தருக்கமழ் தீவிற் றள்ளுமென் றனுப்ப

ஏற்றிய தண்டேல் இவள்சுரூ பத்தின்
மாற்றமில் வடிவால் மையல்கொண் டுருகி
மங்கையைக் கேட்க மறுத்தவ ளுரைக்கக்
கெங்கையி லெறிவேன் கேளுமென் சொல்லெனக்

கன்னிகை யெனக்குக் கற்படைக் கலமென்
றன்னவள் முட்டிட் டர்ச்சனை செய்ய
ஆதிகன் னிகைவா ஞ்சுவை யனுப்ப
மாதுள மகிழ மரக்கலன் பயந்து

பொற்கொடி யிடத்திற் பொறுதிகள் கேட்டுக்
கற்றிடர்க் காவிற் கன்னியைப் போட
வல்விலங் கினங்கள் வான்மலர்க் காவில்
செல்வராக் கினியுஞ் சேர்ந்திருந் திடுநாள்

எண்டிறீக் கரசர்க் கிளையதம் பியர்க்குந்
தண்டலை ராயன் தனதுதம் பியர்க்குந்
தன்மரா சாத்தி தனக்கவர் செய்த
கன்மமே பலித்துக் காத்திர மெங்கும்

குட்டநோய் பிடித்துக் கோள்மருந் துகளால்
திட்டமாம் வியாதி தீர்ந்திடா திருக்கக்
காவில்வாழ் ராச கன்னிகை வனத்திற்
றாவிய கனியுந் தருமழை நீரும்

உய்த்துண வாக உண்டுசு கித்துச்
செய்யமூ வாண்டு சிறந்திருந் ததுவும்
ஆம்பொழு தொருநாள் அன்னைமா மரியின்
பூம்பதந் தொழுது புவிதனி லெளியாட்

கின்னமுங் கிருபை ஈயுமென் றிறைஞ்ச
கன்னிகை வனத்திற் கண்துயில் வேளை
கன்னியர்க் கரசி கன்னிமுன் வந்து
மன்னர்கோத் திரியென் மகளென வழைத்துன்

கற்பினின் கீர்த்தி ககனமும் புவியும்
சொற்கடங் காவெனச் சோதியென் றுரைத்துத்
தேக்கிய பரம திருவரு ளடையப்
பாக்கிய முடையான் படியில்நீ யென்றும்

குட்டநோய் தீர்க்கும் குழைமருந் திதுமா
திட்டமா மென்றோர் செழுங்குழை தன்னை
மங்கைமுன் வைத்து வருமொரு கப்பல்
அங்குநீ போவென அவள்தனக் குரைத்துத்

தெரிசனை மறையச் சேயிழை யெழுந்து
மரியனை யிருதாள் மலரடி போற்றி
மாமயில் நிற்க வாடையி லடைந்த
தாமொரு கப்ப லக்கரை சேர்ந்து

அரிவையைக் கண்டு அன்னவ ரழைத்து
மருவுதண் டலைய மாநகர் சேர்க்கப்
பண்தரு மொழியாள் பண்டிதங் கேட்டுத்
தண்டலை ராயன் தன்னிட மழைத்துக்

குட்டநோய் கொண்ட குமாரன்மெய்ப் பிணியைத்
திட்டமாய் மாற்றச் செப்பிய வாறும்
நோயுடை யான்முன் நுண்ணிடை யேகி
வாய்மைகே ளுனக்கு வந்தது பாவப்

பற்றிது தனக்குப் பாவவுச் சாரணம்
உற்றிடில் மாறும் உண்மையென் றுரைக்க
முன்னவ னுடைகான் முளைதனை வதைத்து
அன்னதா தியரை அடவியிற் றுரத்தி

விட்டபா வத்தை வேந்தனுக் கிளையோன்
திட்டமாம் வேத தேசிகர்க் குரைக்க
உறுதிசேர் குருவு முந்தன்முன் னவன்முன்
பொறுதிகே ளென்னப் பூபதிக் குரைக்க

மன்னவன் றானும் மங்கையைச் செய்த
அந்நீதம் நினைந்துள் ளாகுலங் கூரப்
பூவையர் கண்டு புரவலன் றனக்கப்
பாவியைக் காணப் படுமொரு பொழுதுன்

தம்பிதீ வினைக்குச் சாற்றொரு பொறுதி
அம்பரர்க் காகவென் றரசனுக் குரைக்க
மறுவிலாள் மருந்தால் மன்னவன் தம்பி
உறுபிணி நீங்கி உய்திடும் வாறும்

தண்டலை நகராள் தரணிபன் தனக்கு
மன்றல்சேர் குழல்தன் வரல்வா றுரைக்க
கேட்டக மகிழ்ந்து கிஞ்சுக விதழாழ்
தீட்டிய கற்புத் திசையெலாம் புகழத்

தாட்டிமை சேருமன் தம்பியை வதுவை
சூட்டுதல் நன்றெனத் தோகையர்க் குரைக்க
ராக்கினி கேட்டு யாளெருரு நேர்த்தி
பாக்கிய ரேமைப் பதியில்ரா யப்பர்

கோவிலிற் கொடுபோய்க் கொடுத்ததின் பிறகு
பாவிநான் வந்தாற் பகர்வனென் றுரைக்க
அப்பொழு திறைவ னரியசங் கைகளாய்க்
கப்பலி லேற்றிக் காவலர்க் கரசன்

எம்பர தோரெண் டீக்குமன் னவர்தன்
தம்பிநோய் தீர்க்கத் தக்கவை யான
அவுடத முள்ள அணங்கிவ ளொன்று
பவுசுறு நிருபம் பார்த்திவ னனுப்ப

அந்நகர் சேர அரசனங் கழைத்துப்
பின்னவன் றனது பிணிதவி ரென்ன
அன்றவள் தானு மவனிட மேகித்
தண்டலை ராயன் தம்பிக் குரைத்த

புத்திபோற் சொல்லிப் புரியவன் பிழையைத்
தத்துவக் குருமுன் சாற்றவக் குருவும்
மன்னன்முன் பொறுதி வாங்கென வனுப்ப
பின்னவன் றுனும் பெரியவ னிடத்தில்

அண்ணலே யுமது ஆயிழை தனையான்
பண்ணினேன் கொடிய பாதக மாகும்
நான்புரி பிழையை நங்கைமேல் வைத்தேன்
ஏன்புரிந் தேனெனில் என்னைநீர் முனிவீர்

என்றுபொய் யுரைத்தே னிதுபிழை பொறுமெனக்
குன்றிணை புயத்தான் கூறிய வார்த்தை
எண்டிசைக் கண்ண லிருசெவிக் கேற
அண்டமீ ததிர அலறிவாய் விட்டு

ஐயகோ வொருசொல் லவளைமே வாமல்
செய்யுமா கடியந் தீருமோ வென்று
மனதினி லிரங்கி வருந்திநொந் தலம்ப
அனமெனும் நடையா ளன்பனைப் பார்த்து

வேந்தனே சலிக்க வேண்டிய தலவுன்
காந்தையை யின்னமுங் காணலாம் பொறுதி
கொடுமெனக் கொடுக்கக் குழைமருந் ததனுல்
வடுவுறு குட்டம் மாற்றிய பின்னர்

தன்கதை யனைத்துந் தரணிபர்க் குரைக்க
அன்பனும் மகிழ்ந்தாங் கரிவையை வினவிச்
சொல்லள வில்லாச் சோபன மாகி
வல்லவி தனைத்தன் மணித்தவி சிருத்தி

நின்னையான் செய்த நிந்தைகட் கவனி
தன்னில்மா சங்கை தருவனென் றுரைக்க
மங்கையாங் கதற்கு மன்னனே யெனக்கோர்
சங்கைமாத் திரந்நீர் தருவதே தென்னில்

தவத்திய ராகத் தாருமுத் தரவென
நவக்கனி தலைவன் நன்மன தாகி
இருவருந் தவத்தி லெய்தியே உயர்திருக்
குருவருள் பெற்றுக் குலவிவாழ்ந் ததுவும்

இந்நவப் புவியி லேசுநா யகனுர்
மன்னுரு வெடுத்த வருடமா யிரத்தொன்
றுனதில் நடந்த அற்புத மிதனை
ஈனமில் முனிவோ ரெழுதிய வண்ணம்

ஆயிரத் தெழுநூற் றதிகதொண் ணூற்றுத்
தூயவெட் டாண்டில் துலாமதி தன்னில்
இக்கதை தன்னை யாளெருரு பேதை
தக்கநா டகமெனச் சாற்றினே னிதனில்

எழுத்தொடு சொல்முத லிலக்கண மறியான்
வழுத்திய பாவின் வழுவுளம் பொறுத்துப்
பிள்ளைசொல் மழலை பெற்றவர் கேட்டு
உள்ளமே மகிழ்வ தொப்பெனப் புவியில்

ஆன்றமெய்த் தவத்தோர்க் கானவிக் கதையைச்
சான்றவர் கேட்கச் சரணிணை தொழுதேன்

கட்டியகாரன் வரவு
(கவி)

மணிதிகழ் மவுலி சூட்டும் மன்னனெண் டிறீக்கு ராயன்
அணிதிகழ் கொலுவில் வாற அலங்கிர்த மெடுத்துக் கூறப்
பணிதிகழ் வரத்தி மின்னப் பலவன்னக் கொடிநின் றுடக்
கணிதிகழ் கட்டிய காரன் களரியில் வருகின் றனே

சபைத் தரு

மின்னுமணி மாலை தொய்ய
வீரபாத சாலம் வைய
மன்ன னெண்டி றீக்குவேந்தன்
வாசற்கட்டிய காரன் வந்தான்

பட்டுநெற்றிப் பொட்டு மின்னப்
பாரில்வீர சூர னென்னத்
துட்டர்சிரம் வெட்டும் மன்னன்
சொந்த வீரன் வந்தானையா

கட்டியன் தரு

இந்நகரில்! மன்னவரே!
எண்டிறீக்கு எம்பரதோர் வாருர் — பசும்
பொன்னணிகள் திறைகொணர்ந்து
போற்றிசெய்யத் தோற்றிவரு வீரே

நேசவுப தேசிகளே!
நீதவுப தேசியிதோ வாருர் — இந்தத்
தேசமெல்லாம் புகழு மவர்
சீர்பாதங் காணவரு வீரே

ஞானகன்னி தானிகளே!
ராசகன்னி தானியிதோ வாருர் — செழும்
பூநறும்பன் னீர்வீசி
பொற்பதங்கண் டர்ச்சனைசெய் வீரே

அதிகவிதைப் புலவர்களே!
அளவில்கலைத் தலைவரிதோ வாருர் — நீங்கள்
மதுரதமி ழிசைபகர்ந்து
வாழ்த்தியடி போற்றவரு வீரே

கட்டியன் கூறல்

சீருற் றிடவளர் ஞானவி வேகதி
யானத் தினிலருள் சேரும நேகர
மேவிப் புவிமனு வோர்கள் பிதாவென — வருவாமன்
தேசத் துளநர பாலர்கள் தாள்தொழ
மேவிப் பரிகரி மாமணி யீழுமோ
டோகைத் தலையணை யேதுயில் மேவிட — உல
பாரிற் றரியலர் மாமுடி தாள்பட [காள்வோன்
மோதிப் பொருபடை யார்வன மோடிட
வேதத் துவமுட னேதவி சேறிய — மகராசன்
வாசத் துணர்செறி காவினில் வானர
மூசிப் பலவொடு மாரச வாழைக
ளேபெற் றிடுகனி யால்மது வோடிட — விளையாடும்
ரேமைப் பதிதனை யாள்மக ராசனி
ராசர்க் கிறையவ னுனந ராதிபன்
மேன்மைத் திறலது கூறிடு மாகத — னெனும்
[நானே

எம்பரதோரும் தேவியும் வரவு
(கவி)

பொன்னணி மவுலிசூடிப் புகழ்செறி ரேமை யாளும்
மன்னவ னெண்டி றீக்கு மகிபதி மனையாள் கூட
இந்நில மதனை மீழு மேகனைப் பயந்த தேவ
கன்னிகை பாதம் போற்றிக் களரியில் வருகின் றுரே

சபைத் தரு

அலைதங்கு புவியெங்கு மொருசந்திர குடையுஞ்சொந்
தரசுய்ந்த தளதந்திர — அரசன்வந் தனனே
மலைதங்கு புயமன்னர் திறைகொண்டஞ் சலிசெய்ய
மகரந்த மலர்வஞ்சி — மன்னன்வந் தனனே

பிறையென்ன நுதல்வன்னப் பெடையன்ன நடையென்னப்
பேதைகற் புறுராச — கோதைய ருடனே
விறல்துன்னும் மறுவன்னிய ரெதிர்நண்ணி விடைகொள்ள
மேவும்புக ழெண்டிறீக்கு — ராயன்வந் தனனே

குழல்கொம்பு தவில்பம்பை யதிர்தம்பு ரொலிகெம்பக்
குரகத கெசரத—படையணி வரவே
வளமிஞ்சு புகழ்ரோமை நகர்தங்கெம் பரதோரு
மனமங்கை யருமிந்தச் — சபையில்வந் தாரே

எம். கவி

வட்டவா ரலைசூழ் பூவில் மன்னனென் வாசல் காக்கும்
கட்டிய காரா கேளாய் கருத்தினில் மகிழ்ந்து சென்று
துட்டர்கள் வணங்குந் தேர்ச்சித் துணைவனென் — றறியுமிந்த
அட்டதிக் கனைத்தும் போற்றும் அமைச்சனை அழைத்தி
[டாயே

மந்திரி வரவு

குண்டல மிலங்கச் சோமன் கொய்திடை யிறுக்கிக் கட்டி
வண்டலர் மாலை பூண்டு மணிக்கவாய்ச் சட்டை யிட்டு
தண்டர ளப்பொன் மாலை தயங்கிடச் சதங்கை யார்ப்பக்
கண்டவர் துதிக்க மந்திரி களரியில் வருகின் றுனே

சபைத் தரு

சேனைத் தலைவர்க் கதிபனுன
சிறந்த ராயர்க் குகந்த மந்திரி
மானைப் பொருத கயிலைவாக
மதன ரூபன் தோற்றினுன்

சருகை வேட்டி சிமிழ்த்திச் சோமன்
தன்னை யிறுக்கிப் பொன்னி ஞழி
அரிய விரலி லிலங்கச் சபையில்
அமைச்ச னும்வந்து தோற்றினுன்.

அனந்த வுலக மனுடர் தான்வந்
தையா வென்றடி போற்றவே
மனந்த னில்வெகு சூழ்ச்சி தேரும்
வல்ல மந்திரி தோற்றினுன்.

மந்திரி கவி

அனைகன்னி மரியா ளீன்ற அற்புதன் றன்னைப் போற்றி
கனதனம் பெருகி வாழும் காசினி மன்னர் கோவே
மனுமுறை வழுவா ராச மகிபனே வந்தே னுந்தன்
தனதுவம் புயம்பூம் பாத சரணமே சரண மையா

எம். கவி

அலங்கல்சேர் மார்ப னேகேள் அம்புவி யனைத்து முள்ள
இலங்குபொன் முடிமன் யாரும் எனக்கிறை யளியா ருண்டோ
நலம்பெறு சத்திய வேதம் நாரியர் கற்பு நீதி
நிலந்தனில் வழங்கா துண்டோ சாற்றுநா னறியத் தானே

மந். கவி

சாற்றுபதி னெண்புவிக்கும் தம்பமெனப்
புரக்குமன்னர் தம்பிரானே
ஏற்றமுள்ள செங்கோல்நீ ரெடுத்தவன்றே
இறைவர்பகை யில்லைக்கண்டாய்
தோற்றியமெய் வேதநெறி தோகையர்கள்
கற்புமதி தொறுமும்மாரி
தேற்றமுறப் பொழிந்துமிகச் செந்நெல்விளைந்
துலகனைத்துஞ் செழிக்குதையா.

எம்பரதோரும் தேவியுந் தரு

எம்: செந்திரு வண்ணச் செழுங்கரு மைவிழி மானே—நானும்
சிந்தையி லேயோ ருகந்த நினைவுகொண் டேனே

தேவி: சந்தன மார்ப தயாகுண னெவென் வல்லவா—நீருஞ்
சாற்றுகி லென்மனந் தேற்றமாக வேதுஞ் சொல்லுவாம்

எம்: பால்நதி சூழ்செரு சேல்நக ரானதில் ஏகியே — தேவன்
பாடுபட்ட தலம் பார்த்துவரக்கருத் தாகினேன்

தேவி: மாலெழு பாணியில் மேல்தொடு மாமுடி வேந்தே — நீர்
வழுத்துரை கேட்டென் னுளத்தில் மிகக்களி கூர்ந்தேன்

எம்: தேவ னிறந்த சிலம்புந் தெருக்களுங் கண்டே - மற்றுந்
தேசமுஞ் சுற்றித் திரும்ப நினைவுளங் கொண்டேன்

தேவி: பூவணி சூடிய கோமணி யாகிய கோவே - இந்தப்
புன்சொ லடியாட்கு நின்பணி யுண்டெனி லேவே

எம்: செருசலை சென்று தெரிசித்து யானிங்கே மீளும் - மட்டும்
சிங்கனை தன்னி லிருந்து வரசினை யாளும்

தேவி: வருசிலை கொண்ட வயக்கர னெவென் பதியே - இந்த
வையகங் காக்குமோ தையலர் தங்கள்பெண் மதியே

எம்: எட்டுத் திசையி லிறைவர் திறைதரும் பொன்னை-வாங்கி
ஏழைகள் நீதியெவ் வேளையுங் கேட்டிரு மின்னே

தேவி: மட்டுத் ததும்பு மலர்க்கர னேயுயர் பின்னை - கூட்டி
வந்து பரித்திடு மிந்த வரசினைத் தானே

எம். கவி

மட்டுலா வணியல் சூடும் மந்திரித் தலைவா வெந்தன்
பட்டண மெல்லாஞ் சுற்றிப் பார்த்திடச் சிந்தை யானேன்
அட்டதிக் கறிய வெந்தன் அரசது தவரு வண்ணம்
சட்டமோ டாள்வ தற்கென் தம்பியை அழைத்தி டாயே.

தம்பி வரவு
கவி

கங்கைசூழ் புவனங் காக்கும் காவல னெண்டி நீக்குப்
பங்கயக் கழல்கை கூப்பிப் பகர்ந்தசொற் படிக்கிப் போது
தங்கமா மவுலி ராயன் தம்பிநல் லழகு லாவும்
இங்கித புயவொய் யார னியற்சபை வருகின் றனே.

சபைத் தரு

பொன்னின் முடிபுனைந்து — நல்ரேமை
புரந்தரு ளெம்பரதோர்
தன்னுள்ள நேசமிகுஞ் — செல்வந்திகழ்
தம்பியும் வந்தனனே.

முண்டக வாவிவளை — மிகுரேமை
முதிய நகர்புரக்கும்
எண்டிறீக் கண்ணனுள்ளம் — மகிழ
இளையகோ வந்தனனே.

காலி லிடும்வீர — சதங்கை
கலகலென் றேயொலிக்க
வால மதனரூபன் — சபையில்
மகிழ்வொடு தோற்றினனே.

தம்பி கலித்துறை

நந்தார் கடல்வளை யுந்தேசு ரேமை நகரிறைவா
சிந்தா மணியென வந்தவ னேயெங்கள் தேவரிர்நின்
செந்தா மரையனை யுந்தா ளெனதுயர் சென்னிகொண்டேன்
உந்தா பரநினை வென்தா னதைநமக் கோதுவையே

எம்பரதோர் கலித்துறை.

என்நேச மென்றும் பிரியா திருக்கு மெழில்மருவும்
பின்னே யுயிர்த்துணை வாவொன்று பேசப் பிரசவண்டு
சின்னுைசை பாடுஞ் செருசேல் நகரைத் தெரிசித்திட
நன்னேச மாகினேன் இந்நாட் டரசை நடத்துவையே

தம்பி கலிப்பா.

பார்த்தி வாவென தண்ணநின் சொற்கெதிர்
பகர நாவுள தோசொலக் கேட்பதுன்
கோத்தி ராவினை யோன்றன தாகையாற்
கூறு நன்மொழி மீறிந டக்கிலேன்
ஆத்த ராட்சிய பாரமண் ணிக்கிடும்
அவள்மொ ழிப்படி யாவுமே செய்குவேன்
போற்று காவளஞ் சூழ்செரு சேலெனும்
புகழ்ந கர்க்குநீர் போய்வரு மட்டுமே.

எம்பரதோர்

வெண்பா

மட்டணிய லிட்ட மணமாதே மணிப்பிரபை
தொட்டகிரீ டஞ்சிரசிற் சூட்டினேன் — அட்டதிசை
மாற்றலர்க ளஞ்ச வயமா வரியணையில்
ஏற்றரசு செய்திங் கிரு

எம்பரதோர்

கவி

மைக்கரு விழியே யுந்தன் மதலைபோ லெனது நேச
மிக்கதம் பியையுன் கண்ணில் விழியென விருத்திக் கொள்வாய்
தக்கவென் துணைவ னேயுன் தாயிவள் மொழிதட் டாதென்
திக்கனைத் தினுக்குஞ் செங்கோல் செலுத்தியிங் கிருநாம்
[செல்வோம்

எம்பரதோரும் மந்திரியும்

கொச்சகத்தரு

எம். கொச்சகம்:

தாட்டா மரையணையிற் சங்கின்முத்தை அண்டமெனச்
சூட்டோ திமங்கள்வைத்துத் துயிலும் மடுவளமும்
காட்டுமென வேகலைகள் கற்றமதி மந்திரனே — டிந்த

எம். தரு:

நாட்டினில் வளமையெல்லாம் — நாம்கண்டு
நல்மன துடனேதான்
தேட்டம தாய்ப்பார்த்துச் — செருசேல்நகரஞ்
தெரிசித்து வருவோமே — வெகு

எம். கொச்சகம்:

ஆதி மனித னதங்கனியை யுண்டபொல்லாத்
தீதுவினை அகலத் தெய்வீக தேவதிருச்
சோதி யடரிருளிற் துளிமழையில் வந்துதித்த — அந்த

எம். தரு: வீதியும் வெல்லைமலையும் - ஏகாந்தமணி
மேடையு மிதுதானோ - மலர்ப்

மந். தரு: போதுடைந் தரியுறையுந் - தேவன் பிறந்த
புல்லணை யிதுபாரீர்.

எம். கொச்சகம்:

முத்தின் குடைநிழற்ற மூவேந்தர் தாள்துதிக்க
அத்த மிறைதூபம் அருள்சேர் திறையாக
வைத்துச் சரண்போற்ற வானவர்கள் வாழ்த்திசைக்க - வரு

எம். தரு: பெத்தலைப் பதித்தானுங் கோபாலர் தங்கள்
வீடுகள்தானு மிதுவோ - விடைக்

மந். தரு: கர்த்தபம் புலிசீயம் - வந்தே துதித்த
காரணத் தலமிதுபார்

எம். கொச்:

முத்தர்க் கதிதவத்தன் முன்னேகி யின்னமும் நீ
சித்தமகிழ்த் துன்வலையைத் திரும்பவலை யென்றதுவுஞ்
சத்த சமுத்திரமுந் தாங்காத ஆறுகளும் - ஒரு

எம். தரு: நத்தைக்கூட் டாலள்ளிக் - குழியி லிட்ட
நகரமு மிதுதானோ - அங்கு

மந். தரு: நித்தியந் தான்பாயும் - பாலாறிது
நெய்யா றதுபாரீர்

எம். கொச்:

பாடுபட வேதுவக்கம் பண்ணிப்பி தாப்பரன்றன்
தாள்துதிக்க வேயுதிரச் சாகரவெள் ளம்பெருகத்
தேடியேவா னோர்கள்வந்து தேற்றரவு செய்யவன்று - அவர்

எம். தரு: சீடர்தன் னுடனிருந்த - சேசேமினிய
திருவன மிதுதானோ - பிரபை

மந். தரு: நீடுவிற் சுருவெடுத்த - தபோரு வென்னும்
நீண்மலை யிதுபாரீர்

எம். கொச்:

வையகத்தி லேவைதின்ற வன்கனியின் துன்பமற
ஐயர்தமைப் பிடித்து ஆக்கினைசெய் தேயறைய
வெய்யகொ டுஞ்சூதர் வெகுபெலமாய் மூட்டிநின்ற - அந்தச்

எம். தரு: செய்யபொற் சிலுவைமரம் - வந்தே யடைந்த
சேதுரு நதியிதுவோ - அவரைப்

மந். தரு: பையவே தோய்த்தடித்துக் - கோட்டாலே செய்த
பாலமு மிதுபாரீர்

எம். கொச்
வல்லநருச் சிலுவை வன்புயத்தி லேசுமத்தி
நில்லாதே யென்று நெருக்கி யடித்துமுள்ளின்
உல்லாச மாய்முடியும் உச்சிதனி லேபொருத்தி - நடத்துங்

எம். தரு: கல்வாரி மலைத்தெருவும் - அதனிற் படிந்த
காயமு மிதுதானோ - என்றுஞ்

மந். தரு: சொன்னால் முகியாத - நவங்கள் கண்டு
துரையே மகிழ்வீரே

எம்பரதோர் கலிப்பா

அஞ்சந் துஞ்சு தடாகமும் கானமும்
ஆறு மேருவு மம்பல முங்கண்டேன்
நெஞ்சஞ் செஞ்சுடர் கண்டிதழ் விண்டுதேன்
நிரம்பு தாமரை நேரா மமைச்சனே
பஞ்சொண் டஞ்சிய பாதாம் புயத்தினை
பாவை யேவை பருகும் பழப்பவ,
வஞ்சங் கெஞ்ச வதைத்திடு மாயுத
வகையி ருக்கு மனைபுக வாருமே.

எம்பரதோரும் மந்திரியும் அகவல் தரு

எம். அக:
பையுறை நாகப் பொய்யுரை கேட்டுப்
பருகிய கனியால் வருபிழை நீங்க
வையக மாந்த ருய்திட வெல்லை
வரையினி லுதித்த விரைமலர்ப் பதத்தான் - அங்கந்

தரு: தொய்திட வேசுமந்து - கல்வாரி வெற்பிற்
சோரர்கள் நடுவேதான் - நட்டு
வைத்திட வேயிருந்த - மிக்காஞ் சிலுவை
மரமுமிங் கிதுதானோ

மந். அக: பாணிகால் துளைத்த ஆணியாம் மீது
பரமகர்த் தாவின் புரமதைத் தாவிப்
பேணியே யிறக்கும் ஏணியாம் மீது
பெருகிய சிரத்தி லுருவுமுள் முடியாம் — இந்த

தரு: நீணிலத் தினில்யூதர் — பரிகாசமாக
நீளுசெங் கலசமிட்டு — உயர்
வேணியம் பரன்கரத்திற் — செங்கோல் தரித்த
மிகுபசுங் கழையிதுவே

எம். அக:
தீட்டிய வாழுந் தேவன் திருநிலாத் துளைத்த வேலுந்
திருப்பதந் தன்னிலாணி செலுத்துசுத் தியலும் வாரும்
பூட்டிய கயிறு முள்ளுப் புடுங்கிய குறடும் வன்மம்
பொருந்திய புலையன்கன்னம் வருந்திட வடித்தசோடும் - அங்கு

தரு: நாட்டிய கற்றூணும் — எங்கோ விருந்த
நாற்காலி யுடனேதான்
சாட்டையுஞ் சமுதாடும் — வலுவா யடித்த
சம்மட்டி தானுமிதுவோ

மந். அக:
பிடித்திழுத் துதைத்து மேனி தடித்திட அடித்த பாரப்
பிரம்பொடு கசையுங் கோபம் நிரம்பிய யூதர் கூடி
நடித்திசை படித்துக் கல்லில் நாட்டிய சிலுவை தன்னை
நகைத்தெழு பகைத்து ரோகர் நாவினிற் றுகம் மாற்ற - அங்கு

தரு: வடித்திடுஞ் சிலுக்காவும் — பித்தோடு நல்ல
மதுவையுங் கலந்தேதான் — சற்றே
குடித்திடு மென்றுஎங்கோன் — தன்வாயிலெட்டிக்
கொடுத்திடுங் கோலிதுபார்.

எம். அக:
சர்த்தனைப் போர்த்த தூசுங் கல்லறை தூம்பை தானும்
காரண வதன ரூபங் கன்னியர்க் கீந்த பட்டும்
சத்திய மாகக் கண்டேன் தையலில் லாத தூசம்
தக்கவே ரோதை யீந்த சட்டையும் பிலாத்து மந்திரி - மெத்தப்

எம் தரு : பத்தியோ டேபோர்த்த — காழகமும்
பாதகர் நேத்திரத்திற்
சுற்றிய பட்டுமெங்கே — யானறியச்
சொல்லுமென் மதிவலனே.

மந்.அக :

செய்யபூமக ளுலாவும் செழும்புயத் தவிது ராயன்
திருமர பதனி லேதான் வருகணி மகனுக் கீந்த
தையலில் லாத பட்டைத் தரியலர் பிரித்துக் கொண்டார்
தக்கவ னீந்த தூசும் தந்திர னீந்த தூசும்—யூதர்

தரு : வையகந் தனிலீந்த—தூசு மெங்கே
வைத்ததென் றறியேனே—தவத்
துய்யர்தன் னிடமேகிக் — கேட்டறிவோம்
துரையே வருவீரே.

சேனுபதி தோற்றம்
கவி

வளமலி செருச லேய மாநகர் தன்னை யாளும்
தளமலி சேசார் மன்னன் தான்முந்நா ளமைத்த வண்ணம்
பழமலி துடவை சூழும் பண்புறு செருசேல் காக்கும்
களமலி வெம்போர்க் காவல் கப்பித்தான் தோற்றி னனே.

சபைத் தரு

செந்நெல் வளமலியுஞ் — செருசலேச்
சீர்மை தனைக்காக்கும்
மன்ன னுளமகிழும் — சேனுபதி
வாழ்சபை வந்தனனே

செங்கையில் வைவேலும் — இடையிற்
சிறந்த வுடைவாளும்
தங்குவிறல் வீரன் — பதாதித்
தலைனுவந் தோற்றினனே

மேவலர் யாவரையுஞ் — சிங்கேறெ
வெற்றி புரிந்திடுவோன்
காவல் புரிந்துநிற்கும் — கப்பித்தான்
களரியிற் தோற்றினனே

கப்பித்தான் கவி

பொருதிரை சூழுமிந்தப் புகழ்செரு சலேநன் னாட்டில்
ஒருவரு மெனைமே வாமல் லுற்றதிங் கில்லை நீரார்
மருவலர்போலக் கண்டேன் வந்ததேன் சுறுக்கிற் சொல்லும்
இருவரும் வலிமை பேசில் எனதுவாட் கிரைசெய் வேனே.

மந்திரி கவி

இரைசெய்வே னென்று மெத்த எதிர்த்துநின் றுரைத்தா யாகட்
டுரைசெய்யுன் னூர்பேர் பின்னை யோதுவோ மெமது நாமம்
அரசைநீ மதித்தி லாய்கோ லறிந்திலாய் புலியைப் புன்மான்
தரைதனில் வெல்வே னென்ற தன்மையாச் சுன்சொல் தானே.

சேனுபதியும் மந்திரியுந் தரு

சேனு : மதியா தகந்தை பண்ணி — யிங்கு
வந்ததல் லாமல் மறுபடியும்
பதிமேல்நான் ஏழை என்றீர் — உங்கள்
பாரமும் வீரமும் பார்த்திடட்டோ

மந். போராட வேண்டிய தேன் — இந்தப்
பூவிற் பொறுதி பெரிதல்லவோ
ஆரார்நீர் சொல்லு முன்னே — பிற
காகட்டும் போர்செய்ய நாளில்லையோ?

சேனு : பாரோரெல் லாம் புகழும் — ரோமைப்
பார்த்திவன் சேசாரந் நாளிலெங்கள்
பேரன்பி தாப் பூட்டன் — நாளிற்
பெற்றது தானிந்தக் கத்தவியம்.

மந் : பெற்றேமென் றேபு கன்றாய் — உந்தன்
பேரென்ன ஊருத்தி யோகமென்ன
சற்றே மொழிந்திடுவாய் — பின்னே
தானெங்க ளூர்பெயர் கூறிடுவோம்.

சேனு : கற்றவென் னூரிது தான் — காவற்
கப்பித்தா னெனெனக் கொப்பித்திடப்
பற்றுரிவ் வூரில் வரா — மற்
பராபரிக் குந்துரை நானல்லவோ,

மந் : ஆனுற்கப் பித்தானே — நீயு
மாருக் கடங்கிய பேராகத்
தானே யிருப்பது சொல் — உன்
றனக்குப் பெரியத ராபதி யார்.

சேனு : ஏன்நீ யது கேட்டாய் — ரேமை
எம்பர தோரெண்டி நீக்குவல்லால்
மானேர்தம் மிற்பெரிய — மறு
மன்னவ னென்றனக் கில்லைமெய்தான்.

மந் : மெய்யென் றுரைத்தாயே — அந்த
வேந்தனி தோவந்து நிற்பதுபார்
ஐயப்ப டாது ரைத்தாய் — அந்த
அண்ணலை யர்ச்சனை செய்வாயே.

சேனு. கவி

மன்னவர் மன்னு போற்றி மாதவ முடையாய் போற்றி
பொன்னணி புயனே போற்றி புகழுளாய் போற்றி போற்றி
நின்னைநா னறியா வண்ணம் நிகழ்த்துசொற் குற்றந் தன்னை
உன்னுளம் பொறுத்தெப் போதும் உதவிசெய் தருளு வீரே

எம் கவி

உதவிசெய் திடுமென் ரேதும் உகப்புறு கப்பித் தானே
இதமுறு மாதி நாத னிரக்கமுன் றனக்குண் டாகப்
பதியில்நீ யறியா வண்ணம் பகர்ந்திடிற் பிழையொன் றில்லை
நிதமும்நீ முன்போ லிந்த நிலம்புரந் திடுகு வாயே.

சேனுபதி தரு

பொன்னின்மகு டம்புனையும் — எங்கள்
புரவலர்கள் புரவலனே
இந்நகரில் தேவரீர்நீர் — வந்த
தென்னுடைய பாக்கியந்தான்.

ஆனைபரி தேர்கனகம் — திறை
யாகவைத்துப் பூபதிகள்
சேனைதொழும் பாதபத்மம் — வருந்
திடநடந்து வந்ததென்ன

நீதிதரு பூபதிநீர் — வரும்
நிருபமொன்று வருமேயென்ருல்
மேதினியெல் லாஞ்சோடித்து — நானும்
வெகுமதிகள் புரியேனே

நாடுமக்கே அரசிருக்க — நின்முன்
நால்வகைத்தா னையுமிருக்க
நீடியகான் வழிநடந்து — இங்கு
நீர்வரவுங் காரியமேன்

நீர்வருதல் நானறிந்தால் — இங்கு
நின்றுரேமை என்றவுந்தன்
ஊரளவு மாமலராற் — செம்பொன்
னேடுபந்தற் போடேனே

ஆசனுகா மன்னவனே — எந்தன்
அரண்மனையில் வந்திருந்து
போசனமுண் டாறிக்கொண்டு — பின்பு
போகலாம்நீர் வாருமையா

தேவி கவி.

கம்பொலித் திடுகல் லோலக் கடல்வளை புவனங் காக்கும்
எம்பர தோரென் காந்தற் கிளையதம் பியரே கேளீர்
நம்பதி தன்னில் நீதி ஞாயங்கள் செலுத்திப் பொல்லா
வம்பர்க ளணுகா திந்த மதில்தனைக் காத்தி டாயே

தேவி தரு

அருணப் பிரபைதிக ழுறுவைப் புரமணிந்
தாறிரு உடுமுடி சூடியே
அழகு பெறவளர் நிலவு பதமிதித்
தன்னம்மாள் சுதை யென்னவே
தருண மதிலெமர் மிடிமை தவிர்திவ்ய
சருவ பரராச கன்னியே
தம்ப மெனவும்மை நம்பினே னருள்
செம்பொ னெழுபத அம்புயமே

சுரும்பு துதைந்துகள் அருந்து தாமரைச்
சுனைகு லாவிய மறுகெலாந்
துரந்து கண்டிடப் பரிந்து சென்றவென்
துணைவன் றனக்குநின் துணைசெய்யே
கரும்பு நேர்மொழிக் கனியர் கோமணிக்
கவின்மன் றவிதுப் பரிகையே
கனல்கொள் பாதவப் புனல்வா டாநின்ற
கானமே விடி மீனமே

பிடவை யணிந்திடத் திடமில் லாச்சிறு
பிஞ்சிலே வய தஞ்சிலே
பிணையல் சூடிய கணவன்சு கசெல்வம்
பெருகவே யருள் தருகவே
துடவை புனைவெல்லை யிடையர் குடில்தனிற்
சோதி போல்வரு தீதில்லாச்
சுதன்முன் னிரந்தெங்க ளதர்ம விடர்கலி
துரத்தியே திவ்ய விரத்தியே

எனது காதலன் வருமட் டாகவிங்
கிணையில் லாதசிங் கணையிலே
இருந்தே யரசினைப் புரிந்து புவிதிசை
எங்குமே புகழ் பொங்கவே
கனக முடிபுனை யிறைவர் கிளைவரு
காரணி பரி பூரணி
கற்புக்க டைக்கலம் அற்ப வடிமையைக்
காருமே யருள் கூருமே.

சபை கவி

செருசலேப் பார்க்கச் சென்ற செகபதிக் கிளையோன் என்னும்
வரிசிலைக் கரத்தான் முன்னேன் மனைவிமேல் மைய லாகிப்
பெருநெறி முறைமை நீதி பேருற வுரிமை யெண்ணுன்
உருவிலி கணையால் வாடி உளங்கரைந் தலம்பி னுனே.

தம்பி தரு

கிரணப் பூரணச் சந்திர வதனப் பிரிபுராச
மங்கையே செம்பொற்
கிரியைப் பொருமொய்ம் பிந்திர னுரிமைக் கிவளுமொரு
தங்கையே
அருணத் துளிர்கொண் டெங்கும் இருள்மொய்த் தெனவே [தொங்கும்
கேசமே இசை
வரிவண் டுகளுண் டங்கு சொரிகள் ளணியல்பொங்கும்
வாசமே

வளர்தண் மதியின் மிக்க அழகு திகழ்திலக
நெற்றியே பீரு
வரிவில் லதனுக் கொத்த சரியென் றிடுகில் மெத்த
வெற்றியே
எழுவண் டயில்வாள் கரு விளைதண் கமலம்இரு
நாட்டமே காதுக்
கிதழ்வள் ளையின்றன் கொடி விதமங் கையர்தன்னுஞ்ச
லாட்டமே

கூம்பல் மலர்மென் நாசி ஆம்பல் தனைநிகர்த்த
வாயதே இதழ்
கோவைக் கனிமுருக்கம் பூவை நிகர்க்கு மெழி
லாயதே
தேம்பூ நறைகொள் முல்லைக் காம்பு முகையின்முத்து
மூரலே சொல்லுச்
சீனி யமுது வெல்லந் தேனில் மருவலென்னச்
சேரலே

வளையுங் கமுகுங் கண்டங் கழையி னழகுதிகழ்
தோளே கஞ்சம்
வாய்ந்த மலரி னங்கை யாய்ந்து பகரின்முன்கை
யாழே
தழையுந் துகிர்கெ ளிற்றுக் கிளையும் விரல்கிளியின்
வத்திரமே உகிர்
தாளம் வேழஞ் சக்கர வாளம் போலக்கொம்மைச்
சித்திரமே

சூகை யெறும்பின் ரோம ரேகை யுதரமால
மிலேயே கொப்பூழ்
சோரு நீரிற் சுழி நேரும் வேறுசொல்லல்
வல்லேயே
ஓகைத் துடி கொடிக்கொப் பாக வசையுந்நடு
விடமே பொற்புற்
றாருந் தேருஞ் சிந்தும் சேருஞ் சிலேயுங்கடி
தடமே

குறங்கு வாழைத் தண்டு பிறங்கும் மதகரியின்
பாணியே சங்கங்
குறுவ ராலெக் காள மிறுக லானஅம்புத்
தூணியே
சிறந்த பரடு நாளிக் குரும்பை தராசுசானு
ஞெண்டே குதி
சேரும் பரி புறங்கால் கூரும்புத் தகமிணை
யுண்டே

பிண்டித் தளிர்வா ரிச மின்றப் பதவடிவை
நேருமே காலிற்
பேந்து விர லுகிர்க்குத் தேய்ந்த மதியினிணை
சாருமே
துண்டு நாவின் மெல்லிய கண்டி டாதவுள்ளங்
காலே கொக்குத்
துளிரும் மிளிரும் மஞ்சள் தளிரு மெழிலு மவள்
மேலே.

சின்ன மயில்க ளந்தக் கன்னி சாயல்தனக்
கஞ்சுமே கண்ட
செல்லத் தெகினம் நடை சொல்லித் தாருமென்று
கெஞ்சுமே
என்ன விதமு மந்தக் கன்னி தனையென்வசத்
திணக்குவேன் அந்த
ஏந்தல் வருமுன் னவர் காந்தை தனையென்சொல்லில்
வணக்குவேன்.

பேய்கள் வரவு

கவி

வின்மதன் கணையால் வாடி வீழ்ந்தன னரசன் பின்னேன்
துன்னழற் குழியில் வாழும் சோருகள் மனதி லோர்ந்து
அன்னவன் றன்னை யெற்றி அவள்நெறி கெடுப்போ மென்று
புன்மதங் கொண்டு புத்தி புகன்றிடத் தோற்றிற் ருமால்

பேய்கள் தரு

மந்திர நேர்புய மன்ன - இங்கே
வாடி யிருப்பது என்னே
எங்களுக் குச்சற்றே சொன்னல் - நொடி
எட்டில் முடிப்போமே முன்னல்

சுந்தர மேவிய தோளே - நாங்கள்
சொல்லிடு புத்தியைக் கேளே
சிந்துர வேல்விழி யாளை - நீயும்
சேர விதுநல்ல வேளை

என்னடா நீயுமோ வாலை - உனக்
கென்றும் பழுக்குமோ பாலை
மின்னுடை கேள்வன்வந் தாலே - யிரு
வெட்கின நாய்தன்னைப் போலே

எண்ணிய புத்திபா ராதை – யுனக்
கென்னடா குத்தியா வாதை
நண்ணிநீ யெங்களை யோது - திட்டம்
நாளை யிணங்குவாள் கோதை

கன்னியு மோமாயக் கொத்தி - கலந்
திட்டவ ளைநீயு மெத்தி
உன்னி நினைத்தது புத்தி - யுட
னேபெறு வாய்மோட்ச முத்தி.

தம்பி கவி

திடமிக தோழ மார்நீர் செப்பிய மொழிக ளெல்லாம்
வடிவென மனதுட் கொண்டேன்மடந்தையர் தன்னை நானும்
அடிபிடி யாகா வாறு மணைகுவே னவள் மறுத்தால்
நொடியினிற் சாடை சொல்லி நுவல்சிரங் களைவிப் பேனே.

பேய்கள் கவி

சததள கமல பாதத் தையலர் தன்னை நீயு
மெதுவித மெனிலும் பாவத் திணக்குவாய் இணங்கு தற்கு
உதவியும் புரிவோ மெங்கட் குகந்தவ னுனக்கு நல்ல
பதவியுந் தருவோஞ் சற்றும் பயப்பட வேண்டாந் தோழே.

கன்னி இன்னிசை

சின்னவிடை மின்னே திருவேசெந் தேன்மொழியே - எங்கள்
மன்னவன்றன் தம்பிமுகம் வாடியிருப்ப தென்ன - அவர்
தன்னிடம்நாம் சென்றெதுவும் சாற்றுமொழி யறிந்து
பின்னே வருவோம் பிறகே வருவீரே.

கன்னி - தோழி கொச்சகத் தரு

கன். கொச்:

மூடுங்கருமை மழைமுகிலை
 மொழிதுன் றறலைக் களாக்கினியை
நீடுங்கமுகை யிரசனியை
 நீலக் கல்லைப் பாசிதன்னைத்
தேடுங் கொன்றைக் கனிக்குயிலைச்
 செயித்து முருகு மனக்கவரி - யிசை

தரு: பாடி மதுவருந்தும் - பசுமலர்க்
 காவின் நிகர் குழலே
நாடு புரக்கு மன்னன் - பின்னோன்முகம்
 வாடி யிருப்ப தென்ன

தோழி. கொச்:

மாவின் பிஞ்சை வரிவண்டை
 மருவுங் கயலை மறலிதன்னைப்
பூவின் குவளை தனைக்கமலப்
 போதைச் செங்கைப் பொருவேலைக்
காவின் கலையைக் கருங்கடலைக்
 கழித்துப் புருவச் சிலைக்கிசையும் - நல்ல

தரு: ஏவை நிகர் விழியே - மன்னன்றயை
 மேவிய தம்பி யர்க்கு
தாவு மனத்தி லேதோ - விகாரமுண்
 டாகு தடி மானே

கன்னி. கொச்:

மன்னன் செருசேற் கேகியின்னம்
 வராத சலிப்போ மகிழவவர்
தன்னைக் கூட்டிச் செல்லாத
 தாழ்வோ வியாதி தானுளதோ
பன்னும் பகைஞ ரெதுமடிப்புப்
 பண்ண வுபாயம் நண்ணியதோ - ஏதுஞ்

தரு: சொன்ன பிழை யுளதோ - அவர்மனதி
 லென்ன விகார மெடி
அன்ன நடைக் கனியே - அறிந்திட
 இன்ன முரைத் திடடி.

தோழி. கொச்:

வைத்த வொருவர் மனநினைவை
 மற்றுங் கொருவர் கண்டறியப்
பெற்ற துளதோ வென்நேசப்
 பெண்ணே வீணிற் பேச்சுரைத்தீர்
சொற்றி லிவன்மன் னனைப்போலச்
 சுபாவி யென்றெண் ணுதேயும்நீர் - இப்போ

தரு: எற்றுந் தெற்றுங் கெடும்பும் - பொய்யும்மிகக்
கற்றுக் கொண்டு தானே
முற்றும் பழுதா னுன் - ஃதென்மனது
துற்றுக் கண்டேன் மானே

கன்னி இன்னிசை

கந்தமலர்ச் செந்தேனின் கண்ணியிட்டுக் கைப்பிடித்த
எந்தனது காந்தற் கிளைய மகபதியே
உந்த னுடல்மெலிந்தீர் உளத்திற் கவலைகளோ
வந்த வியாதிதன்னை வழுத்துவீ ரெங்களுக்கே.

தம்பி கலித்துறை

இந்திர கோப விதழே குயிலி னிசைபழுகுஞ்
சந்திர வாண்முகத் தையல ரேதுன்பஞ் சாற்றுதற்கு
அந்தர மாய்நின் றசையுந் துடியிடை யாயிழையை
மந்திர மிதி லகற்றிவந் தாற்பின் வழுந்துவனே.

கன்னி இன்னிசை

முகிழ்விழும் பூவின் முரண்டாளிகள் கூவாக
இருளையரே நீர்தாமும் எண்ணமற வேநீங்கி
அகழ்வளையு மெங்கள் அரணில் நடந்துசெல்வீர்
மகிழ்வுடன்நான் நின்று வகையறிந்து வாறேனே.

கன்னியுந் தம்பியுந் தரு

கன்:
வன்னமணிப் பொன்னின்முடி மன்னவன்றன் பின்னவனே
கேளீர் எந்தன்
வழிநீயுன் எழில்தாய்நான் ஒளியாமற் தெளிவாய்நீ
சொல்வாய்?

தம்:
சின்னமயி லன்னநடைச் சேயிழையே ஐயமற
நானும் இன்று
செப்புவதற் கொப்பிதம்நீர் செம்பிடிலோ இப்போதுரைப்
பேனே.

கன்:
வையகத்திற் செய்ததவ மதலையினு மதிகமினி
நீயே என்ன
வழுத்துகிலும் அளித்திடுவேன் மனத்தினில்நீர் நினைத்த
தென்ன மன்று?

தம்:
துய்யமுது பெய்யவரி துதைந்ததொடை புதைந்தகுழல்
மாதே உன்மேல்
தோற்றுமைய லாற்றமற் சுணங்குகின்றேன் இணங்கவகை
சொல்லும்:

கன்:
வைத்தபத்துக் கற்பனையின் மறையையும்நன் முறையையுந்நீ
மறந்தே எங்கள்
வானவனுக் கேராத வாசகம்நீ பேசலென்ன
மடையா

தம்:
சித்தம்மிகப் பத்தியென்று திட்டிதன்னுல் மருட்டாதே
பெண்ணே சீராய்
செப்புமெனக் கொப்பிதமாய் தேன்மொழியே மான்விழியே
திருவே

கன்:
ஈன்றவளும் சான்றவர்தாய் ஏந்தல்மகிழ் காந்தைமுன்னேன்
மனையும் குருவி
னில்லவளும் வல்லவிதாய் இவ்வனைவர் ஔவையரென்
றிலையோ?

தம்:
கான்றறலைப் போன்றகுழல் கன்னியரே யென்னிடத்தில்
நீர்தான் பழைய
காதைகளை யோதாமற் காரியத்தை நேரிற்சொல்
காணும்,

கன்:
ஏழ்வயது தாள்தொடங்கி இதுவரையும் எதுகுறையாய்
வளர்த்தேன் இச்சொல்
ஏராதே பாராய்நீ இறையோர்க்கு முறையோவென்
பிறவி?

தம்:
வாள்விழியே கேளுமினி மதியாயுன் முதியோர்கள்
முன்னுள் மையல்
மருள்தீர்த்தால் அருளென்று வழுத்தியசொல் உளத்தறிகி
லீரோ.

கன்:
விண்ணவனை யென்னுமல் விலங்கினம்போற் கலங்குகின்ற
வேந்தே எங்கள்
வேதன்முன்நாள் மோசேசுக்கு விரித்தமொழி கருத்திலறி
யீரோ?

தம்:
தண்ணவன்போல் வண்ணமுகத் தையலரே யையமில்லை
யினிநான் உம்மைத்
தப்பவிடேன் செப்பமுடன் சாற்றும்நல்ல மாற்றமினித்
தானே.

கன்னி இன்னிசை

மன்னர்க் கிளையோன் மனத்திற் பிசாசுருக்கொண்
டென்னைத்துரந்தனன்யான் என்னசெய்வேன் பெண்பேதை
முன்னந் தருவெரிய முகைமலர்வா டாமல்நின்ற
கன்னிமரித் தாயேயென் கற்புக் கடைக்கலமே

தோழி கவி.

அடைக்கல மெனவே சொல்லி அஞ்சிநின் றிரங்கி நொந்தாய்
படைச்செய லரசன் தம்பி பாரினி லெதுசொன் னுனே
நடைக்கனம் நிகர்த்த மாதே நாட்டம்மா னனையே நீர்நம்
மிடத்தினி லொளித்தி டாமல் இன்னதென் றியம்பு வீரே

கன்னியுந் தோழியுந் தரு.

கன்: தேனுரரி நிண்டிசை கொண்ட
சிகழிகை மானுரே - எங்கள்
பானுர்முடி மன்னவன் தம்பிசொல்
பண்பறிவாய் தோழி

தோழி: மானுர்விழி வஞ்சியே ராச
மடந்தையரே கேளீர் - எங்கள்
கூனுர்சிலை கொண்ட கரனென்ன
கூறுகின்றுர் மானே.

கன்: அய்யோ வவன் தன்னுளமீதில்
அலகை குடியேறி - யென்னை
சையோக விதம்புரி வோமென்று
சாற்றினனே தோழி

தோழி: வெய்யோனை யுடுத்திடுங் கன்னிகை
வெல்லைம லைச்சார்பில் - வரு
துய்யோனுமர் கற்பவ மின்றித்
துணைச்செய்கு வார்மானே.

கன்: புன்பாவக் கணங்கள் வலையிற்
புகுந்தவ னென்னையுந்தான் - மெத்த
வன்பாக வருத்துவ னென்ன
வகைசொல்லு வேன்தோழி.

தோழி: அன்பான மொழிபகர்ந் தேயவன்
ஆகத்துயர் மாற்றிப் - பின்பு
உன்கேள்வன் வருமளவு மோர்
உபாயம் புரிமானே

கன்: செந்தாமரை யாசன மேவுந்
திருவே யனையாரே - அந்த
மந்தாரப் புயனை யணுப்ப
வகைசொல் லடிதோழி

தோழி கொந்தார்குழ லேயவன் தன்னையுன்
கோட்டைப் புறத்தியிலே - ஒரு
நந்தாமணி மண்டபங் கட்ட
நவின்றுடு வாய்மானே.

கன்: செகமீதென் னிருவிழி யாகிய
சேயிழையே கேளீர் - அந்த
அகமானது கட்டிய பின்னென்
னறைவே னடிதோழி

தோழி: மகிழ்வாக இருமதில் யானங்கே
வாறேனென் றேயோதிச் - சென்று
நகர்வாச லடைத்துப் பின்காவலும்
நாட்டிட லாம்மானே.

கன்னி கவி.

குன்றுபோற் குலவு மொய்ம்புக் கொற்றவன் குமார னேகேள்
இன்றுநீர் கேட்ட கேள்விக் கிணங்குத லிங்கா காது
விண்டுகொள் நொச்சிக் கப்பால் வீடொன்று கட்டிக் கொண்டு
சென்றிரும் யானு மங்கே சீக்கிரம் வருகு வேனே.

தம்பி தரு.

இணக்கிக் கொண்டேனே - மின்னுளே நான்
இணக்கிக் கொண்டேனே

இணக்கிக் கொண்டேனே ராசமடந்தையை
இந்தமதிற் புறத் தந்த வெளியினிற்
கணக்குத் தப்பாம லங்கு வருவேன்
கட்டுவீர் வீடென்று திட்டமதாய்ச் சொல்ல - (இணக்)

வாலைப்பராய மடந்தை பாவ மென்று
மாட்டே னென்றுள்பின்பு தேட்டமதாகவே
தோலப்பிரபந்த வடிவைக்கண் டிச்சித்து
கூண்டுஎன் கண்ணியிற் பூண்டுகொள்ளும்படி - (இணக்)

சந்திரன் போலத் தயங்கியவத்திரத்
தையலர் தானுமென் கைவசமாகியே
மந்திரமீது வருவள்பிறகந்த
வாச லடைத்துஎன் னுசை தணித்திட - (இணக்)

அப்போது மங்கை அசைத்துப் பார்த்தாள் நானும்
மத்தை யறிந்தல்லோ சற்றே நெருக்கினேன்
செப்புமுலையினு ளிப்போ மனையொன்று
செய்யச் சொன்னுள் காணும் கையுமெய்யு மாக - (இணக்)

தம்பி கவி

கருதிநம் வாசல்காக்கும் கட்டிய காரா கேளாய்
திருமணிமாடமொன்று செய்திடச் சிந்தை யானேன்
ஒருநொடி யதனிற்சென்று ஓவியர் தன்னைக் கூட்டி
வருசிலைப் பகழிபோல வந்திடாய் வந்தி டாயே

தச்சர் வரவு
கவி

மருமணி மாலை சூடும் மன்னனுக் கிளைய கோன்செந்
திருமணி மார்ப னின்று செப்பிய மொழிதப்பாமல்
பொருமணிக் கரத்தில் மாடம் புரியவா யுதமுங் கொண்டு
அருமணி மதில்சூழ் மாந்தை அதிபருஞ் சபைவந் தாரே

சபைத் தரு.

வனச மலர்ந்த விலஞ்சிசூழ் ரேமை
வளர்நக ரின்று புரந்தருள்வோன்
மனமகிழ் தம்பி யிடஞ்செல வோவியர்
வளர்சமு கந்தனில் வந்தனரே

கரமிசை யுளியோடு கைவாச் சிகள்பல
கவினுறு மாயுத வகையுடனே
நரபதி யனுச னுரைப்படி யோவியர்
நவில்சபை முன்பினில் வந்தனரே

கானர விந்த மடுப்புனை ரேமை
காவல னனுச னுரைப்படியே
வானர மெழுதுப தாகையுள் ளோவியர்
வாழ்சபை யன்பொடு வந்தனரே

மெல்லியல் நூலி னுரைப்படி சித்திர
வேலைசெய் தூரியக் கோலுடனே
வல்லிய மாலை யணிந்திடு வோர்சபை
மன்னவன் முன்பினில் வந்தனரே

தம்பி கவி

தச்சரே கேளுமின்று சாற்றிய மொழிதப் பாமல்
நொச்சியின் பின்பு றத்தே நுவலிரு தினத்துள் ளாக
மச்சுமா ளிகையொன்றுய்த்து வாசலு மமைத்துப் பூட்டும்
வைத்ததி சுறுதி யாக வந்தெனக் குரைத்தி டீரே

தச்சர் கவி

உரைக்கரும் பவனஞ் செய்ய வொளிபெறு பசும்பொன் முத்து
நிரைக்குநற் பவளத் தூண்கள் நீலமா மணியோ டின்னும்
தரைக்குள்நாங் கேட்கும் வஸ்துத் தந்திடச் செய்தா லின்றேர்
அரைச்சணத் தினிலே கட்டி யரசர்க்குக் காட்டு வோமே

தம்பி கவி

காட்டரும் வீர சூரக் கட்டிய காரா தச்சர்
கேட்டிடும் பொருள்க ளெல்லாம் கெறுவமுற் றருளி யின்னம்
ஆட்டுநற் கிடாயுஞ் சம்பா வரிசிகாய் கறிகள் யாவும்
தேட்டமாந் தச்சர் கையிற் சேர்ந்திடப் பண்ணு வாயே

கட். கவி

சேர்ந்தவிவ் வுலகில் வாமந் திகழ்கவித் துவசம் பெற்ற
மாந்தையா திபரே மன்னன் வாசகம் வழுவி டாமல்
தேர்ந்தபொன் வெள்ளி மற்றுந் திகழ்நவ மணிக ளெல்லாம்
ஆர்ந்துமக் களித்தேன் கைக்கொண் டரண்மனை செய்கு வீரே

தச்சர் தரு

1ம் பேர்:

கன்னல் வில் லிலங்குகரக் காமரூபன் - சொன்ன
கட்டளைப் படிபவளக் காலைநாட்டி
வன்னமுற் றிடும்வயிரச் சட்டமேற்றி - மதிள்
மாணிக்கத்தி னுலமைத்து மாடைபூசி

2ம் பேர்: உன்னுபடிக் குப்பளிங்கு தன்னைப்பதித்து-வயி
டூரியத் தகடிட்டெட்டுச் சாருமிறக்கிப்
பன்னுநன் மரகதத்தின் பாச்சுப் பூட்டி - நல்ல
பச்சைமணி யின்பலகை வைத்துவரிந்து

1ம் பேர்: கோமேதகத் தாலேவன்ன வாயில்சேர்த்து - ஒளிர்
கொள்புருட ராகநிலை தன்னைநாட்டி
வாமமிகும் வெள்ளிக்கொண்டி வைத்துப்பூட்டிக்
[- கோர்வை
வைத்தமுத்தின் கற்றைகட்டி மாடம்வேய்ந்து

2ம் பேர்: தேமரு மலர்த்தருக்கள் சிங்கத்தோடும் - பட்சிகள்
செய்தலங்கீர் தம்புரிந்தோர் துய்யமனைக்கே
தாமமணி கோமகன்றன் தம்பியிடத்திற் - சென்று
சாற்றுவோமிம் மாற்றமிதைச் சங்கைபெறவே

தச்சர் கவி

மன்னவர்க் கிளைய கோவே வழுத்துதல் கேளும் நீர்முன்
சென்னசொற் றவரு வண்ணந் துலங்குமா ளிகையொன் றுய்த்
[தோம்
அன்னபோற் புவியி லாரு மமைத்தில ரையா நீர்முன்
தன்னையே சென்று காணச் சடுதியில் வருகு வீரே

தம்பி கலிப்பா

அருஞ்சிறைக்குயி லஞ்சுக மாமயி
லானைமான்க ளநேக மழைத்திடுங்
கரும்பு நித்திலக் கான்மனை தன்னையான்
கண்டே யுள்ளங் களித்தேன்கண் ணுளரே
வரும்பசும்பொன் வளையும் பதக்கமா
மணிப்பொன் னுடையுந் தந்தே னுமக்கிதோ
சுரும்ப ரற்றுஞ் சுனைசூழ்ந் திடுமுமர்
தொன்ந கர்க்குச் சுகம்பெறச் செல்லுவீர்

தம்பி கலித்துறை

படியிற் றரியல ரஞ்ச வமரித் பழகுமிக்க
வடிவிற் சிறந்திடு மாகத னேயந்த வஞ்சிமுன்னேர்
நொடியிற்சென் றிங்கு மனையொன்று செய்தல் நுவன்று
[வந்தக்
கொடியிற் சிறந்த விடையாள் வரும்படி கூறுவையே

கட்டியன் இன்னிசை

செம்பதும மென்பூஞ் செழுந்தவிசில் வீற்றிருந்து
அம்பரமெட் டும்புரக்கு மம்மானே கேட்டிடுவீர்
கொம்பனைய நின்கொழுநன் குலமொன் றமைத்ததென்று
விம்பவித மேயுமக்கு விளம்பிவிடச் சொன்னார்காண்

கன்னி இன்னிசை

வெள்ளைமலை மீதுமுன்னாள் — வரு
　　விண்ணவர்கள் பண்ணிசைக்கப்
புல்லணையின் மீதுவந்த — பரி
　　பூரணனே காரணனே

பன்மொழிசொல் வின்னேசுவை — அன்று
　　பார்த்திவர்முன் காத்ததுபோல்
என்னையுமிவ் வேளைதன்னில் — முன்னின்
　　றெப்படியு மிரட்சியையா

கோலவட்ட வேலைசுற்று — மிந்தக்
　　குவலயத்தை யரசியற்றும்
வாலவட்டக் கேடகத்தான் — மண
　　மகனுர் வந்தா லிதுவருமோ

தூதருக்குச் சொல்லழகு — குவ்விற்
　　றௌல்வேந்தர்க்குக் கோலழகு
மாதருக்குக் கற்பழகு — என்ற
　　வார்த்தை தன்னைப் பார்த்திலனே

முன்னவன்றன் பன்னியள்தாய் — என்ற
　　முறையதனைக் குறியாமல்
துன்னியகான் மிருகமென்ன — வென்முன்
　　தூறுபல கூறினனே

மண்ணில்முறை யென்ணுத — முழு
　　மகனுலவம் வாராமற்
கண்ணியிட்டோன் வருமளவும் — மென்னைக்
　　காத்தருளு மாத்தாளே

தோழிசொன்ன புத்தியிது — நல்ல
　　சூழ்ச்சியென்ன நீட்சிமைசேர்
மாளிகைக்குச் சென்றவனைக் — காவல்
　　வைத்தடைப்பேன் தப்பாது

கன்னி இன்னிசை

எம்பரதோர் தம்பி யிருக்கிறுர் மாளிகைக்குள்
செம்பொன் மனைத்தாள் திறமாக வேபூட்டி
தம்பிக்கை யுள்ளவரை நாலுதிக்குங் காவல்வைத்தேன்
வம்பகலு மெந்தனது மாளிகைக்குச் செல்வேனே

சபை கவி

மாசறு காத ராச மடந்தைமன் னிளையோன் செய்த
காசறு மனையிற் சென்று கற்கத வடைத்துப் பூட்டிக்
கூசிடா மதனி ளுற்றின் கொடுத்திடச் செய்து மிக்க
நேசவே வலரைக் காவல் நிறுத்தியங் கிருத்தி ஞளே

தம்பி தாழிசை

வாசமேவு குழல் ராசமா மதுர
　　வஞ்சியே கொடிய நெஞ்சியே
　வன்னமா மனைசெய் யென்ன வோதுதல்
　　வருத்தவோ சிறை யிருத்தவோ
கூசிடா மொழியை நேசமா மெனவே
　　கொம்பனு ருரையை நம்பிநான்
　குறிக்கு மாப்பது பற்றிக்கு மந்திபடு
　　கோலமா மெனது சீலமே
ஆசில்லாத கொடி யேயெழுத் திடினும்
　　அத்திமீது மலர் பற்றினும்
　அரிவைநெஞ் சொருவர் அறிதல் பஞ்சியென
　　அன்றுசொல் லுவமை கண்டதே
தேசமே மகிழு மிராசனு மெனது
　　சேட்டனு ரிவைகள் கேட்டராற்
　செய்வ தென்னவினி யையையோ பழைய
　　தீது சூழ்ந்ததினி யிதுதான்

கன்னி தரு

காணேனே — என்னன்பரைக்
காணேனே

காணேன் மலர்ச்செழுங் கானமும் வாவியும்
கல்லுந் தெருவுங் கடலும் கடந்தன்பர்
தோணு மதிநலம் பூணுஞ் செருசலேத்
துன்னும் நகரில்நின் றின்னும்வே றேயெந்த
தூரஞ்சென்றாரோ—தவத்தினில்
வாரங் கொண்டாரோ ..... (காணேனே)

அற்புத தேவ அநந்த தயாபரன்
அம்பரன் பாடுக ளும்பல காட்சியும்
கற்கிரி மீதுறை பொற்குரு சானதுங்
கண்களித் தேகண்டு பண்புற வேதாபங்
காட்டி நின்றாரோ — பூங்காவினில்
வேட்கை கொண்டாரோ (காணே)

வாலே வயதினில் மாலே புனைந்திடும்
மன்னவன் மாளிகைக் கின்னமும் வந்திலன்
வேலே புனைசெரு சேலேயில் வஞ்சகர்
வேற்றுமொழி பகர் மாற்றல ரரையும்
வெற்றிகொண் டாரோ — தன்னுடெலாம்
சுற்றிநின் றாரோ ...... இன்னுங் காணேனே

சபை கவி

மகரந்த மொழுகு வஞ்சி மருமனென் டிரிக்கு கர்த்தன்
சிகரந்தந் ததும்பிச் சோரி சிந்திய செருசேல் சென்று
பகரந்தக் காட்சி யெல்லாம் பார்த்துள மகிழ்ந்து மற்றும்
நகரந்தங் கண்டு றேமை நகர்செல்ல வருகின் றரே.

மந். தரு

தங்கமுடி துங்க வேந்தே — எமது
சத்திய வேதத்திலுற்ற நித்திய செல்வம்
பொங்குதிசை யெங்கு மேதான் — தேவ
பூசையும் பிரசங்கித வோசையும் பாரீர்

நாட்டு திருப்பாட்டு மதிக — தவத்தியர்கள்
நற்புமினி வெற்புநிலே பொற்புவமுவாக்
கோட்டுமணிக் காட்டுநகையார் — தங்கள்திருக்
கட்டமும் பொன்னூஞ்சல் விளையாட்டமும் பாரீர்

மந்திகை யிற்சிந்து தேனும் — மதயானைகள்
மந்தர மதிற்றுதைய வந்ததேனும்
கந்தவீ சொரிந்த தேனும் — முப்பாலொடு
கலந்துததும்பி நின்ற மலங்கவீதே.

கள்ளருவி வெள்ள மதனிற் — றுங்கிய
கைக்கடகரி போலெருமைக் கடாவை
மள்ளர் கொண்டு மெள்ளவுழுது — சேருடியே
வைகும்நெற் பயிருமவர் செய்யுந்தொழில் பார்

சார்ந்த நறும் பூந்துடவையில் — அடர்ந்தெழுந்த
தக்கமந் திகள்புகுந்து முக்கனிகளைச்
சேர்ந்து மதுவார்ந் தொழுகவே — பிய்த்தெடுத்துத்
தின்றுகுட்டிக்குங் கொடுக்கும் வென்றியும் பாரீர்

எம்பரதோர் கவி

மந்திரித் தலைவா நாங்கள் வளர்செரு சலேயில் நின்று
கந்துக மீது வந்து கருதுநா டெல்லாங் கண்டோம்
சுந்தர றேமை நாட்டிற் சுகம்பெறச் சேர்ந்தோ மிப்போ
திந்தமண் டபத்திற் றங்கி யிருந்திளைப் பாறிச் செல்வோம்.

மந். இன்னிசை

பொன்னின்மகு டத்தலைவர் போற்றுமன்னர் கோவேயான்
செந்நெல் வயற்றலேயிற் செங்காலன் னந்துயிலும்
மன்னுபுகழ் நாட்டின் வளமறிந்து வாறேன்யான்
அன்னைகன்னி பாலன் அருள்பெற் றிருப்பீரே.

எம். கவி

அரியணைப் புடையில் நிற்கு மழகுறு கட்டிய காரா
வரைதிரு முகமொன் றிதோ வரிசிலைக் கணைபோ லேகித்
தரைபுக ழெனது தேவி தனதுகை தனிலீய்ந் திங்கு
விரைவினில் வருவா யிந்த மேதினி மகிழத் தானே

கட்டியகாரன் தரு

அம்புவிமீதினிற் கொம்பனிச்சேவக
மாகுமோ மானிடரே — இப்போது
எம்பரதோரென்னை வந்தியாயிந்த
விருட்டிற் துரத்துகின்றார் — பாரும்

இந்தவழிதன்னிற் றந்திகரடி
யிருப்பது நிட்சயங்கா — ணுறுலென்
மந்திரவாளை யுறைவிட்டுத் தங்கையில்
வைத்துக்கொள்வேன் திறமா — யிப்போது

என்னைப்போல் வீரவான் பிள்ளையுமாரு
மிருக்கிறா ரோபுவியில் — ஓர்போது
சின்னப்பு லித்தோலைக் கண்டுபயந்த
திடுக்கமிருக்குதப்பா — இப்போது

நல்லசமர்த்தன் நடைக்கென்று என்னையும்
ராயன் கணித்துக்கொண்டா — ரோர்நாளில்
மெள்ளநடப்பதை மூன்றுநா ளைக்குள்ளே
வீசிநடந்திடுவேன் — நானும்

என்னசமர்த்தும் பிறகுபகருவே
னின்றைக்கு நேரமில்லை — நானும்
மன்னனருள்கடு தாசியைராச
மடந்தைக்களித் தருள்வேன் — கொண்டேகி

கட்டியகாரன் இன்னிசை

தம்பமென மேழைகள்தன் தாய்போல் வருபவனே
இம்பர்கள் பாக்கியமே இறைவர்மகிழ் மாமயிலே
எம்பரதோ ரின்றுமக் கெழுதுகடு தாசிதந்தார்
அம்புவிமீ திந்தாரு மரசனிடஞ் செல்வனே.

கன்னி சீட்டு வாசகம்

திரிசுட ரோரே தெய்வீக மாகிய
மறுவில்லா நாதன் மலரடி தொழுது
வம்பவிழ் தெரியல் மருமவெண் டிறீக்கு
எம்பர தோரின் றெழுதிய திருபம்
கற்புடை யெனது காதலி ராச
பொற்கொடி தனது பொய்தவி லெய்திக்
கண்டுள மகிழக் காவலன் நானும்
தன்மதி யமைச்சனுஞ் சகலருஞ் சுகமே
மருமலர்ப் பதும மடுவளம் புனையும்
செருசலைத் தலத்தின் சிறப்பெலாங் கண்டு
சிந்தனை களித்துத் தேவனைப் புகழ்ந்து
எந்தனக் கடங்கிய எல்லைக ளனைத்தும்
சுற்றியை யாண்டு சுகசோ பனமதாய்
உற்றவித் திங்கள் ஒருபதாந் திகதி
நயமிகு ரோமை நகர்தனில் வருவோம்
தயவொடு நீரும் தம்பியும் மனதில்
எண்ணமு றுமல் இருப்பதா மென்றும்
நண்ணிய கிறீஸ்து நாதர்தன் வருடம்
ஆயிரத் தெண்ணூற் றுவணி மாதம்
செய்யபத் தொன்பதாந் திகதிதிட் டிமதே,

கன்னி இன்னிசை

என்னேச காதலனு ரெழுதுகடு தாசிகண்டு
நன்நேச முற்றேனென் னன்புமிகு தோழியரே
மன்நேச மானமன்னன் வரவுமிகெல் லோமறிய
முன்னேவள் ளுவர்க்குரைத்து முரசமறை விப்பீரே.

பகுறயன் வரவு
கவி

அரக்கொடு கள்ளுக் கஞ்சா அளவறக் குடித்துக்கொண்டு
குருத்திபோல் வயிறு மூதித் தேற்பதைத் தோளிற் போட்டு
மருக்கம ழெண்டி றீக்கு மன்னவன் வரவு கூறக்
கருத்துறு சாம்பா னிந்தக் கவரியில் வருகின் றனே

சபைத் தரு

புயத்தினிற் பறை போட்டு — ஒருகையிற்
புடைத்திடுந் தடிக்கம்பு பிடித்துக்கொண்டு
சயத்துடன் நெளித்துக் கொண்டு — சவைதனில்
தம்பட்டக் காரனுந் தோற்றினனே

தருச்சொல்லிப் படித்துக் கொண்டு — பறச்சிகள்
தனைக்கண்டுபயில்காட்டிச் சிரித்துக்கொண்டு
வரிக்கண்ணை மருட்டிக்கொண்டு — சாம்பவன்
மதிப்புறுஞ் சபைதன்னில் தோற்றினனே

வெறித்திடப் பார்த்துக் கொண்டு — செம்பட்ட
வீசையை யடிக்கடி முறுக்கிக்கொண்டு
குறித்திடு மெம்பர தோர் — வருமுறை
கூறிடச் சாம்புவன் தோற்றினனே

பறையன் தரு

இந்நிலமெல் லாம்புரக்கும்
எண்டிறீக்கு எம்பரதோர் வாருர் — மாருர்
ஈழமும் வேளமும் நாணுகம் நாளுமுய்த்
தாவித முற்றவர் தாளையிறைஞ் சிடுவீரே.

கன்னல்மொழிக் கன்னியரே
கன்ருவ தாரனிதோ வாருர் — மிக்க
தத்துவ முற்ற மகத்துவ வித்தகர்
மெத்துதமிழ்க்கவி வைத்தடி முத்திசெய் வீரே.

மந்திரம் நேர்புயன்மிகுவா
மந்திகழ் மந்திரமதனில் வாருர் — இப்போ
மன்னவர் முன்னவ ரின்னவை யன்னவர்
மன்னுசெங் கன்னல்கள் தென்னை நிரைத்திடுவீரே

சங்கமுறைச் சங்கர்களே
சங்கனிவர் சங்கையினுல் வாருர் — நீங்கள்
சங்கீத லங்கிர்த மங்கல சிந்திசை
தங்க மொழிந்திதோ துங்கனடி தொழுவீரே

அங்கமை மாதங்கதுர
கங்களிர தங்களூர்தி வாருர் — நொடியில்
அந்த மிகுந்தமுச் சந்திக ளெங்குமு
கந்த முருந்தலர் பந்தல்சோ டித்திடுவீரே

கன்னியுந் தோழியுந் தரு

கன்: பொன்னவிர் மந்தர மென்னவெழுந்தனப்
பூவையரே கேளீர் — எங்கள்
மன்னவன் வந்து மடத்திற்றரித்த
வகையென்னடீ தோழி

தோழி: அன்னமிறைஞ்சிய மென்நடை யேயங்
கவைநின் றிளைப்பாற்றி — யுண்டு
பின்னைவருகுவ ருண்மையீ தாம்நீ
பேதலியாதே பெண்ணே

கன்: மாநிலத் தோர்தொழுங் காவலனுரிங்கு
வந்தவர் தம்பிதன்னை — காவல்
ஏனடைத் தாயென்று தானெம்மைக்கேட்கி
லெதுவகை சொல்வோமடீ

தோழி: தேன்மலர் சேர்குழல் மானனையேயவன்
செய்திடு குற்றமெலாம் — எங்கள்
பானெளி சேர்முடி பூபதிமுன்பு
பகர்ந்திட லாம்மானே

கன்:
ஐயோசிறுபிள்ளை செய்ததை நாங்க
ளரசர்க் குரைபகர்ந்தாற் — சென்னி
வெய்ய சினத்தொடு கொய்வரா காதிது
வேறொரு புத்திசொல் தோழி

தோழி:

துய்யவம் போருகத் தையலர் போல்வரு
　　தொய்யிடை யேகேளும் — உந்தன்
செய்யமனப்படி செய்யும்நா னென்னதான்
　　செப்பவடி மானே

கன்:

அன்னவன்றன்னை யறைதிறந் தேயிதை
　　யாருமறி யாமல் — அவன்
சொன்ன மொழியும் பொறுப்பேனே காதி
　　துணையும் படிதோழி

தோழி:

பின்னே நீர் செய்வது நன்மையோர்போது
　　வினையுமூ மாகவரும் — ஆனல்
உன் நினைவின்படி மன்னவன் றம்பியை
　　யுற்றசிறைவிடு மானே

கன்:

நன்மைக்குத் தின்மைவா ராதுவந்தாலது
　　நாதன் செயலதுநா — மென்செய்வோம்
வின்மைக்குரிய துரைவரவுக் கெங்கும்
　　வேடிக்கை செய்மானே

தோழி:

பொன்விங் கலர்தென்னம் பூவிரிவாழை
　　புகழ்செறி தோரணங்கள் — நாட்டித்
தன்மத்த யாருண மன்னன் வரவு
　　தலையெதிர் கொண்டுநிற்போம் மானே

கன்னி இன்னிசை

வல்ல வெனதுபுகழ் வாசல்நிற்கும் மாகதனே
வில்லின் சரம்போல் விரைவாக நீயேகி
வெல்லு முபாயம் விளங்கியநற் றந்திரஞ்சேர்
துல்லிபமாம் பாங்கன் சுறுக்கில்வரச் செய்வாயே

சபை கவி

உலகெல்லா மொருகோ லோச்சு முத்தம னெண்டி ரிக்கு
நலமிகு தம்பி யாருேன் நாடியிங் கழைத்த தாலே
பலவித பொய்யும் சூழ்ச்சி படித்தவர் தனிலும் மிக்கோன்
இலகிய வுபாய தந்திரி எழில்சபை வருகின் றனே

சபைத் தரு

மானர்க் கதிக மேன்மைத் திறங்கொள்
　　மகிப னனுச னழைத்த தால்
தேனைச் சொரியும் மாலை மருமன்
　　திகழுஞ் சபையில் தோற்றினன்

உரமுற் றமரில் வருபற் றலர்கள்
　　ஒருவக் குருதி பெருகவே
பொருமுக் கிரம குரிசிற் சபையிற்
　　புகழ்கொள் பாங்கன் தோற்றினன்

கோளுங் கெடும்பும் சூதும் வாதும்
　　குலவித் தையெனப் பழகியே
நாளும் புகழும் ராயன் தம்பியை
　　நாடித் தோழனுந் தோற்றினன்

தோழன் கலித்துறை

சங்க முழங்குந் தடஞ்சூழ்ந் ரேமைத் தலம்புரக்கும்
சிங்க மெனுமெம் பரதோரெண் ரிக்குத் தினமகிழ்ச்சி
தங்குனன் னேசச் சகோதர னேயுன் சமூகமதில்
இங்கென்னை யேனழைத் தீருள்ள செய்தி யிம்புவீரே

தம்பி கொச்சகத் தரு

கொச்:

துல்லிபஞ்சே ரென்னுடைய தோழா வுரைத்திடக்கேள்
எல்லைமுழு தும்புரக்கும் என்தமையன் மன்றல்செய்த
வல்லவிதன் பேரில் மனவாஞ்சை மிகவாகியியான்—மதன்

தரு:

முல்லையம் பகழியேவத் — திரை
முசையீந் தனலாய்த்தாவ — ம்னம்
அல்லலுற் றெழுந்து வாடி — நோவ
அரிவைவந் தாளெனைத் தேடி

கொச்: வந்தமட மாதுன் வருத்தமே தென்றுரைக்க
உந்தனது மையலால் உள்ளுருகி னேனெனவும்
சிந்தைதெளிய மையல் தீருமென்றேன் காரழகச் —
[செம்பொற்

தரு: பந்தாந் தனத்தாள் சிரித்தாள் — நின்று
பற்கடித் தேகையை நெரித்தாள் — தம்பி
யுந்தாய்நா னெனமொழிந்தாள் - தேவ
வுறுதியிலேமனந் தெளிந்தாள்

கொச்: மாதுமனஞ் சம்மதியா வாறுகண்டு நானவளை
மோதியுனைச் சேர்வேன் மொய்குழலே யென்றுரைத்தேன்
சூதொன்று சொன்னாள் துலங்குமனை செய்யுமதில் -
[நானும்

தரு: பாதியி ராவினில் வருவேன் - வந்து
பரிந்துசெவ் வாயிதழ் தருவேன் - என்று
தீதுசெய் தேயென்னை வீட்டில் - பூட்டிச்
சிறையில் வைத்தாளேசி மாட்டி

கொச்: கிஞ்சுகவாய் வஞ்சி கிளர்மறிப்பில் வைத்துஎன்னை
அஞ்சுவருட மிந்த ஆகடியஞ் செய்தபின்பு
மஞ்சுலவு மென்தமையன் வாற வரவறிந்து - நானும்

தரு: அஞ்சுவே னெனச்சிறை விடுத்தாள் - எந்தன்
ஆசைதீ ராமலே மடுத்தாள் - அண்ணர்
தஞ்செவிக் கிதுகதை விண்டால் - என்னைத்
தறித்திடுவா ரிருதுண்டாய்

கொச்:

வாரிதியிற் பாயிழந்த வங்கமது போலேயெந்தன்
பாரில்மனந் தளம்பிப் பாங்கா வுனையழைத்தேன்
நீரிதற்கோர் புத்தியெந்தன் நெஞ்சுதெளி யப்பகர்ந்தால் - நானும்

தரு: சீராயுன் றனுய்வேன் - கன
திரவியம் வெகுமதி செய்வேன் - என்னைக்
காருவிவ் வேளையில் நீயே - சூழ்ச்சி
கருத்தினிற் றேர்ந்துரைப் பாயே

தோழன் தரு

தோழா மலங்காதே - யந்தத்
தோகையை வெல்லவு பாயமுண்டு
வாளாண்மை தான்செலுத்தும் - எங்கள்
மன்னனிவ் வூரில் வருமுதலே

வழியி லெதிரேபோய் - அந்த
வாம ளிருபொன் மலரடியைக்
களிகூரத் தெண்டனிட்டு - கதை
கட்டிச்சொல் தோழனே நட்டமென்ன

பெண்ணொருன் றேவியைப்போல் - வேசை
பேருல கானதில் யாருமில்லைத்
தண்ணார் மதிமுகத்தாள் - நானும்
தம்பியெனு மொழுங் கில்லாமல்

மருவ வெனைத்தொடர்ந்து - வந்து
மல்லுப் பிடித்தவள் தொல்லைபண்ணி
வருவா யெனைச்சேர - வென்று
வாணுதல் சொன்னதென் றோதிடுவாய்

அரிவையு ரைத்ததற்கு - நானு
மாமென்று சம்மதி யாததினால்
எரிபோற் சினங்கருவிச் - சிறை
யிட்டாளை யாண்டெனக் கட்டுகதை

துரையுன் வரவறிந்து - அந்தத்
தோகை யெனைமறிப் பால்விடுத்து
உரையாதே யிக்கருமம் - என்று
ஒண்ணுதல் சாற்றினா ளென்னவுஞ்சொல்

சாட்சிய நேகமென்றும் - இன்னுஞ்
சத்தியஞ் செய்திடு வேனெனவும்
கோட்சொல்வி யேயவனை - நீயுங்
கொல்லுவிப் பாய்வெகு துல்லிபமாய்

கூடவே யான்வருவேன் — அந்தக்
கொற்றவன் முன்பினின் நீரேகிச்
சாடையு ரைக்குமப்போ — வென்னைச்
சாட்சிகு றித்திடுந் தப்பாமல்

கண்ணுரைக் கண்டதென்றும் — அந்தக்
கள்ளிசெய் காரிய முள்ளதென்றும்
என்னுணை யுண்மைசொல்வேன் — வாரு
மேகுவோம் மாசுறுக் காகவிப்போ

தம்பி தரு

என்னை மாமனை தன்னிலே யடைத்திருந்தாள்
துள்ளித் திரிந்தாள் — அண்ணர்க்
கின்னம் நான்சென்று பின்னுவே னவ
ளிடும்புக் கொருகெடும்பு

அம்ப ராதியீ தென்னோ வாமென
அயர்ந்தேன் மெத்தப்பயந்தேன் — அந்த
விம்ப வாயிதழ் கொம்பனுர் சிறை
விடுத்தா ளகப்படத்தான்

வாசமாங் குழல் ராசமா தென்னை
மடுத்தா ளிப்போவிடுத்தாள் — இனிப்
பேசுவேன் சற்றுங் கூசிடா தொரு
பிரட்டுக் கன்னல்வரட்டுங்

பஞ்சவேள் கணைக் கஞ்சவே துயர்
பண்ணினு ளிந்தப்பெண்ணினுள் — இனிக்
கொஞ்சமாய் விடுவேனோஞாயம்
கொடுப்பேன் வன்மந்தொடுப்பேன்

அந்த மேவிய விந்த வூருடை
யோரே தோழன்மாரே — நீங்கள்
வந்து என்னுரை முந்த மெய்யென
வழுத்துமென்னை விளத்தும்

துங்கன் நம்பிட லுங்கள் சாட்சிகள்
சொன்னு லவர்முன்றல் — அந்த
நங்கை செய்திடு பங்கமென் றுரை
நன்னுவே னுண்மை பன்னுவேன்

நம்பி கவி

மாற்றலர்க் கரியே றென்னும் மன்னவர் மன்னு போற்றி
கீற்றுவண் டரற்றுந் தாமக் கிரணபொற் புயனே போற்றி
ஆற்றமஞ் சரீரம் போன்ற வண்ணலே யுமதன் பான
சேற்றெழு கமல பூந்தாள் சிரத்தினிற் ருங்கி னேனே

எம். கவி.

தாங்கினே னென்று போற்று தம்பியுன் றன்னைக் கண்டு
தேங்கருஞ் செழுந்தே னுண்டு தெகிட்டுவண் டினுக்கொப்பானேன்
பாங்குட னிருந்தே யெங்கள் பட்டின மதனி லுள்ள
ஆங்கரு மங்கள் யாவும் அறைவாய்நா னறியத் தானே

தம்பி தரு

கொந்தவிழ் சுந்த ரலங்கல் புனைந்திடு
கொற்றவனே கேளும் — இன்றெங்கள்
தந்தர மாநக ரந்தனில் வேறொரு
தாழ்ச்சியு மில்லையையா — ஒன்றலால்

இந்தவரும் பெருஞ் சங்கமீ திங்கதை
என்னென் றெடுத்துரைப்பேன் — ஆனால்நீர்
வந்தினி யூரையு லைமுடி கொண்டு
மறைப்பதோ வானாலுஞ் — சொல்லக்கேள்

பங்கய மென்னவி லங்கிய வத்திரப்
பாவையுந் தேவியர்தா — னென்னையா
சங்கை கேடாக இழுத்தவள் கூடத்
தழுவவரச் சொன்னுள்கா — னென்னண்ணே

வீட்டினி லேயவள் ஆட்டிய காரியம்
ஏட்டினில் தீட்டெளிதோ — ஆமெத்தத்
தோட்டிகொண் டேநகை காட்டி மடிபிடித்
தாட்டி யலைத்தனர்கா—ணென்னண்ணே

சட்டை கிழித்தெறிந் திட்டேஎன் கைவிரல்
சங்கை நெரித்தாளிதோ — பாரீர்
கிட்டி வந்து மல்லுக் கட்டுமப்போது
தட்டிவிலத்தி நின்றேன்—மெய்யாக

கொஞ்சு கிளிமொழி வஞ்சி யவளென்னை
கொஞ்சமாய் விட்டாளோ — நீர்போன
அஞ்சு வருடமு மிங்கே பிழைத்தது
பஞ்சி யறிந்துகொள்ளு — மென்னண்ணே

கோட்டு மணிநகை காட்டு மடமயில்
கூறிய காரியத்தை — நான்கண்டு
மாட்டேனென் றேனதைக் கேட்டுஜ யாண்டு
மறிப்பி லடைத்தனள்கா — ணென்னண்ணே

பாரினில் வேசைய ராருமுண் டாகிலும்
பாவையுன் தேவியைப்போற் — பின்னே
காரிருள் மீது கழுநெய் யுருக்கிய
கள்ளியைக் கண்டதில்லை — மெய்யாக

கான்முளை போலே யிருந்தவென் முன்னிந்தக்
காரியம் பேசினளே — யவளை
வீணி லிருத்தி யிருப்பது தானென்ன
வெட்க முனக்கில்லையோ — வென்னண்ணே

இப்படிக் கொத்தவள் செப்பம தாக
இருப்பளோ வானாலும் — எனக்கென்ன
செப்பு முறைமை யுரைத்தே னினியுமர்
சித்தமறிந்து கொள்வீர் — மெய்யாக

எம். கவி

இத்தனையும் புகன்றனை நீ யானல் யானு
மெப்படிநம் புவதவளு மேகன் பேரில்
பத்தியுள்ளாள் கற்பிலற்ப பழுதில் லாதாள்
பலஞானக் கலையனைத்தும் பயின்ற மாளுள்
இத்தரையில் வயதஞ்சில் மாலை சூட்டி
யிதுவரையுந் தவறறியா ளின்றுஞ் செய்யாள்
சத்தியமென் பிறவியினுற் பொறுத்தேன் மற்றோர்
சாற்றிடுகில் நாக்கரிவேன் தவறு தின்றே.

தம்பி தரு

சந்துலாவுதிண் புயனே — யிங்கெந்
தன்னுயி ராகிய முன்னவனே
இந்துலாங்கொடைக் கரனே — யினி
யென்னுரை நம்பா திருந்தாலும்

அரைநா ளொருநாளோ — இந்த
அஞ்சு வருடமும் வஞ்சியென்னைப்
புரியாத கோட்டிபண்ணி — சிறை
போட்டது தானென்ன பொய்யாமோ

அரணந்தனி லடைத்துக் — காவ
லாகவிருந்தவர் சொல்லாரோ
தருணந் தனில் மதிளால் — மடை
தந்து இருந்தவர் சொல்லாரோ

நான்தானுரை யாட்டால் — இந்த
நாட்டினி லுள்ளவர் சாற்றுரோ
ஏன்தான் நீர் நம்பவில்லை — யுமக்
கெப்போவென் றுலும்பொய் செப்பினனோ

தனியே யுரைத்த தெல்லாம் — ஒரு
சாட்சியு மில்லாமற் போனாலும்
அநியாயமாய்ச்சிறையில் — வைத்
தடைத்ததை யாரு மறியாரோ

படியில்நீர் நம்புதற்கு — இந்தப்
பட்டணத் தோரில்வெகு சாட்சியுண்டு
விடுவேன்நீர் கேட்டறியும் — பின்பு
மெய்யுண்மை கேட்கிலுஞ் செய்திடுவேன்

சாட்சி யொருகோடி — யவர்
தன்பெயர் கூறுதற் கேலாது
காட்சிபெற வேநிற்கும் — தோழன்
கட்டிய காரனைக் கேளுமண்ணே

எம். கவி

கட்டிய காரா கேளிக் காளையைக் கன்னி காவல்
இட்டதும் பாவ வார்த்தை யியம்பின தியாவும் மெய்யோ
திட்டமாய்ச் சொல்லல் லாதுன் சென்னியென் கையின்
[வாளால்
வெட்டுவே னுறுதி யாக விளம்புவாய் விளம்பு வாயே

கட்டியன் கவி

கொஞ்சுபரி நகுலனெனும் கொற்றவனே
சிறியோர்யாம் கூறக்கேளும்
வஞ்சமில்லா துமதுதம்பி வழுத்தியசொற்
பிழையாக வருமோவையா

தோழன் கவி

கஞ்சமுக மடமாதுங் காந்தையிவர்
தமைப்பிடித்துக் கடிதோர்வீட்டில்
அஞ்சுவரு டமுஞ்சிறையில் அடைத்துவைத்த
துள்ளதுதா னரசரேறே

எம். தரு

சென்னியிற் பொன்னின்மா மகுடஞ்சூடும்
தேவாதி தேவனே யேசுநாதா
கன்னியிங் கிவள்செய்த வகைகேட்டுள்ளங்
கனலிட்ட மெழுகெனக் காந்துதந்தோ

தம்பியு மவன்விட்ட சாட்சிப்பேரும்
சத்திய வசனமாய்ச் சாற்றலாலே
வம்பியிங் கிவள்செய்த குற்றம்மெய்தான்
மாருத வசைதன்னை வைத்திட்டாளே

பரருக்கும் நரருக்கும் பார்நோக்கெங்கள்
பார்த்திவர் குலத்துக்கு மேராதிந்தத்
துரோகத்தைப் புரிகின்ற பொல்லாவஞ்சத்
துரோகியை யெதுசெய்வேன் துறவோர்கோவே

திக்கெட்டு மரசுற்ற மன்னரிந்தச்
செய்தியைக் கேட்டிடிற் சிரித்திடாரோ
வெட்கங்கெட் டவளிந்த வேசைதன்னை
விடுவேனோ கொல்வேனோ வேதாகோவே

அல்லாதார் கெடும்புள்ளோர் அறிவில்லாதார்
அடுத்துப்பின் பழிசெய்வோர் முறையெண்ணாதார்
பொல்லார்கோட் கொலைசெய்வோர் கற்பில்லாரைப்
புவியினிற் றடிவதும் புண்ணியமாமே

எம். கவி

வையக மதிக்கு மெந்தன் வாசற்கட் டியகா ராகேள்
தையலிங் கவளை யின்னந் தடிந்திடா திருத்தி வைத்தாற்
செய்யவம் பரர்க்கு மிந்தச் செகத்துக்கு மேரா திப்போ
வெய்யகாப் பிலிகள் தம்மை வெகுசுறுக் கழைத்தி டாயே

காப்பிலி வரவு
கவி

கள்ளபி னரக்குக் கஞ்சா களிவெட்டு மாற னெல்லாம்
உள்ளுற வருந்திச் சோபித் தொருவரோ டொருவர் மோதித்
துள்ளியே குதித்துக் கொண்டு சோபனப் பிரிய மாக
வள்ளல்தன் சமூகஞ் செல்ல மழுவருஞ் சபைவந் தாரே

காப். தரு

பண்டருந்தவ மண்டலேசுரன் எண்டிறீக்கரசன் - தனக்கெதிர்
பழுதுள்ளோர்களைக் கழுவிலேற்றிடும் மழுவரும்நாமே
மண்டுதீயென நின்றமாற்றலர் கண்டொதுங்கிடவே - சிங்கேறென
வல்லபேர்களைக் கொல்லுவோமிணையில்லை யெங்களுக்கே

மாட்டிறைச்சியும் ஆட்டுவெண்ணெயுங் கூட்டியேயருந்தி - இறு
மாப்புடன்மிகு கோப்பமுற்றிடுங் காப்பிலிநாமே
நாட்டுப்பானையி லூட்டுகள்ளினைத்தேட்டமாய்க்குடிப்போம் -
அரக்கபின்
நாற்றிசையிலுஞ் சாற்றிலெங்களுக் கேற்றபோசனந்தான்

அம்பரம்பல வும்புரந்திடும் எம்பரதோர்தான் - விரைவினில்
அங்கிருந்தவர் சங்கமீதினி லெங்களையழைத்தார்
வம்பரோடெதிர்த் தம்புதூவிய வெம்போராடிடவோ - மறு
மன்னர்வந்துதாள் கள்பணிந்திடா மல்லிருந்ததுவோ

வெள்ளர்தம்பொருள் கொள்ளைகொண்டிடுங் கள்ளரைக்
கொல்லவோ - மான்மரை
வேட்டையாடிடக் காட்டிலெங்களைக் கூட்டியேகுதற்கோ
கள்ளமாப்பிள்ளை கொள்ளும்வேசைக ளுள்ளதோவவரை-
ஆராகிலும்
கண்டுபிடித்துக் கொண்டுவந்ததோ சென்றுநாமறிவோம்.

காப். கவி.

பொன்னணி மகுட வேந்தர் போற்றிடும் புவியின் மீது
தன்னிக ரில்லா நின்பொற் சரணமே சரண மையா
நின்னுள ந் தன்னி லின்று நினைத்தெமை யழைத்த செய்தி
இன்னதென் றறியும் வண்ணம் இயம்புவீ ரிறைவர் கோவே

எம். கவி

கோபமுற் றமரில் மேவிக் கொலைபுரி மழுவல் லோரே
பாவக முடனே யுங்கள் படைக்கலங் கூர்மை பண்ணி
மாவிற லுடனே யெந்தன் மருங்கிடை நிற்பீ ராக
ஏவுவேன் பிறகு வேலை யிதையத்திற் றேர்ந்து தானே

கன்னி இன்னிசை

என்னதிக நேச இருளையே யென்தலைவர்
அன்ன மடத்தினில்வந் தவர்தரித்து நிற்பதென்ன
மின்னனையே வாருமெங்கள் வேந்தனிடஞ் சேர்ந்தவர்செம்
பொன்னரவிந் தச்சரணம் போற்றிமுன்பு தோற்றிடுவோம்

கன்னியுந் தோழியுந் தரு

கன்னி:

அன்னமெனும் நடைபயிலும் - சின்ன
அஞ்சுகமே கிஞ்சுகவாய் வஞ்சியரென் தோழியரே
தென்னவனு மெனதுஅன்பர் - இடம்
சென்றவரைக் கண்டடிகள் தெண்டனிட வாருமின்னே

தோழி:

செருசலைமா நகரமதில் - எங்கள்
சேசுநசர் பாடுகளை யாசரிக்கப் போனதுரை
வருடமைந்து சென்றபின்பு - இங்கு
வந்தாரவர் கொந்தலர்பூம் பந்தல்முகங் கண்டிடவே

கன்னி:

எம்பரதோர்க் கிளையதுரை - சொன்ன
ஏற்றமிகும் வார்த்தைகளைச் சாற்றுகில்மா கோபமுடன்
தம்பிதன்னை முனிந்திடுவார் - அதனைத்
தான்புவியில் யான்பொறுத்தேன் வான்பொருட்கும்
பொறுதியுண்டாம்

தோழி:

அம்பரனுர் பாடுபட்ட - துய்ய
அதிநவமும் புதுமைகளும் எதுவிதமென் றேயவர்முன்
செம்பவள வாயாலே - இன்று
செப்புமென்ன விப்புவியிற் செப்பமுடன்
கேட்டிடுவோம்

கன்னி :

நாணமில்லாச் சிறுவயதில் - சபையில்
நாவலருங் காணவியான் மாலையிட்ட நாயகனுர்
பூணுதவப் பொறுதியுள்ளார் - அவர்முன்
போயதிக வாய்மொழிகேட் டாயமனந் தெளிவோமே

கன்னி கவி

திங்கள்வெண் டரள வட்டத் திகழ்குடை நிழற்று வாமம்
பொங்குமற் புயனே ராச பூபதி யேயெந் நாளும்
தொங்கல்சூ டிடுமென் நேசத் துணைவரே நும்பூம் பாதம்
இங்கெந்தன் தலையிற்சூடி யிறைஞ்சினே னிறைஞ்சினேனே

எம் கவி

வாசமொழி தான்பேசி மடமுள்ளாள் போல்வந்தாய் மரபுகெட்ட
வேசையெந்தன் முன்புவர வெட்கமுனக் கில்லையதோ
விலகிநில்லாய்
காசுறுமென் வாசல்நிற்குங் காப்பிலிகாள் நீங்களிந்தக்
கன்னிதனைத்
தேசமறி யக்கொடுபோய் வனமிருகத் தீவில்வைத்துச்
சிரங்கொய்வீரே.

கன்னி இசை

முந்நீர்சூற் றும்புவியாள் முத்துக்கு டைக்கரன்சொல்
அந்நீத மென்னென் றறிந்திலனே மாதாவே
புன்நீச னேதும் புகன்றனனே பூபதிமுன்
என்நீதி பேச இடந்தருவீர் சாருகரே

காப்பிலி கவி

மடங்கள்சற்று மில்லாமல் மன்னவனுக் கிளையோனை
மருவச்சொல்லித்
தொடர்ந்துமறிப் பினிலடைத்த தோகைகன்னி யேயுனைப்போ
லாருமுண்டோ
அடர்ந்தசமர்க் கரியேறென் றட்டதிக்கும் புரப்போன்கட்
டளைக்குநாங்கள்
இடந்தருத வருங்கானில் இங்கல்லப் பேசாம லேகுவாயே

கன்னி தரு

கனகமின்னு மாமகுடக் காவலனென் காதலனுர்
முனிவுகொண்டிங் கெனைத்துரத்த முறையோ வாதிதேவா
தனதுபிழை யனைத்துமவன் தமையனிடத் தினிலேகி
எனதுபிழை யெனப்புகன்றுன் என்னே வாதிதேவா

என்நீதி கேளாமல் இழிஞர்கையிற் கொடுத்துவிந்த
அந்நீதி புரிந்தனரே ஐயோ வாதிதேவா
தன்நீதிக் கிணையாகத் தம்பியையும் நினைத்தனரோ
மன்நீதிக் கிதுமுறையோ மகா வாதிதேவா

வாசமலர்த் தொடைபுனைந்து மன்றல்செய்த கொண்கனென்னை
வேசையென்று சொல்லவுமென் விதியே வாதிதேவா
தேசம்நகைத் திடத்தலைவர் செங்கரங்கொண் டென்கன்னத்திற்
பேசியடித் திடவுமெந்தன் பிழையோ வாதிதேவா

சார்த்தமுசிற் றிகழளகக் கன்னியரென் தோழிசொன்ன
வார்த்தைதனைக் கேட்கிலிது வருமோ வாதிதேவா
தார்த்தலைவ ரிடத்திலவர் தம்பிசொன்ன மொழிதனக்கு
ஏற்றவழக் குரைக்கவிட மிலையே யாதிதேவா

பேதையடி யவளெனது பெலனெவ்வள வுலகிலுந்தன்
ஆதரவல் லாமலொன்றும் அறியே னுதிதேவா
பாதகியென் றனக்குதவி பண்ணுவதுண் டண்ணறும்பூந்
தாதவிழ்பங் கயச்சரணந் தாதா வாதிதேவா

விம்பவித முரணங்கே மெஞ்ஞானக் கன்னிகையே
எம்பரதோர் தம்பியிந்த இட்டேற்றஞ் செய்தானே
நம்பியிந்தத் தீர்வையிட்ட நரபதியும் நிருமுடன்
கொம்பனைமுன் னென்வார்த்தை குறித்திலனென் செய்வேனே

தோழி தரு

பரமண்டலம் புவியும் - மற்றும்
பலபொருளும் படைத்தோனே
தருமொண் டொடியாம்ராச - மகட்குச்
சதிமானம் வரமுறையோ

அரசர்க்கிளை யோன்செய்குற்றம் - இப்போ
தவள்பேரிற் சொன்னுனேபாவி
துரைமுன்னிவைநான் சொன்னவுடன் - என்னைத்
துணித்திடுவான் மன்னன்பின்னேன்

பின்னவன்பொய் மெய்யறிய - நீதி
பேதையர்முன் கேளாமலே
மன்னவன் புவியில்மாதை - இந்த
மதியீனஞ் - செய்தானேயந்தோ

பொழுதின்கிரணம் பட்டறியா - ராச
பூவையையவன் சேவகர்கள்
முழுதும்பகை யோடிழுத்துச் - செல்ல
முறையிதுவோ இறையவனே

பழமும்ரசமும் போலிருந்த - ராச
பாவையைச் சொல்தீதுதன்னுல்
உளம்நொந்துருகி வாடுதையோ - ஆதி
யுத்தமனின் சித்தமிதோ

தொழுதுன்னருளே தாருமென்று - ஒரு
தொண்டனையாட் கொண்டகோவே
பழுதொன்றணுகா துதவிசெய்து - ராச
பாவைதன்னைக் காருமையா

எம்பரதோரும் மந்திரியுந் தரு

எம்:

சந்தனக்க தம்பமணி மந்தரப் புயாசலனே
தந்திரத்தில் மிக்கமதி மந்திரியே கேளாய்
முந்துநற் பராபரன்றன் சிந்தனைக்கே ராதுசெய்த
பைந்தொடிக் கிதுபுரியச் சொந்தநீதி தானே

மந்:

நீதியீதென் றேயுரைத்தீர் சோதிமகு டம்புனைந்து
மாதிரமெட் டும்புரக்கு மாதிபனே கேளாய்
தீதக லரசர்முறை யாதென வமைச்சரிடம்
செப்பியெங்க ளொப்பிதத்திற் செய்திடலுண் டையா

எம்:

உண்டெனச்சற் றேமனதில் கண்டிதம்போ லேயுரைத்த
தண்டமிழ்க் கலைகள்கற்ற வென்றிகொள் மந்திரியே
இன்றுனக்கு யான்புரிந்த ரெண்டகங்க ளேதெனிலும்
உண்டெனிற் பயப்படாமல் விண்டுசொல்லு வாயே

மந்:

சொல்லுகிற் றராபதியே வல்லவெளவ்வை யாருரையிற்
றாக்கிவினை செய்யவென்ற வாக்கியமெண் ணுமல்
நல்லகற்பு வாசமுள்ள முல்லைநகை ராக்கினியைக்
கொல்லுவித்தீ ராகிலுமீ தெல்லையில்மா பாவம்

எம்:

வம்பகலு மென்னுடைய தம்பியைத்தன் பிள்ளையென்று
மைப்பொலிகண் ணுளிடத்தி லொப்புவித்துப் போனேன்
அம்பரர்க்கே ராதநினை வம்புவியிற் கேட்டதினு
லப்படிச்செய் தேனெவருந் தப்பிதஞ் சொல்லாமல்

மந்:

மல்லெனச் சிறந்தசெம்பொற் கல்லெனப் புடைத்தபுய
மன்னவர்கோ வேயடியே னின்னமொரு வார்த்தை
எல்லையில்தன் ஞாயமது சொல்லுதற் கிடங்கொடாம
லீதுவகை செய்ததுமா நீதியீனந் தானே

எம்:

தானவள் மறிப்பிலினை யோனைவைத் தடைத்ததற்கும்
தப்பிதம் மொழிந்தற்கும் ஒப்பனைகள் கேட்டேன்
மானனைசெய் குற்றமெய்தான் ஏனவளைக் கேட்கவேணும்
வாசமலர்த் தார்புனையென் மாமதிவல் லோனே

மந்:

மாமணிச்செங் கோல்தரித்த பூபதியின் மேவுதிரு
வாய்க்கெதிர்வா யில்லையென்ற வாக்குமொழி போலே
நாமினிச்சொல் ஞாயமென்ன தேவசித்தத் தின்படியே
நன்மைநன்மை யாகவரும் இன்னமும்நீர் காண்பீர்

தண்டலைராயன் கட்டியன் வரவு

கவி

கொண்டலைப் பொருத மிக்க கொடைக்கர னிறைவர் போற்றும்
தண்டலை ராசன் வாற சம்பிரம மெடுத்துக் கூற
மண்டலம் புகழுந் தாமம் வயங்கவெண் பதாகை யேந்திக்
கண்டவர் மதிக்குங் கட்டிய காரனுந் தோற்றி னுனே

சபைத் தரு

விந்தைசேர் பசுஞ் சுந்தரவடம்
மின்னவே யெழில் துன்னவே - நறுங்
கந்தமேவு தண்டலைத்த ராதிபன்
கட்டிய காரனுந் தோற்றினன்

வட்ட மென்னுதற் பொட்டிலங்கப்பூ
மாலைமார்பு துலங்கவே - புகழ்
கட்டுதண்டலை மன்னவன் வாசற்
கட்டிய காரனுந் தோற்றினன்

அங்க மீதுவெண் சிங்ககேதனம்
ஆடவே விறல் நீடவே - இந்தக்
கங்கைகுலமுல கெங்குந் தாங்குமன்
கட்டிய காரனுந் தோற்றினன்

கட்டியகாரன் தரு

வன்ன மயிலிய லார்களே - செழும்
பொன்னின் முடிமன்ன வாருர்காண்
சின்னச் சிவிறிகள் தன்னிலே - யென்றும்
பன்னீர் விசிறிட வாரும்நீர்

வண்டணி செங்கையின் ஞர்களே - யெங்கள்
தண்டலை மன்னவர் வாருர்காண்
முண்டக மென்மலர் தூவியே - பதங்
கண்டு பணிந்திட வாரும்நீர்

நீடும் விறற்கவி வாணரே - முடி
சூடுந் துரந்தரன் வாருர்காண்
நாடுமவன் பேரிற் கீர்த்தியைச் - சொல்லிப்
பாடிப் புகழ்ந்திட வாரும்நீர்

அட்டதிசை யுள்ள மாந்தரே - யெங்கள்
மட்டணி பொற்புயன் வாருர்காண்
பட்டுப் பணியிழை கட்டியே - பந்த
லிட்டுச் சோடித்திட வாரும்நீர்

தண்டலைராயன் வரவு

கவி

திருவுறை கமல வாவி திகழுதண் டலைநன் நாடான்
மருவுறை செழுந்தே ஞரும் மாமலர்த் தொங்கல் மார்பன்
தருவுறை யொளியாய் நின்ற தயாபரி பாதம் போற்றிச்
சுருவுறை மனைமான் மந்திரி சூழ்வரச் சபைவந் தாரே

சபைத் தரு

பொன்னின் மணிமுடி யிலங்கவே - அடலமரிற்
பொருகைய வர்நிலை கலங்கவே
தன்னிக ரில்லாத தானையான் - மடலவிழ்பூந்
தண்டலை மன்வந்து தோற்றினன்

அங்கை வசிதங்கி மின்னவே - தரியலர்வந்
தஞ்சல்செய்து அஞ்ச லென்னவே
கங்கை வளைகின்ற புவியோர் - புகழ்மருவு
காவலன் வளர்சவையில் தோற்றினன்

சந்திர வட்டக்குடை நிழற்றவே - கவரிகுஞ்சம்
தையல ரிருபுடை சுழற்றவே
மந்திரர் வருபொரு ளுரைக்கவே - இறைவனும்மனை
மாதுஞ்சபையில் வந்து தோற்றினர்

தண்டலைராயன் கவி

தந்தரஞ் சேரு மெந்தன் தயவுமந் திரியே கேளாய்
இந்தரை யரச ராரு மெனக்கிறை யளியா ருண்டோ
நிந்தமுஞ் சிறக்கும் நாட்டில் நீதியினங்க ளுண்டோ
சிந்தனை களிக்க வுள்ள செயலறிந் துரைத்தி டாயே

மந்திரி நாட்டுவழமைத் தரு

திருவளர்தண் டலைநகராள் தென்னவனே யுமது
தேசமதின் வளமைதன்னைச் சிறிதுசொல்லக் கேளும்
மருவளர்தே வாலயத்தில் மாதவர் பூசனையும்
மதிக்கரிய தேரிசுமா தாவின்பி ரார்த்தனையும்

தானதவ ஞானநெறி தனைநினைவுற் றெவரும்
தற்பரன்கற் பனைகள்பத்துந் தவருமல் நடந்து
மானமிகு தேவரிரு நாள்மகிமை மிகவாய்
மங்காத புகழதிகம் வழங்கு துந்தன்நாடு

கன்னல்நிக ராகவயற் செந்நெல்வளர்ந் தோங்கிக்
கருதிவிளைந் தேமலைபோற் கதித்தபொலி தேங்கி
நன்னயஞ்சே ரகமலிந்து நரர்மகிழ்ச்சி பெருக
நன்மாரி பொழிந்துமது நகர்செழிக்கு தையா

சந்தனக்கா வினிலரிசீர் தங்கியபண் பாடும்
தக்கமந்தி முக்கனியைத் தாங்கிவிளை யாடும்
சுந்தரவா வியில்மதிநேர் சூட்டெகினச் சோடு
துலங்குசங்க மணியணைத்துத் தூய்மலரி லாடும்

கடமைகன்றுக் கிரங்குமுலைக் கண்ணதனுற் சொரிபால்
கால்வழியா யோடிநன்நீர்க் கயமதனில் நிரம்பும்
குடவளையின் றிடுதரளங் குலவுதிரைக் கரத்தாற்
கூலமதி லெறியவல்லி குவளைவிள்ளு தையா

மந். கவி

விறலுறை வேற்கை யேந்தும் வேந்தனே யுமது நாட்டிற்
பொறை நிறை வேதநீதி பூவையர் கற்பு மிக்காய்
அறலுறை மாரி பெய்து அகமலி வுளது வேரேர்
குறையிறை யளவு மில்லைக் குவலயஞ் செழிக்கு தையா

தண்டலைராயன் கவி

உலகெல்லாம் புரக்கு மெந்தன் உவந்தமந் திரியே கேளாய்
குலவிய வேட்டை யாடக் கூட்டிநு னேகுதற்கு
இலகுவேல் கரத்தி லேந்தும் எனதுகப் பித்தான் றன்னை
உலவுமென் சமுகந் தன்னில் உகந்தழைத் திடுகு வீரே

கப்பித்தான் வரவு

கவி

சிறையனந் துயிலுங் கஞ்சத் திருமலர்த் தடங்கு லாவுறூ
நறைமலி தண்ட லேய நகர்புரந் தருளும் வேந்தன்
அறைதரு மொழிதப் பாமல் அழகுவேல் கரத்தி லேந்தி
விறல்தரு கப்பித்தானும் விளங்கிய சபைவந் தாரே

சபைத் தரு

செல்வம் மலியுஞ் சிறந்ததண்டலைநாட் டரசுசெலுத்தும்
செம்மல் மகிழ்கப்பித்தான் தோற்றினுர்
வல்லபகைவர் மதங்களொடுங்கவே விசையம் புரியும்
மகிமைசேர் படைத்தலைவன் தோற்றினுர்

காட்டிற் றுரந்து வேட்டையாடவே யரசனேவலிற்
கப்பித்தான் சபைமெய்ப்புற் றெய்தினுர்
நீட்டுஞ் செங்கர வேல்துலங்கவே வசிகையிலங்க
நிலைபுகழ்படைத் தலைவன் தோற்றினுர்

கப். கலித்துறை

மன்னு புவியெட்டுத் திக்கும் புரக்கும் மகிமைநிறை
பொன்னுர் குவளைப் புயாசல னேயிப் புவியதனில்
கன்னுவ தார னெனவந் துதித்திடுங் காவலனே
நின்னு தரவோ டழைத்த தறிய நிகழ்த்துவையே

இரா. கலித்துறை

நானு கலையும் புகழும் படைத்து நலஞ்சிறந்த
சேனுபதி யென வந்தவனே யொன்று செப்பிடக்கேள்
கானுர் வனத்தெய்தி வேட்டைய தாடக் கருத்துகந்தேன்
தானுயென் கூட வரவேணும் நீயுந் தயவுடனே

கப். கொச்சகத் தரு

கொச் :
சீரார் செம்பொன் மணிமகுடம் திகழுங்கோவே செழுங்குவளைத்
தாரார் புயனே தண்டலைசூழ் தருநன் நகராள் தரணிபனே
ஏரார் மேழிக் கேதனனே இறைவா நின்சொற் படியாக - நல்ல

தரு : பாராரும் வேட்டைக ளாடப் - பல
படைகளும் வேனுமென் கூட - அந்தப்
பேராருங் காட்டக முல்லை - தன்னிற்
பிரிவதும் நுழைவதும் வல்லை

கொச் :
சிங்கங் கரடிபுலி யோனைப் செந்நாய் கடுவாய்மத யானை
அங்கங் குன்றலல் லாமல் அம்பூ டுருவாதடர் ககனந்
தங்கந் தங்கும்மணி மார்பா தனிலே யுடல்தொய்
திடத்துரத்தி - யேகி

தரு : வங்கண முறுசிறு வஞ்சி - விழி
மான்கிளை பிடிப்பதும் பஞ்சி - மிகு
பொங்குபல் படைமிக வானர் - தப்பிப்
போவதில் லைக்கண்ட மானர்

கொச் :
கல்லுங் கவணும்வளை தடியும் கதையும் வேலுங்கை வாளும்
வில்லும் சரமும் வெடிக்குழலும் விரும்பிப் பயின்று விறல்மிகுத்த
மல்லர் வலையர் வனவேடர் மறவர்குறவ ரிவர்வந்தால் - அவர்

தரு : முல்லைநன் மாலையு டையோர்கள் - அடர்
முகைவனத் திடைநுழை வார்கள் - நின்ற
வல்லபன் றிகள்மரை மான்கள் - தன்னை
வளைந்துகொன் றிடப்பிடிப் பார்கள்

கொச் :
வண்டுங் குயிலும் பண்பாட மயிலும் வெயிலும் நடமாட
வண்டுங் கவியுந் தொனிமுழக்க மானுங் குருகுங் கண்களிக்க
வண்டுங்குண்டும் நுழையாத வனமடுச்சூழ் வனத்தேகி
[நாமும்

தரு : வண்டகல் வேட்டைக ளாடி - இங்கு
வருவதுன் டனைவருங் கூடிப் - பொன்னின்
வண்டணி மலர்க்கர மானர் - மகிழ்
வாமநின் மனப்படி தானும்

இராயன் கலித்துறை

மலைகொண்ட திண்புய னேமா மதிகற்ற மந்திரியே
கலைகொண்ட வேட்டை விளையாடு தற்குக் கருத்துகந்தேன்
சிலைகொண்ட வாள்கெண்ட வேல்தண்டு கொண்டநம்
[சேனைகளும்
வலைகொண்ட வேடரு மிங்கே சுறுக்கில் வரவழையே

வேடர் வரவு
கவி

பூட்டிய சிலையு மம்பும் பொருகரக் கவணுங் கல்லும்
தீட்டிய வசியும் வேலும் சிலர்சிலர் கரத்தி லேந்தி
நாட்டுதன் டலைநன் நாடன் நவிற்றுகட் டளைதப் பாமற்
காட்டுவே டுவரும் வந்து களரியில் தோற்றி னரே

சபைத் தரு

கல்லுங் கவணுங் கனத்த வளரி
கைக்கத்தியும் போர்த் தடியுடன்
வில்லுஞ் சரமுங் கரத்தெடுத்திதோ
விடர்வே டுவருந் தோற்றினர்

பூட்டும் வலையும் கழிக்கம்புங் கொம்பும்
புயத்திலே யணைத்துக் கட்டியே
காட்டி லிருந்து பிழைக்கின்ற வேடர்
களரியில் வந்து தோற்றினர்

தாடி முறுக்கி மரப்பட் டுடுத்தித்
தலையிற் சடைகள் புரளவே
வேடர் வந்திச் சபையின்மிது
விருப்ப மாகவே தோற்றினர்

வேடர் கவி

சிறையனந் துயிலுங் கஞ்சச் செழுமலர்த் தடங்கு லாவும்
நறைமலி தண்ட லேய நகர்புரந் திடுநல் வேந்தே
பொறையினி லுமது செய்ய பூம்பதம் போற்றி போற்றி
அறைவன வேட ரெம்மை அழைத்ததே னறைந்தி டரே

இரா. கவி

வந்தவன வேடர்களே யுரைக்கக் கேளும்
மலர்க்காவி லேகிவளர் மரைமான் பன்றி
அந்தமுறும் வேட்டைவிளை யாடுதற் கென்
னுகமதி லின்றுமிக வாசை யானேன்
சிந்தைமகிழ் வுடனுமது கரவில் லம்பு
செலுத்துகவண் கல்லுவளை சேரக் கொண்டு
விந்தைசெறி வனத்தினுக்கென் கூட வேட்டை
விளையாட வந்திடுவீர் விருப்புற் றேதான்

இரா. கலித்துறை

கான்தந்த கூந்தற் கனியேயா னிம்மலர்க் காவிலெய்தி
மான்தந்த வேட்டை விளையாடு தற்கு மனதுகந்தேன்
பான்தந்த சீர்மொழிப் பாலனும் நீரும்நின் பாங்கியரும்
தேன்தந்த பூவணை மீதிருப்பீர் வெகு தேசுறவே

தேவி இன்னிசை

வல்லவனே எந்தன் மகிபதியே நீருமந்த
முல்லைவன வேட்டைசெய்ய முயன்றமனப் படியேகி
வெல்லைமலை தனிற்பிறந்த வேதபரன் கிருபையினால்
ஒல்லைதனில் வந்திடுவீர் ஒருகுறையும் மேவாமல்

வேடர் தரு

சுந்தரம் நீடிவளர் மந்தரஞ் சேருமந்தச்
சோலைதனில் மேவிநடந் தேயிப்போ - வெகு
தந்தரம் போல்வளைந்து சிந்துரம் யாளிசிங்கம்
தன்னைவெட்டிச் சின்னமிடு வேடர்நாம்

கொண்டலை நேர்கொடைக்கைத் தண்டலை ராயன்வேட்டை
கோடிவிளை யாடவெம்மைக் கூவினு - ரிந்த
மண்டலஞ் சூழ்புவியிற் புண்டரிகங்க டன்னை
வளரிகொண்டு சுழலஎறி வோமஞ்சோம்

கொம்புமா னேனம்மரை கெம்புமோ ருய்கடன்னைக்
கொல்லிலொரு கல்லாலுச்சிப் போடுவோம்
வம்புசேர் போர்க்கரடி யம்பினு லேதொடுப்போம்
வாசவன வேடரெங்கள் போலுண்டோ

சபை கவி

புரியொலி குழல்கொம் பார்ப்பப் புரவல ரருகுசூழ
விரிகதிர்ப் பிரபை போலே விளங்குபொன் மகுடம் மின்னத்
தரியலர் கெடிகெட் டோடத் தண்டலைத் தலைவன் ருனும்
பரியின்மீ தெழுந்து வேட்டை யாடிடப் பரிந்துற் ருரே

கப்பித்தான் தரு

தென்னம் பழமுங் கமுகின் கனியும்
சிதறக் கயல்கள் பதறும் வாவிசூழ்
மன்னுந் தண்டலை நாட்டுக் கரசே
வாரும் வனத்திற் சேருவோம்
பொன்னின் கிரண வசிகை யேந்தும்
பூபனே புகழ் வீமனே யுயர்
பன்னும் வேட்டை யாடுங் காணிதோ
பாருங் கண்களி கூருமே

மேவும் பொறிப்புன் மானும் மரையும்
மேயுதே துள்ளிப் பாயிதே யீதோ
தாவும் பரிமீ தோடித் துரத்திச்
சடுதி பிடித்துப் போடுவோம்
மாவும் புலியும் மதகைக் கரியும்
மருவுதே நின்று வெருவு தேயினித்
தாவுஞ் சிலைகொண் டேவு மழைபோற்
சொரிகு வோங்கொலை புரிகுவோம்

கல்லுஞ் செடியுங் காடுந் திடலுங்
கடவுங்கோ படை நடவுங்கோ
மல்லர் வேடுவர் மறவர் குறவர்
வளையுங்கோ காவில் நுழையுங்கோ

புல்லு மறுகும் புழைக்கைக் கரியும்
பொருமுதே பயந் துருமுதே யிப்போ
நல்ல மான்மரை யேனத்திரளை
நவில்கைப் படையா லடல்செய்வோம்

கப்பித்தான் மறுதரு

வீரத்தீரன் எதிர்த்தவன் போரிற்சூரன் - வண்டர்க்கெதிர்
மிண்டன் மற்புயத் தண்டலைப்பதி அண்ட முட்டிட
நின்றவனத்தில் - மேவினுனே -
விலங்கிடை தாவினுனே

பார்ப்புந்தோலுஞ் சிங்கமும்நின் ருர்ப்பித்தாலும்
[- வனத்திடை

பயமறப் புகுந் துயர்கரச் சுடர்
அயில்புதைத்து வெஞ் சயமுறத் திறம்
பண்ணினுனே - பொன்னம்பரக் -
கண்ணி னுனே

கானக்கூடித் தொடர்ந்துபுன் மானைத்தேடி - கருஞ்சடைக்
கரடி யைப்பரி குரலோ டேற்றுவித்
துரமுறப் படைச் சேனர்களைக் கரங்
காட்டினுரே - வேடர்வலை -
பூட்டி னுரே

கூனற்கோடு திகழ்மரை யேனச்சோடு - மிகவலை
குறுக மான்கள்வந் திறுக வேந்தனும்
நறுமலர்த் தொடை தறுகண் ணுளரும்
கூடினுரே - வேட்டைவிளை -
யாடி னுரே

தண்டலைராயன் கவி

அரசெனக் கதிக நேச அமைச்சனே யுரைக்கக் கேளாய்
விரைமலர்க் காட்டில் வேட்டை விளையாடி யிளைத்த சேனை
உரைசெயற் கரிய தென்ற லுலாவுமிந் நிழலில் நின்று
வருதகைப் பாறி யெங்கள் வளர்நகர்க் கேகு வோமே

சபை கவி

அம்பர மனைத்துங் காக்கு மரசர்கள் கோமா னென்ற
எம்பர தோரெண் டிறீக்கு இயம்புகட் டனையின் வண்ணம்
கொம்புரம் பெறுமென் மானைக் கொடும்புலி வளைந்த தென்ன
வம்பர்கள் வனத்தில் ராச மடந்தையைக் கொடுவந் தாரே

கன்னி தரு

பன்னிரண்டு மன்னர்கோத்ரப் பாக்கியத்திவ்ய ராக்கினியே தாயே-
படியிலடியவட்கெப் படியுமுதவிபுரி வாயே [இந்தப்
கண்ணீர்கொண்டு பாதந்தோய்த்த கன்னிமத லேன்பாவந் தீர்த்த -
ஆதி
கர்த்த னையிரந்துன்னிரக் கத்திஞலெ னையீடேற்று வாயே

தாசியென்று என்னையிப்போ தள்ளியிழுத் துள்ளமிரங் காமல் - எந்
தலைவ னுரைக்குவஞ்சர் தலைகொய்வ தற்குமுறை தானே [தன்
வாசமலர் வாசிகைசேர் மன்னவனின் றென்னைமுனிந் தேச -நின்ற
மாற்றலர்போல் என்னையொரு மாற்றமுரை கேட்டிலரே
முறையோ

ஆதரையில் நீதியறி யாதரையில் வாளுருவி யோங்கிக் - கோப
அரியைப்போற் சீறித்தலை யரியக்கட்டளையிட் டாரன்பர்
சாதமிகும் வேதசற்பிர சாதமுறை யாகியபாத் திரமே - இந்தத்
தமியாட் கிரங்குவையுத் தமியே யடைக்கலம்மா தாவே

எம்பரன்முன் வேண்டியிந்த எம்பரதோர் செய்தஅவமான -
பொல்லா
இக்கட்டுத் தவிர்த்துநின்வே றிக்கட்டுப்புட்பத்தா ரைத்தாரீரோ
உம்பர்கள் கோவேயெளியாட் கும்பரம வம்புயக்கண் ணேக்கி -
வுலகிலருள் செய்துபொன் னுலவுபத மருளுலீரே இந்த

காப்புலிகள் தரு

1-ம் பேர் வாலப் பிறைநுதல் மாதே - மட
வஞ்சியே நீமலங்காதே - மதன்
நூலைப் பகுத்துஇப் போதே - சேர
வுன்னுடை யகருத் தோதே

2-ம் பேர்: மாமையல் தீர்த்திடில் நாட்டி - லுன்னை
வைத்திடு வோந்தயை யூட்டி - இதற்
கோமென் றெமக்குரை யாட்டி - லுன்னை
யுய்யவிடோ மிந்தக் காட்டில்

1-ம் பேர்: மெத்தமெத் தப்பணந் தாறோம் - சிரம்
வெட்டா மலும்விட்டுப் போறோம் - உந்தன்
பத்தாவுக் கித்தொகை கூறோம் - மனப்
பட்சம்வை யாவிடில் தேறோம்

2-ம் பேர்: மின்னு மணிமுடி மன்னன் - உன்னை
வேசையென் றேசொல்லச் சொன்னான் - அது
தன்னை யறிவியோ வின்னம் - இப்போ
சம்மதி யேனுனக் கென்ன

1-ம் பேர்: சம்மதித்தால் நாமு முய்வோம் - இன்னுந்
தக்க வெகுமதி செய்வோம் — எம
திம்மொழி தட்டுகில் வைவோ - மல்லா
லிந்தவா ளாற்சிரங் கொய்வோம்

2-ம் பேர்: கொந்தவி ழுங்குழல் மானீர் - செழுங்
கோலவன் னக்குயில் தானீர் - நீரும்
இந்தவரும் பெருங் கானீர் - மத
யானையின் கைக்கரும் பானீர்

1-ம் பேர்: நங்கையே யெங்களைப் புல்லு - இப்போ
நல்ல மறுமொழி சொல்லு - சொல்லச்
சங்கையோ டேசற்றே நில்லு - அல்லால்
தானே வரும்பெரும் மல்லு

2ம் பேர்: எங்கள் மனப்படி சேரு - மல்லா
திங்கு தனித்தீரே நீரும் - எங்கள்
அங்கைதனி லொளி கூரும் - கொலை
யாயுதந் தன்னையே பாரும்

காப். கவி

இரங்கிநின்ற மடமாதே பகரக் கேளும்
எழில்ரூப சவுந்தரிய விச்சை யாலே
கரும்புவில்லி கணையுருவி யுள்ளம் வாடிக்
காதல்கொண்டோம் மாதேநீர் கலங்க வேண்டாம்
பொருந்திறவேற் கரத்தனுக்கு நாங்க ளேதும்
பொய்பகர்ந்து உனக்குவெகு பொருளுந் தந்து
சிரந்துணியா மலும்விடுவோ மெங்கள் கூடச்
சேருதற்கு நல்லமொழி செப்பு வாயே

கன்னி கவி

புலைஞர்களே யானாலும் புகலக் கேளும்
புலிபசித்த தென்றுபுல்லைப் புசிப்ப துண்டோ
சிலபூனை யாணாகி யிருந்தோர் பெட்டைச்
சிங்கமதை வெல்வதற்குத் திறமுண் டாமோ
உலகுபுரந் திடுமெனது கொழுந னுங்கட்
குரைத்திடுகட் டளைப்படிகொல் லுவதே யல்லால்
முலையெழுதண் டலையினில்நான் தனித்தே னென்று
முறைமைதப்பிப் பேசுகின்றாய் மோசந் தானே

காப். கவி

மோசமென்று வாய்பேசி மொய்குழல்நீ
சினந்துவெற்றி மொழிந்தா யிந்த
வாசவனத் திடையுனையாம் வருத்துகிலே
வங்கேட்க வருவ தாரோ
கூசுவதே துன்னையின்னுங் கொல்லுமுத
லணைவதற்குக் கூடு மெம்மால்
வீசமுடன் வளைந்திந்த மின்னனைகால்
கரம்பிடித்து வீழ்த்து வோமே

கன்னி இன்னிசை

கரங்கால் பிடித்திழுத்துக் கயவரஞ் செய்வதுகண்
டிரங்காயோ தெய்வீக ஏகபரன் மாதாதேவ
உரஞ்சேர் தவிதுதன்னை யோர்போது காத்தவந்த
வரம்போ லடியாட்கும் வந்துதவு மிவ்வேளை

தண். ரா. இன்னிசை

ஏகபரன் தாயே யிரங்குமி ரங்குமென்று
சோகமுறும் மின்னொருத்தி சொல்லுகுரற் கேட்குதங்கே
மாக மளாவும் வனமதனை யூடறுத்து
ஆக மகிழ வவட்குதவி செய்வேனே

சபை கவி

ஆதியந்த மளவிடொண்ணு அரூப ஞான
அம்பரன்மா தாவேநின் னருள்தா வென்று
ஓதிமம்போல் நடையாள்நின் றிரிங்கல் கேட்டே
உத்தமதண் டலைப்பதியா ளுரவோன் தேடிப்
போதுடைந்து முறுக்கவிழ்ந்து செழுந்தே னோடும்
பூங்காவை யூடறுத்துப் புகுந்தே அந்தத்
தீதர்களைச் சிரந்துணித்துக் கற்பு மாதைச்
சிறைவிடுத்து மனக்கவலை தீர்த்த தன்றே

கன்னி இன்னிசை

மங்கையென்னைப் பங்கமிட்ட வண்டர்களைத் துண்டமிட்டென்
சங்கைதன்னை காத்த தலைவா சகோதரனே
திங்கள் மிதித்தகன்னி திருக்கிருபை யுண்டாகப்
பங்கயப்பூம் பாதம் பணிந்தே னடியவளே

தண்டலைராயனுங் கன்னியுந் தரு

இரா: சின்னவிடை மின்னுபெடை யன்னமேதேனே
செங்கைகூப்பும் மங்கையேயென் தங்கையேகேளீர்
நின்னரும்பேர் என்னதாதை யன்னைதானெவ்வூர்
நீதியில்லாப் பாதகர்கள் சூதுசெய்வதேன்

கன்னி: அன்புபேசு மின்பநேச வென்பிறப்பேகேள்
அழகுலாவு எழில்கொள்ரோமை மிளிர்நகரந்தான்
என்பேர்ராச மங்கையர்தான் என்பரன்பர்தான்
யாரோர்பாவி யானதாலித் தானதாமையா

இரா:
செம்பவளக் கொம்பனைய விம்பவாயாரே
தேமருப்பூங் காவெழுரோ மாபுரியாளும்
எம்பரதோ ரிம்பலோகத் தம்பிரானுமோன்
எண்டிறிக்கு வென்றராயன் ஒண்டோடியோநீ

கன்னி:
நறைகொள்தாம லிறைவாவென் பிறவியேகேளீர்
நரர்கள்கோமா னுரிமையாளுல் வருவதேனிங்கே
பொறையிலேயோ ருறவில்லாதார் உறவுதானங்கோர்
போதமில்லான் சூதினலீ தானதாமையா

இரா:
மடமும்நெஞ்சிற் றிடமுமன்பு முடையமாதேநின்
மதியுறுஞ்சொல் நிதியுங்கண்டேன் அதிபர்வம்ஷம்நீ
அடர்பசும்பொன் குடமிலங்கும் சுடர்மணிக்கேவந்
தழகுதங்குங் குழவியொன்றுண் டதைவளர்ப்பீரே

கன்னி:
வாளுலாவு தோழுனர்கள் தாளிணைபோற்ற
மண்ணுலகா ளண்ணலேநின் புண்ணியமாக
ஏழையானுன் ஆளதாக மாளிகைமீது
ஏவல்செய்து சேயைவளர்த் தேயிருப்பேனே

இராயன் கலித்துறை

சந்தைப் புரட்டுந் தடக்கரிக் கோட்டுத் தனைக்கிரியைப்
பந்தைப் பகட்டும் பயோதரி யேயிந்தப் பாவைதன்னைக்
கந்தப் பொகுட்டலர் காவிடை துட்டரிற் காத்துவந்தேன்
நிந்தித் திடாமல்நம் சேயை வளர்க்க நியமிப்பாயே

தண்டலைராயன் தேவியுங் கன்னியுந்தரு

தண். தேவி:
வில்லார் தனத்தி ரத்தினக்
கல்லார் புயன்மகிழும் மானே — மட
நல்லாயுன் னூர் பெயர்நீ
சொல்லாய் யானறியத் தானே

கன்னி:
மல்லார் புயன் மருவும்
அல்லார் கருங்குழல்மின் னாரே — ரூமை
நல்லூர்ரா சாத்தி யென்று
எல்லோருங் கூறுவதென் பேரே

தண். தேவி:
பண்ணாரும் வாச மொழிப்
பெண்ணேயி ராசமடை மானே — நறு
கண்ணூர் வனத்தி லுல்லைப்
பண்ணுதை கோட்டிபண்ணு வானேன்

கன்னி:
ஒண்ணூர் மத மொடுக்கும்
மன்னாளி றைவன்மகிழ் மாதே — நானும்
அந்நாளிற் செய்த பவம்
எண்ணாமல் வந்ததிது வாமே

தண். தேவி:
பதுமா மலர்க் கமலத்
திருவே யிராச மடவீரே — கற்புத்
தருவாலக் கன்னி யேநிற்
குரியோனுன் டோவுரைசெய் வீரே

கன்னி:
விரை வாசக் கோதையரே
தரைமிது நீரிவைக ளெல்லாம் — கேட்க
வருகா ரியமென்ன யான்
புரிவேலை யேதுஞ் சொல்லு வீரே

தண். தேவி:
அழியா வரும்புகழ்ப் பைங்
கிளியே யுமதுகையில் நானே — எந்தன்
வழியிதைத் தந்தே னுகங்
களிகூர வைத்துவளர்ப் பீரே

கன்னி:
மொழி வாசப் பூவையரே
எழில்சேருன் பாலகனைத் தானே — யிப்போ
எளியா ளென திருகண்
மணிபோல வைத்துவளர்ப் பேனே

தண்டலைராயன் தம்பி மதிமதனும் தோழனும் வரவு
கவி

கதிரொளி யென்ன வன்னக் கனகருண் டலங்க டுன்னப்
புதுநுதற் றிலத மின்னப் பூம்பதச் சதங்கை பன்னப்
பதிநகர் வளமை காணப் பாங்கன்நற் குணனுங் கூட
மதிமதன் சபையின் மீது மகிழ்வொடு தோற்றி னனே

சபைத்தரு

செந்தாதுப் பணி பூண்டு—கரத்திற்
சிலைபிடித் தேவாகு வலயமிட்டு
சந்தன வன நாடன்—தம்பி
சபைதனி லேவந்து தோற்றினனே

செழுமலர்த் தொடை சூடி—பந்தொடு
சில்லடித் தேசிறு தேரோட்டி
வளமலி நகர் காண—விறல்செறி
மதிமதன் சபைவந்து தோற்றினனே

இரசபண் மொழி மின்னார்—சாமரம்
இரட்டச் சிலர்மலர்க்கை மருட்டமுந்நீர்
முரசமா மகன் நிகராய்—மதிமதன்
முயற்சி தருஞ்சபையில் தோற்றினனே

தோழன்தரு

துன்னுசமர் தன்னில்வரு மொன்னலர் நெஞ்சத்—திடை
　　துதையயி லெறிவில் சேர்ம திமதனேகேள்
வன்னமலர்ப் பொய்கையிது செந்நெல் வயலாம்—செழு
　　மாமலர்த் துடவையிது தேனருவி பார்

கள்ளவிழ்பூங் கோகனக மெல்லணையின் மேல் —அன்னங்
　　கண்டுயிலும் வென்றியும்பொன் வண்டிசை பாரீர்
துள்ளுவன்ன மாமயிலும் புள்ளி னங்களும்—வந்து
　　சோடுசோடாய்க் கூடிவிளை யாடுதல் பாரீர்

சந்தியங் காடியது சாவடி பாரீர்—தவத்
　　தாபதர் தெருப்பூபாலர் வீதியி தையா
பந்திலம் படைப்பரியின் பந்தி யிதுவாம்—கவி
　　பாடிடும்பா வாணர்பள்ளிக் கூடமிதுவாம்

மந்திரர்வீ டிதுசெட்டி வர்த்தகர்வீ டாம்—விலை
　　மாதர்கள் தெருவுமப்பா லாகுந் துரையே
வந்தபற்ப லாயுதப்போர் வன்மை பழக்கும்—அந்த
　　வாத்தியார் தெருவிதாகும் பார்த்திவ ரேறே

யதிமதன்கவி

எனதுயிர்த் தோழ னின வினியநற் குணனே கேளாய்
கனகநீள் தெருக்கள் தோறுங் கண்டக மகிழ்ச்சி யானேன்
சுனையரு கணையு மிந்தச் சோலைநிள் நிழல்நின் ருறி
அனைவரும் புகழு மெங்கள் அழகுமா ளிகைசெல் வோமே

தண்டலைராயன் தேவி இன்னிசை

மாதயவு மிக்கவளே மதலைதன்னை நீர்வளர்க்க
மேதினியி லுந்தனக்கு வேண்டுபல பொருளுருமிதோ
தீதகலென் பாலனைநின் சேயாக வைத்துவெகு
ஆதரவோ டேவளர்த்து அன்புற் றிருப்பீரே

முதலிராக்கதை முற்றும்

இரண்டாம் இராக்கதைத் தொடர்பு

கன்னி ஆராட்டுத் தரு

மீனூர் மவுலியிட்டு விண்மதிச்செ ருப்புத்தொட்டுப்
பானூர்கா முகங்கட்டும் பாவைபொற்ப தங்கும்பிட்டுக்
கோனூர் குலத்துதித்த குழந்தை தனக்குநல்ல
தேனு ரமுதுவெல்லம் சீனியுங்கற் கண்டோடின்னம்
அமுதாய்ப் பலவகையும் அருந்தப் புரிந்துநல்ல
சமுதாயப் பாலகனைத் தயவா யனதரித்து
வெந்நீர்குளிப் பாட்டிப்பூ வேந்தன்கு மாரனுக்கு
பன்னீர் களபகந்தப் பரிமளமெல் லாம்பூசி
முன்கைவளை யணிந்து முத்துவடங் கள்புனைந்து
தங்கக்காறை யரைஞான் சகல பணியுமிட்டுப்
பைம்பொற் பதக்கமிட்டுப் பரிவு முருகுதொட்டுச்
செம்பொற் றடியிணைக்குச் சிறந்த சதங்கைகட்டி
சுட்டிப்பட்டந் தரித்துச் சோடினை புரிந்துகண்ணின்
திட்டி கழித்துஎங்கள் தென்னவன் குமாரனைப்பூந்
தொட்டில்தனில் வளர்த்திச் சோபனமங் கலஞ்சொல்லிப்
பட்டில்வைத்துத் தாராட்டிப் பாலனைவளர்ப் பேனம்மா

மதிமதன் கலிப்பா

கரத்தி லேயொரு கான்முளை யேந்தியங்
　　காடியிற் செல்லுங் கன்னியாம் மன்னர்கோத்
திரத்தி லேவரு பூவைய ரோமதன்
　　தேவி யோவளர் சீதாங் கனியதோ
வரத்தி லேயுயர் வானத்த ரம்பையோ
　　வளர்ப சும்பொற் சிலையோ நுதல்விழிச்
சரத்தி லேயுரம் நொந்தேன் மின்னூர் பெயர்
　　நந்தைதா யெவை சாற்றுவை தோழனே

தோழன் கவி

இறைவனுன் றமையன் வேட்டைக் கேகுநா ளினர் கையாற்
சிறைதவிர்த் தழைத்து வந்து சிறுவனை வளர்க்கச் செய்தார்
முறையினிற் றவத்திற் கற்பு முத்திரைக் கொழுக்கந் தன்னிற்
பொறையினில் நிகரொவ் வாத புண்ணியப் பூவை தானே

மதிமதனும் கன்னியுந் தரு

மதிமதன் :
பெண்ணரசே சற்றே எண்ணமுருதே—உந்தன்
பேரூர் தனைவிளங்கச் சொல்லெடி

கன்னி :
எண்ணுமெ லென்னையென்ன சொன்னுய்தம்பி—நீயும்
எனது சகோதரத்துற் பவமல்லவோ

மதிமதன் :
நல்லாயிருக்கு தெல்லாம் சொல்லீதென்ன — நீயும்
நானுமொருவர் பெற்ற பாலகர்களோ

கன்னி :
அல்லாலுன் னண்ணனெந்தன் முன்னேனென்ருல்—நீயும்
அரியசகோதரத்திற் பெரிதல்லவோ

மதிமதன் :
எல்லா மறிவேனெடி சொல்லாதேநீ — யுனக்
கேறக்குறையப் பணந் தாறேனெடி

கன்னி :
நில்லா துலகிலிது பொல்லாங்கெடா — தேவ
நீதியறிந்து முனக்கி தென்னடா

மதிமதன் .
மானேயுன் பேரில்மைய லானேனெடி — யொரு
வார்த்தைசொல்லி யென்முகத்தைப் பார்த்திரங்கெடி

கன்னி :
தேனே சொரியுந்தொடை யோனேகேளாய் — இது
தீராவடு வம்பரர்க் கேராதெடா

மதிமதன் :
சற்றேயென் பேரிலன்பு வைத்தாயென்ருல் — அது
தன்மமல்லாது மெத்தக் கன்மமோடி

கன்னி :
கர்த்தா வெமக்குரைத்த புத்தாகமம் — தன்னைக்
கண்டாய்ந் திலேயோபித்தங் கொண்டாய்கோலமே

மதிமதன்:
முத்தேநற் செம்பவளக் கொத்தேமின்னே—யொரு
முத்தமாகி லுந்தாடி யெத்தாதேநீ

கன்னி:
மெத்தாகடிக மிவை நத்தாதேபோய்— நில்லு
விணுயுன் பேச்சிலொன்றுங் காணுதேடா

சபை கவி

மதுவழி பிணையல் மார்பன் வழுத்திய மொழிக்குக் கன்னி
இதுமொழி பகர்ந்து மாடத் தேகினு ளிறைவன் தம்பி
பொதுவழி தனிலே நின்று பூங்கணை மாரற் கஞ்சி
எதுவழி யிவளைச் சேர்வே னென்றுநின் றலம்பி னுனே

மதிமதன் கொச்சகத் தரு

மதிமதன் :
அம்பலத்தில் வந்தொருபெண் அஞ்சுவர்ணக் கிஞ்சுகம்போற்
கம்பலேப்பொன் நூபுரங்கள் கலகலெனப் போருளே
தம்பலத்தை வென்றவிதழ்த் தையல்தனைச் செய்யமலர்ச்
செம்பொன்மெத்தை மீதினிலே - என் - தோழனே தோழா
சேர்ந்துவினை யாடேனே

தோழன் : நல்லகாரியம் நல்லகாரியம் - சும்மா
நடந்திடுந் தோழனே நடந்திடும்
வல்லமுனிவன்சொன்ன சொல்லைநீர் - இன்று
மறந்திரோ வையாநீர் ரெழுந்திரும்

மதிமதன் :

சூட்டுமலர்க் கொந்தளகத் தோகைநல்லாள் வீதியில்நான்
கேட்டதற்குத் தப்புரைத்துக் கேகயம்போற் போருளே
பூட்டுகணைக் கைச்சிலைவேள் போர்புரிந்து என்னைமெத்த
கோட்டிகொள்ளக் கூத்தர்கையில் - என் - தோழனே தோழா
குரங்காகி னேனிலையே

தோழன் : நீயும்வீணில்மோகப் பேய்கொண்டாய் - அந்த
நேரிழை மாதரும் நெறியுள்ளார்
காய்கொள்விலகு கனியாமென்ற - தத்தை
காத்திருந் ததையொக்கும் பார்த்திவா

மதிமதன் :

அலைகடற்குந் தென்றலுக்கும் அன்றிலுக்கு மம்புலிக்கும்
மலைக்கரிய துல்லிருட்கும் வல்லபகை யில்லாமற்
கலைக்கிரணச் சந்திரமுகக் கன்னிசெழும் பொன்னின்மணி
முலைக்குடத்திற் சேரவொரு - என் - தோழனே தோழா
முத்தாகி னேனிலையே

தோழன் : இங்கேவாரு மெந்தன் தோழனே - எங்கள்
இறைவர்வங் கிஷத்துக்கு முறைமையிதோ
மங்கையிவள் மெஞ்ஞானக் கங்கையாம் - நீயும்
மதியீனந் தனையெண்ணி யலைகிறாய்

மதிமதன் :

நயத்தெயிற்றைப் பந்தைவில்வக் காயைவென்ற நாகமொத்த
குயத்தியொரு பேதையென்னைக் கோட்டிபண்ணிப் போருளே
முயற்சிதரும் பத்மமுக மோகனக மாதுதிருப்
புயத்திலழுந் திடுவதற்கோர் - என் - தோழனே தோழா
பூவாகி னேனிலையே

தோழன் : மானமுறையுந் தவஞானமும் - இன்று
மறந்தீரோ புன்மை யுறைந்தீரோ
சேனையாதிபன் றன்பாலனே - யுள்ளந்
தெளிந்துதா னையாநீ ரெழுந்திரும்

மதிமதன் : வந்தாளே தோழா மறுகில்வந்த கன்னிமுகம்
இந்தோ செழுங்கதிர்கண் டெழுந்தகஞ்ச மாமலரோ
கொந்தார் செழுங்கயல்நேர் கோலவிழிப்
[பூவையையான்
சந்தார்புய மழுந்த - என் - தோழனே தோழா
சப்ரமத்திற் சேரேனே

தோழன் தரு

மன்னவன் பின்னவனே - மதியிந்த
மட்டு மறிந்திலையோ
அந்நியரல்லாமல் நல்லோர்கள் - பெண்
ணுசையுங் கொள்ளுவரோ

தையல ராசையினு - லந்நாளிற்
றவிது மகராசன்
கையில்ந ரம்பெடுத்து - யாழொன்றினைக்
கட்டின தாய்ந்திலையோ

வாசமலர்த் தொடையான் - தவிதும
கன்சல மோனுவென்போன்
வேசைய ராசையினுல் - பவத்தில்
விழுந்த தறியீரோ

வருடி வனத்தூடே - வருமொரு
மங்கை பொருட்டாலே
கரடி முகமானுர் - தனியேலக்
காதையைக் கேட்டிலையோ

மன்னவன் செம்புறுணி - யானின்ற
மதலைவ லேந்திரியான்
இன்னேச கன்னியினு - லோர்போது
இறந்த தறியீரோ

மாது விரிசீதை - யெனுமந்த
மங்கை பொருட்டாலே
கோதுகப் பித்தானை - குருக்கள்முன்
கொன்ற தறியீரோ

நீனுவெனு மரசன் - செமிராமி
நேரிழை யாசையினுல்
மாநில மீதினிலே - வெட்டுண்டநல்
வண்மைநீர் கேட்டிலையோ

ஆய்ந்து பகர்ந்திடுகி - லக்காதை
யனந்தமுண் டல்லாமல்
காய்ந்த மணிமுடியே - நீர்தான்பத்தக்
கற்பனே கேட்டிலேயோ

வீதியி லேயிருந்து - புலம்புகில்
வேந்தர் குலக்குமரா
ஏதுபக ராரோ - நம்மாளிகைக்
கேகிட வாருமையா

மதிமதன் இன்னிசை

எத்தனைதான் சொன்னாலும் ஏதுவசை வந்தாலும்
முத்தனைய மூரல்திகழ் மொய்குழலை யான்மறவேன்
புத்தமுதை வென்றமொழிப் பூவைதன்னை மேவியெந்தன்
சித்தமுறச் சேர்ந்தொழியத் திரும்பியடி வையேனே

தோழன் கலித்துறை

குமரன் றனைவிட்டு நான்பிரிந் தால்மன்னன்
[கூப்பிட்டென்னை
எமதன்பு முந்தம்பி யெங்கெனக் கேட்ப ரினியவெங்கள்
தமரும் வசைசொல்வர் நிற்கினும் வந்திடச் சம்மதியான்
அமர்கொண்ட வீணன் தொகையொளித் தேநின் றறிகுவனே

சபை கவி

தோழனும் பிரிந்தா னந்தத் துய்யகான் ராயன் தம்பி
கேளலி லிருந்து மீன கேதனன் கருணை யால்நொந்
தேளனம் வாரா [வண்ணம் இணக்கிட வேண்டு மென்றே
வாளயில் நிகர்த்த கண்ணாள் மனைதனக் கேகி னளே

மதிமதன் தரு

தேனே சின்னமானே யெடி
செல்வமே மிக்க வெல்லமே - யுன்மேல்
மாநேச முற்றேனே கிட்ட
வாரும் முகம் பாரும்

சொன்ன மாமலை யென்னவார்முலை
தோகையே நல்ல ஓகைசேர் - சிறை
அன்ன நேர்நடை வன்னமேயெனையா
ளாக்கும் மையல் நீக்கும்

கரும்பே முல்லை யரும்பேயுன்னைக்
கண்டேன் மையல் கொண்டேன் - எடி
சுரும்பார் விழி திரும்பியொன்று
சொன்னால் கோடி பொன்னும்

மருவா ரணைக் கொருநேரம்நீர்
வந்தால் முத்தந் தந்தால் - மலர்த்
திருவேயிது தரும மென்னைச்
சேரு மன்பு கூரும்

கன்னி இன்னிசை

சாற்றரிய [வெந்தன் சகோதரனே யிங்கேவா
நேற்றுரைத்த வார்த்தைதன்னை நிறுத்திலையுன் சிந்தையிலே
நாற்றிசையும் போற்றுமும்மை நம்புகின்றே னெந்தனைநீர்
காப்பதன்றி யிவ்வார்த்தை கழறுதற்கு நீதியல்ல

மதிமதன் தரு

வனசமுக மாமயிலே - நானொரு
வார்த்தைசொல்லக் கேட்டருளும்
எனதுரைக்குச் சம்மதித்தா - லுனக்
கெத்தனைக்கும் பாய்க்கியந்தான்

முத்துவடஞ் சித்ரவன்னச் - செம்பொன்
மோகனக மாலைகளும்
கொத்துவன்னப் பிறைவடமும் - அன்னக்
கொப்புமணிக் கப்பணமும்

தாலிகளும் பிலிகளும் - நல்ல
தண்டைகளுங் குண்டலமும்
நீலமணிக் கோர்வைகளும் - பாத
நெருகிழிகளுங் கரவளையும்

சேலைகளுங் கோலவர்ணப் - பசுஞ்
சித்திரப்பூச் சட்டைகளும்
மாலைகளும் மோதிரமும் - உனக்கு
வகைவகையாய் நான்தருவேன்

இன்னமிது வல்லாமல் - இந்த
ராச்சியத்தோர் தானறிய
உன்னையெந்த னில்லவளாய்ப் - பெண்ணே
யுறுதிமணம் நான்முடிப்பேன்

மலைகளலை கின்றாலும் - கதிர்
மறுதிசையிற் சென்றாலும்
அலைகள்திட லானாலும் - என்சொல்
அழியாது கிளிமொழியே

காந்தனவ னில்லாத - அந்தக்
கனங்குழலார் கற்பவமென்
றுந்தரங்க முள்ளோர்கள் - மூந்நா
ளறைந்தமொழி கேட்டிலையோ

சிறுவயதில் நீயுமிங்கே - சும்மா
சிறையிருக்க நீதியென்ன
உறுதியிதற் கோருத்தாரம் - இப்போ
உரைத்திடுவீ ரொண்ணுதலே

கன்னி கவி

உரைக்கரு முறைமை யில்லான் ஒழுங்கில்லா னுனைப்போ
[லுண்டோ
தரைக்குள்நீ பலகா லின்னுஞ் சாற்றவும் முறைமை யாமோ
பரற்குரு வரசர்க் கின்று பாரினிற் பொறுத்தேன் மீண்டுந்
திருப்பியிங் குரைத்தால் மன்முன் செப்புவேன் திண்ணந் தானே

மதிமதன் தரு

வண்டு துதைந்திட மன்றல் தரும்பசு மாலையாள் - செய்த
வன்மங்கள் தீர வகையொன்று செய்குவேன் பாரும்
இன்றவ ளென்றன்னை மன்றல் புரிந்திடா தாலே - நானும்
இந்நில மீதவள் சென்னி யரிகுவிப் பேனே

ஆசை தணித்திடா ராசம டந்தையர் மேலே - மிகு
அல்ல லுறும்படி துல்லியம் நான்நினைந் தேனே
தேச மதிலவள் நேசமுடன் வளர்க் கின்ற - அந்தச்
சேயை வதைத்தவள் பேரிலெடுத்துவைப் பேனே

சொல்லு முனக்கொழுங் கில்லையெனப் பகர்ந் தாளே - என்னைத்
தோன்றல்முன் சொல்லித்துணிவிப்பேனென்றுஞ்சொன்னாளே
அல்லும் பகலு முளத்தி லிதுவன்ம மாச்சே - அந்த
ஆயிழை தன்னை யுபாயத்தி னல்வெல்லு வேனே

நத்த மதனிலே நித்திரை சோதித்து நானே - அந்த
நாரி வளர்க்கின்ற பாலக னைத்தடி வேனே
கத்தி யவளிடம் வைத்து இரத்தமுங் காட்டி - அந்தக்
கள்ளிசெய் தாளென்று வள்ள லிடம்பகர் வேனே

கன்னி தாழிசை

பாதி மதிசரண மிதி லுடையகிரு
பாகரி பரம மாமரி
பாரி லுமதுதவி கூரு நறைபெருகு
பதும பாததுணை நம்பினேன்
போது விரியுமலர் மோதுதண் டலையாள்
புரவலன் பின்னவ னுரைசெய்த
புகலருங் கொடுமை யகலவுங் கமல
பூக்கடைக்க ணருள் நோக்குவாய்
ஓது மெனதுநெறி நீதி கற்பரனை
உளங்களித் துன்கை யளித்தேன்யான்
ஒன்று மறிகிலென்முன் நின்று வருவினைக
ளுலக மிதினிலே விலகவே
மோது மிரசனியில் நீத விறையவர்கான்
முனையி னேடுமல ரணையிலே
மொழித ருங்குவனை விழிதுயின் றிடுவேன்
முதல்வியே புரியுன் னுதவியே

மதிமதன் இன்னிசை

கஞ்சமுக மாமயிலாள் கண்ணுறக்கங் கண்டறிந்தேன்
அஞ்சாமற் சென்றிரவில் ஆருமறி யாமல்
நெஞ்சம் மிகத்திடனுய் நிருபன் வளர்க்கவருள்
செஞ்சொன் மதலை சிரமரிந்து கொல்வேனே

சபை கவி

மதிமத னென்னு மந்த வஞ்சக னிராச மாஞர்
நிதிமணி மனையிற் சென்று நித்திரை சோதித் தந்த
கதிர்மணி மௌலி சூடுங் கானனு டிறைவன் சேயை
வதைபுரிந் தறியார் போல மன்னன்முன் பினிற்சென் ருனே

கன்னி திருவாசகம்

அனைத்தும் புரக்கும் பராபரியே அனைய பொருட்கும் மாதாவே
கனத்த புவியில் யான்புரிந்த கன்ம வகோரக் கொடுமையிதோ
எனக்குப் புரியாய்க் கினையிந்த ஏது மறியாப் பாலனிது
தனக்குப் புரிய நீதியுண்டோ தருமம் நிறைந்த சமுத்திரமே

திரைசூழ் புவியில் யானின்ற சேயி லதிகந் தயவாக
விரைசே ரமுது பால்பழமும் விரும்பி யூட்டி வளர்த்தேனே
உரைசேர் கண்ணே கண்மணியே யுனை நான் பரிந்து வளர்த்ததினல்
அரிய பலனித் தனைதூரம் அடியாள் பெறவந் ததுதானே

தானே யுனைப்பெற் றெடுத்ததந்தை தாயர்க் கினியா னேது
[சொல்வேன்
நானே யுனது தாதையர்க்கு நன்றி புரிந்த திவ்வளவோ
ஆனு லெனது கொடியகன்ம அகோர மிதுசெய் தாகுமந்தோ
தானு யுதித்த தயாபரன்றன் தாயே யெமக்குன் தஞ்சமம்மா

மதிமதன் இன்னிசை

அன்னேயென் ஆருயிரே அறைந்திடக்கேள் நீங்களந்தப்
பெண்ணு ளிராக்கினிபாற் பிள்ளைவளர்க் கக்கொடுத்தீர்
எண்ணுத நீலியவள் இரக்கமற்ப மில்லாமல்
கண்ணுன பாலகனைக் கழுத்தரிந்து கொன்ருளே

தண்டலைராயன் தரு

மலையதனிற் பிறந்தமரி பாலா — எமக்காக
மரக்குரிசி லிறைந்தமனுக் கோலா
அலையதனில் நனையாத காலா — தவம்மிகுந்த
ஆயிழையுஞ் சேயைவதைத் தாளோ

உலகிலிந்த மொழிசெவியிற் கேட்டே — எனதுசிந்தை
உலையிலிட்ட மெழுகதொப்ப தாச்சே
இலகுதர்ம நெறிகள் தவறுத — மடமாது
இந்தவகை செய்தாளோ பரனே

நேராத கோயிலெல்லாம் நேர்ந்து — நாங்கள்மெத்த
நெடுநாள் வருந்திமனங் கூர்ந்து
ஆராரும் புகழ்ந்திடப் பெற்றெடுத்த — மதலைதனக்
கம்புவியி லிதுவரமோ பரனே

காராழிக் கடலதனை யுடுத்த — புவியிலெட்டுக்
கருபமுந்தன் புகழ்விசயங் காட்டி
ஓராளி செலுத்துவதற் குரிய — மதலைதனக்
கொண்ணுதலிக் கொடுமைபுரிந் தாளோ

முன்னேர்கள் தான்புரிந்த தீதோ — எனதுசெங்கோல்
முறையதனிற் றவறுகண்ட தேதோ
பின்னேது கொடுமைகள்செய் தேனே — எனதுதவப்
பிள்ளைதனக் கிதுவருமோ பரனே

என்னுயி தாதையைவை தேனே — புவியில்வந்த
எளியோர்கள் பசிதீர்த்தே னிலையோ
மின்னு ரிராசமட மாது — மதலைதன்னை
வெட்டமனந் தொட்டதென்ன பரனே

ஆசையுடன் நான்புவியி லீன்ற — எமதுதிரு
அழகுதவ மதலைதன்னைக் காண
வாசமென்ன ராசமட மாஞர் — இருக்குமந்த
மாளிகைக்கு ஏகிடுவோம் வாரும்

தண்டலைராயன் தேவி தரு

ஐயையோ வென்னருமை மகனுரே — யும்மை
யாகடிக மாரு புரிந்தாரோ
வையகத்தி லுய்யவும்மை நானே — மெத்த
வருந்தித் தவம்புரிந்தின்னம் பெற்றேனே

புத்திரன்நீ ரல்லாம லின்று — வேறு
பூதலத்திற் சேயர்வேரு முண்டு
சித்தம்மிக வுருகுதே யையையோ — நானும்
தேனுலகி லேதுவகை செய்வேன்

ஆருமக்கு வினையாக விருந்தார் - நீரு
மார்வளவி லேகளவு புரிந்தீர்
வார்முலையாள் ராசமட மங்கை - யும்மை
வதைக்கமனம் வந்ததுவோ செங்கை

இந்தரையி லுந்தனைவா ளோங்கிச் - சற்று
மிரங்காம லரிந்தாளோ பாங்கி
சந்திரனை மிதித்தகன்னி மரியே - எனக்குந்
தயவுசெய்து நயமுறத்தா பரியே

தண்டலைராயன் இன்னிசை

தாபரிக்கு மேக தயாபரன்றன் தஞ்சமுண்டு
பூவரிக்கண் மாதே புலம்பியழு தென்னசெய்வோம்
தேவரீர்நம் யேசுநசர் தீங்ககற்றித் தற்காப்பார்
மாமரிதன் மூலையத்தில் மகிதானஞ் செய்திடுவோம்

மதிமதன் தரு

சொல்லக் கேளுமென் முன்னவ னேயெங்கள்
தோன்றல்தன்னை வதைத்தது மந்த
வல்ல நிலி யதற்கடை யாளம்நீர்
வாரும்நா னெப்பு விப்பேன் மகிபா

கன்னி மூவருண் டாரெனக் கேளும்
கன்னியுந் தொழு கன்னி யெனவும்
வின்ளு மாசாரக் கன்னியிம் மூன்று
விதங்கள் காண்பெண் பிறந்தவர் கட்கே

நாணி நின்றவள் பேசுகின் றுளென்று
நம்பிநீ ரந்த வம்பியை வைத்தாற்
காண மெல்லெனப் பாய்புனல் தான்கருங்
கல்லு ருவுமச் சொல்லறி யீரோ

வஞ்சி யிங்கிவள் வஞ்சகி மெத்த
மடைமு கத்திற்கு ருகிவ ளண்ணே
விஞ்சு காக்கைக் கிடங்கொடுத் தன்னமும்
வீந்த காதைக ளாய்ந்தறி யீரோ

கத்தி யொன்றவள் வைத்து இருப்பது
கண்டி டும்உடுக் கின்ற துகிலில்
ரத்தந் தோய்ந்து கிடப்பது பாரும்
நினைப்ப தாரை யினிப்புவி ராயா

மாது தானிந்தத் தீது புரிந்தது
மாநி லத்திலுள் ளோரி தறிய
மோது சென்னி யரிகுவிப் பாயது
மோசு மில்லை யிராசவொய் யாரா

தண்டலைராயன் கவி

வனமலர்க் குழலே ராச மடந்தையே யுரைக்கக் கேளாய்
எனதுபுத் திரனை யுன்கையினில்வளர்த் திடத்தந் தேன்நான்
தனையனை வதைத்தல் நீயோ தரையில்வே றுருந் தானோ
உனையறி யாது வாரா துரைத்திடா யுலகிற் றுனே

கன்னி இன்னிசை

எந்தன் சகோதரனே எனக்குநீர் செய்தநன்றிக்
குந்தனக்கு யான்புரிந்த வுபகார மீதாகும்
மைந்தனை நான் வைத்திருக்கில் வதைத்திடுவ தார்புவியில்
எந்தன் பிழையாகு மிறைவாநிஞ் சம்மதியே

தண்டலைராயன் தரு

கன்னியிவள் தன்பேச்சுங் கருத்தும் நெறியுங்கண்டு
என்னவுறுதி கொண்டிங் கிவளை நான் கொல்வேன்
வன்னவிழி மாதிங்கு வந்தநாள் முதலாகச்
செந்நெல் விளைந்துநன்ருய்ச் செழிக்குதென் தேசம்

தானந் தவமும் நன்மைத் தனமுங் குணமும் வெகு
மானங் களுமென் நாட்டில் வழங்குவித் தாளே
ஞானந் திகழுங் கற்பு நங்கை மகனுக் கிந்த
ஈனஞ் செய்தா ளென்று எவ்வகை சொல்வேனே

சிந்தை வாக்கினுலுஞ் செலுத்துங் கிரியையாலும்
இந்தமட மாதிடத் தெய்துமோ பாவம்
அந்த முறுங் கருமம் ஆராய்ந்து புரியாதார்
பிந்தச் சலிப்பரென்று பேசுவார் பெரியோர்

தம்பிபேச்சைக் கேட்டுத் தவத்தில் மிகுத்தவந்த
விம்பவிதழ் மின்னுரை வெட்டுதல் பாவம்
வம்பதகல வெந்தன் மனையிலிருந் தெந்நாளும்
நம்பிப் பிழைக்கட்டாதி நன்மையுண் டாமே

மதிமதன் தரு

கொந்தவி ழலங்கல்மார்பா - அழகுதிகழ்
கோகனகச் சீதளமென் பூவதனேகேள்
சந்தணி புயவொய்யாரா - புவியிலுந்தன்
றன்னிடத்தி லின்னமொரு விண்ணப்பமையா

சுந்தரம டந்தையிவள்தான் - அவள்பிறந்த
சொந்தவூர்விட் டிந்தவூரில் வந்ததேதையா
அந்தநக ரங்கள்தன்னிலும் - இவள்புரிந்த
அட்டாதுட்டி கண்டுதீர்வை யிட்டதிவட்குக்

கொண்டுவந்தார் மண்டுவனத்தில் - அப்போதவர்கள்
கொல்லவிடா தல்லவோநீர் நல்லதுசெய்நீர்
கண்டுமக்கு நன்றிபுரிந்தாள் - அதேதெனிலும்
கான்முளையைத் தானுலகி லேவதைசெய்நாள்

வஞ்சியிந்த ரண்டகஞ்செய்து - உமக்கொளித்து
வைத்திருந்த கத்தியொப்பு வித்தேனமன்ன
இன்றுமின்னம் நம்பவில்லைநீர் - அவளுடைய
எற்றுமொழிக் குற்றுமதி யற்றீரோவண்ணே

மங்கையிவ ளிங்கேயிருந்தால் - புவியிலின்னம்
மாறுபாட தானவவ தூறுகள்செய்வாள்
பங்கமற வுங்கைவசியால் - துணித்திடுகிற்
பட்டணமும் மட்டடங்குந் திட்டமீதண்ணே

தன். இரா. இன்னிசை

என்னதான்நீ சொன்னலும் எனதுமனம் நம்பரிதாம்
உன்னுதவநீதி ஒழுங்குமுள்ளா னாகையினுல்
கன்னியிவள் செய்ததனைக் கண்ணுரைக் கண்டிலையால்
மன்னுமொரு புத்தியெந்தன் மந்திரியே சொல்வாயே

மந். தரு

அம்புவியாள் மன்னவனே - ஒரு
ஆங்கருமம் கேட்டருளும்
தம்பிசொன்ன பேச்சைநம்பிப் - புத்தித்
தாழ்ச்சிபண்ண வேண்டாமையா

பொறையறிவு நெறிமுறையும் - உள்ள
பூவையிவ ளாகையினால்
இறையவனே மதலைதன்னைக் - கொன்ற
திவளெனச்சொல் லுவதரிதாம்

நடவரையில் வீண்பழிறு - வுந்தன்
தம்பிசொல்லும் வார்த்தையெல்லாம்
அடலரசே பொய்முறையாற் - சூத
ராலடவரைக் கொண்டிலையோ

பெற்றவளில் மும்மடங்காய் - அந்தப்
பிள்ளைதன்னை யிவள்வளர்த்தாள்
சுற்றவனே யொருபோதும் - இந்தக்
கன்னிகையால் வந்ததல்ல

பெரியகுலந் தோர்க்கழகு - செய்த
பிழைபொறுத்த லாகுமென்று
அரியதமிழ்ப் பண்டிதநூல் - தன்னை
யண்ணலேநீர் கேட்டிலையோ

ஆகிலும்பெண் பேதைதன்னைக் - கொல்லி
லரியசுதன் வந்திடுமோ
தோகைதன்னைக் கொல்லாமல் - சும்மா
துரத்திவிடும் மன்னவனே

தன். ரா. கவி

புத்திரன் றன்னை யிந்தப் பூவைதான் கொன்ற ளென்று
எத்தனை தான்சொன் னாலும் யானதை நம்பி யேதான்
உத்தர வருளேன் கொல்ல வுறுவனந் தன்னி லேற்றத்
தத்துவ வமைச்சே கப்பற் றலைவனை யழைத்தி டாயே

கப்பற்காரன் வரவு

கவி

மரகதம் பவளம் முத்து மாணிக்கம் வைரம் நீலம்
கரிமருப் பொடுபட்டாடை கடைச்சரக் கினங்க ளெல்லாம்
இரைகட லோடந் தன்னி லேற்றிவியா பாரஞ் செய்யும்
உரிசைசேர் கப்பற் காரன் மன்னர்சொற் படிவந்தானே

கப்பற்காரன் தரு

சந்தனத்தா லேராவைத்து — ஏலேலோம்
சாதியினால் வங்குதைத்து — ஏலேலோம்
கொந்தவிழ்க்குங் குமமரத்தால் — ஏலேலோம்
குலவுபலகைகள் சேர்த்து — ஏலேலோம்
சித்தைமகிழ் வெள்ளியா லாணிக ளறைந்து
தேவதா ரத்தினாற் பாய்மரம் நிறுத்தி
விந்தைசெறி தங்கநூற் பாய்தனை விரித்து
விரைவோடு தரைமீது வருகுதே கப்பல் —
ஏல ஏலோம் ஏல ஏலோம்

நவமணியும் பலசரக்கும் — ஏலேலோம்
நறைகமழும் பரிமளமும் — ஏலேலோம்
புவனமகிழ் புனித பட்டும் — ஏலேலோம்
பொருகரட கரிமருப்பும் — ஏலேலோம்
கவரிமான் மயிருமுயர் கானவரி யுகிரும்
கண்ணாடி சிமிழ்வெண் கலப்பாத்ர வகையும்
தவறகல மேற்றுவித் ததிகபொருள் தேடத்
தக்கதிரை மீதோடு மிக்கநம் கப்பல் —
ஏல ஏலோம் ஏல ஏலோம்

ஓடைமலைத் தளமுண்டெடா — அடடா
வுயர்ந்தசல்லிக் களமுண்டெடா — அடடா
வாடையில்நீர் வாடுதெடா — அடடா
வளர்கோசி லோடுதெடா — அடடா
சாடிட விடாமலே நேர்சரிய தாகத்
தள்ளடா தாமானில் நில்லடா விருபேர்
கோடைவிழு மோவெனக் கொம்பாசு பாரடா
கூறரிய சுக்கானை மாறுது பிடியும் —
ஏல ஏலோம் ஏல ஏலோம்

கொண்டலிலே மின்னுதெடா — அடடா
குடதிசையி லிருளுதெடா — அடடா
மண்டிமழை வருகுதெடா — அடடா
வடகாற்று விழுகுதெடா — அடடா

தெண்டிரை யெறிந்துதன் ணீர்போடு தேடா
திட்டாந்த மோடுதிசை தப்பாமல் விடெடா
இன்றுசிந் தாத்திரைமா தாவுக்கு நேரெடா
இப்புவியி லேநமது கப்பல்கரை சேர —
— ஏல ஏலோம் ஏல ஏலோம்

தண்டலையை யாண்டிருக்கும் — ஏலே
தலைவரெம்மை யழைத்தாரெடா — ஏலே
மண்டுகரை தெரியுதெடா — ஏலே
மணிமுழவங் கேட்கு தெடா — ஏலே
வென்றிசெறி கோபுரக் கொடிதோற்று தேடா
மேவுதுறை முகமிதாம் பாய்மர மிறக்கெடா
எண்டிசையு மகிழ்மதிட் பாலத்தி னருகாக
எல்லைமகிழ் கப்பலிற் கல்லுவைப் பீர்கள் —
— ஏல ஏலோம்

கப்பற் காரன் கவி

கானநா டதனை யாளுங் காவலர் கோவே யுந்தன்
தேனவர் கமல மென்பூஞ் சீர்பதம் போற்றி போற்றி
ஈனமில் கப்பற் காரர் எம்மைநின் சமுக முன்பு
மானமுற் றழைத்த செய்தி வழுத்துவீர் மன்னர் கோவே

தண். ராய. கவி

கப்பற்கா ரர்களே யுங்கள் கவின்மரக் கலத்தி லிந்த
ஒப்பரும் மாதை யேற்றி யொருகரைத் தீவு தன்னில்
தப்பறப் போட்டு வேறூர் தவறுகள் புரியா வண்ணம்
செப்புவீர் மீண்டு வந்திச் செகதிசை யறியத் தானே

கப்பற் காரன் கலித்துறை

தானைத் தலைவர்க் கிறைவாநின் சொற்படி தக்கவிந்த
மானைப் புதிய மரக்கலத் தேற்றி வனத்தில் விட்டுத்
தேனைச்சொரிதொடைத் திண்புய நின்னிடஞ்செப்பிடுவோம்
கானைப் பொருத குழலே நடவுநங் கப்பலுக்கே

கன்னி தரு

பரனே பரிசுத்தனே — பங்கயச் செம்பொற்
பதனே பரமத்தனே — பைங்கழை தங்கும்
கரனே மரிபுத்ரனே — எனது பாவக்
கசடே தவிர்கர்த்தனே

இறையா மெனதுபத்தா — எண்டி ரிக்குக்
கிளையோ னலகையெத்தால் — அங்கவன்
[சொன்ன
குறையா லெனையொப்பித்தான் — அவன்றன் பாவக்
கொடிதே பொறுங்கர்த்தனே

உரியோன் வெகுசினத்தால் — ஒன்னலர் கையி
லுடனே கொலவொப்பித்தான்—உன்றயை செய்து
அரியா தெனைரெட்சித்தாய் — இன்னமு முந்தன்
அருளே புரிகர்த்தனே

கொடியோர் வினைதப்பித்தான் — தண்டலை மன்னன்
கொடுபோய்ச் சேயையொப்பித்தான் —
கொற்றவன் றம்பி
படிமீ தெனைநத்தித்தாய் — பாலனைக் கொன்ற
பவமே பொறுங்கர்த்தனே

இறைவர் செனனத்திலே — என்னைப்போற் பாவி
யிலையே யுலகத்திலே — எங்கெனு மிந்த
முறையோ வெனைரெட்சித்தே — யாளுவா யாதி
முதலோர் தொழுங்கர்த்தனே

கப்பற்காரனுங் கன்னியுந்தரு

கப்பற்காரன்:

அன்னநடை மானே — செந்தேனே
யமுதே யணங்கரசே
கன்னல்மொழி மாதே — நீர்நின்று
கலங்கவும் காரியமேன்

முன்ன மிருந்ததிலும் — நற்பாக்கியம்
மும்மடங் காய்த்தருவேன்
என்னுே டிணங்குதற்கு — நல்வார்த்தை
யியம்புவி ரேந்திழையே

கன்னி:

மன்னர்மகிழ் மகிபா — நீர்சத்திய
மாமறை யோனல்லவோ
இன்னமொழி யுரைக்க — வுன்னுக
மிசைந்ததோ வென்பிறப்பே
கன்னியர் கற்புநெறி — பெரியவர்
காக்கும் முறைகாத்தால்
அன்னைமரி யருளா — லுமக்கு
மநேக மகிமையுண்டாம்

கப்பற்காரன்:

உண்டது நானறிவேன் — இப்புத்திக
ளுன்னிடங் கேட்கவில்லை
கொண்டமையல் தணித்தா — லுனக்கும்
குறையில்லை யல்லாது
வண்டுளர் பூங்குழலே — பெண்ணேசிறு
வஞ்சியே நீதனித்தாய்
தெண்டிரை மீதுனையா — னெறிவது
திண்ண மினித்தானே

கன்னி: மண்டல வர்த்தகனே - என்னண்ணே
மரக்கல னேகேளாய்
அண்டர்பரன் மறைக்காய் - மின்னுர்க
ளநேக ரிறந்திலையோ
இன்றுன்னைக் கைகுவித்தே - னென்கற்புக்
கிடறுகள் பண்ணுமல்
வெண்டரளக் கடலில் எறிந்திடல்
மெத்தவும் புண்ணியங்காண்

கப்பற்காரன்:

புண்ணிய மென்றுசொல்லி - மாய்மாலம்
புரிந்துப கட்டாதே
பெண்ணணி விளங்கிளியே - நீயாகிலும்
பேச்சுக்கு வல்லவிதான்
மண்ணிலென் சொல்லிதெல்லாம் - வீணென்று
மனதில் நினையாதே
தண்ணீர்வெகு தாழ்வு - அறிந்துநீ
சம்மதி யெந்தனக்கே

கன்னி: அண்ணேகேள் மீகாமா - எமது
அதர்ம விடர்வினைக்காய்
விண்ணுல கம்பரனுர் - புவியினில்
வேண்டிய பாடுபட்டார்
எண்ணரும் பெண்பேதை - யெனை நீ
ரெதுவிதஞ் செய்தாலும்
நண்ணிநான் கையேர்ப்பே - னிவ்வண்ணம்
நவின்றிடில் மாபாவம்

கப்பற்காரன்:

பாவமென மொழிந்தாய் — மோகத்திற்
பழகி யிருந்தவந்தப்
பூவை மதலேனுள் - தனக்குப்
பொறுதி கிடைத்திலையோ
கோவை யிதழ்மாதே - யுந்தாளினை
கும்பிட்டுக் கொண்டேன்யான்
ஏவைவிழி யாளே - யென்பேச்சுக்
யிணங்குநீ தட்டாதே

கன்னி: மாவை வசீகரனே - மெய்வேத
வளமை யறியீரோ
பாவை பவம்புரிந்தா - ளறிந்து
பரனை யடிபணிந்தாள்
தேவை யறிந்திருந்து - மவர்சொல்
திருமொழி கேட்டிருந்தும்
ஆவை மரிசுதனுக் - கேராதுசெய்
யக்கினி புக்குவரே

கப்பற்காரன் கவி

அக்கினி புகுவே னென்று அதட்டிநீ வெருட்ட வேண்டாம்
செக்கர்வா னுதிக்கும் பிள்ளைத் திங்கள்போல் நுதல்மின்
[னுரே
தக்கவென் னுரைக்குச் சற்றே சம்மதி யல்லலா தாகில்
இக்கணங் கடலிற் றாக்கி யெறிவது திண்ணந் தானே

கன்னி இன்னிசை

அற்புதன்றன் ருயே யருட்கடலே மெய்த்தரும
தற்பரமே யேழைகள்தன் தஞ்சமே தாபரமே
பற்பலவா பத்தில்ரெட்சை பண்ணினி ரின்றுமெ தன்
கற்பிட ருருமலெனைக் காத்தருளு மாத்தாளே

சபை கவி

தவமயி லிரந்து நிற்குந் தகைமையுந் தோணிக் காரன்
அவகட நினைவுங் கண்டு அணைமரி கருணை கூர்ந்து
நவசபை தன்னை நோக்கி நவிலுசம் மனசொன் றந்தத்
துவரிதழ் மடமான் நிற்குந் தோணிமீ துற்ற தன்றே

சம்மனசு தரு

ஆதியே காதி பரம - ஆதிகா ரணனே
ஆறிலக் கணு கருணை - யாழியா னவனே
சோதியே யளவில் லாத - நீதிநா யகனே
சுத்த நித்த கர்த்தனுன - சத்தியநா யகனே

தேவுமய மான மனுத் - தேகயோ கனுமாய்த்
தேகமில்லான் தானு மான - ஏசுநா யகனே
தூவுமா மலர்ப்ப தத்துக் - கேபுகழ்ச் சியே
தோத்திரந் தினந்தி னமும் - போற்றி போற்றியே

கற்புராச கன்னி யென்னும் - பொற்கொ டியாரைக்
கப்பலாளன் சொன்ன வஞ்சத் - தப்பு ருமலே
அற்புதம தாய்வி லக்கி - நற்புரை கூற
ஆதிநா யகன னுப்பு - தூதுவன் நாமே

பேதை தன்னைப் பாதகர்செய் - தீதுருமலே
பேதமற்றெப் போதும் நின்று - பாது காக்கவே
வேதஞான போத னுதன் - ஏவு வண்ணமே
மெய்ப்பு லாவு கப்பல் மீது - பொற்புறச் செல்வேன்

சம்மனசு வசனம்

அம்பரம் புவியும் மிக்க அதிகநன் நீதி சேரும்
வம்பக விராச மாதே மனதினிற் பயப்ப டாதே
இம்பரி லுனக்கு யாதோ ரிடறுக ளணுகா வண்ணம்
தம்பமாய்ப் புரக்கு மேக தயாபரி தஞ்ச முண்டாம்

தன்செய விழந்து செந்தீத் தழலினில் மூழ்கும் பொல்லா
வஞ்சக அலகை மாய வலையினி லுழல்மி காமா
பஞ்சனை யடிநல் லார்முன் பகர்பிழை யிரந்து கொள்வாய்
செஞ்சுடர்க் கிரண பாதத் தேவனைப் புகழ்ச்சி செய்வாய்

செய்யகற் புடைய ராச செல்வியே யுனக்கு நாளும்
வையகத் ததிக கீர்த்தி மகிமையு மிகவுண் டாகும்
மெய்யிது தனிமை நீங்கும் விளங்குபூங் காவி லெய்த
உய்யநற் றுணையாய் நிற்பேன் உம்பர்கோன் கருணை யீதே

கன்னி திருவாசகம்

ஆதியே போற்றி யநாதிகா ரணமா
யனைத்தையும் புரப்பவா போற்றி
அளவில்லா ஞானக் கருணையங் கடலே
அடியினை போற்றியே போற்றி
சோதியே போற்றி நீதிசேர் மூன்று
சுடரொளி யானவா போற்றி
தொல்புவி தனிலென் வல்வினைப் பாவத்
தொடரறுத் தாட்கொள்பவா போற்றி

கோதிலா விடையர் சேரியிற் கோவின்
குடிலினி லுதித்தவா போற்றி
கொடுமைசேர் கடிகள் துடிமத மொடுக்கும்
கொற்றசற் குருபரா போற்றி
பேதையென் றனக்கித் தனையுப காரப்
பேறுதந் தாள்பவா போற்றி
பிறங்குநற் கருணை நிறைந்தநித் தியமே
பேரின்ப நாதனே போற்றி

கப்பற்காரன் இன்னிசை

போற்றிசெய்யம் பரன்றயைசேர் புண்ணியகற் பாரணங்கே
சாற்றுவரப் பிரசாதத் தாவேச கோதரியே
நாற்றிசையி லறியாமல் நான்புரிந்த குற்றமெல்லாம்
தேற்றிமனம் பொறுத்தருளும் சீர்பாதம் போற்றிசெய்தேன்

கன்னியுங் கப்பற்காரனுந் தரு

கன்னி :

இங்குய ரன்பு பகர்ந்தமீ காமனே கேளும் - பர
ஏக தயாபர சோதியைப் போற்றிசெய் நாளும்

கப். காரன் :

பொங்குமெய்ஞ் ஞானம் நிறைந்திடு பூவையே யேனை - [சொன்ன
புத்தியி னத்தைப் பொறுத்துக்கொள் வீரிது வேளை

கன்னி :

மேவுமென் பாவஞ்செய் தாமிது நீரென்ன செய்வீர் - இனி
மேல்நன்மை யாய்நடந் தாலுண்மைப் பேறுபெற் [றும்வீர்

கப். காரன் :

தேவத யாபர மேவிய பூவையே யம்மால் - எந்தன்
தீவினை நீங்கியுப் தேனுல கானதி லம்மா

கன்னி :

வண்மை செறிந்தவென் னண்ணேமீ காமனே நீரே - சொல்
வனத்திடை மன்ன னுரைப்படி விட்டிடு வீரே

கப். காரன் :

உண்மை செறிந்திடு கன்னிகை யேவனத் தின்று - விட
வொண்ணுமோ நின்னருட் புண்ணியப் பேறுகள் கண்டு

கன்னி :

காரண ஞானக் கடவுள் துணையெனக் காகும் - என்னைக்
காட்டி லிறக்கிவிட் டேற்ற முடன்நகர்க் கேகும்

கப். காரன் :

தாரணி மீதிலென் தாயி லதிதய வுள்ள - எந்தன்
தங்கையே ரேவனத் திங்குமை யெப்படித் தள்ள

கன்னி இன்னிசை

உன்னுமரக் கலனேமன் னுரைத்தபடி வனத்தில்விடா
தென்னைமறு நகர்சேர்க்கி லேந்தலும்மைக் காய்ந்திடுவார்
அன்னைமரி யுபகார மடியாளுக் குண்டுலகில்
மன்னுமலர்க் காவில்விட்டும் மாநகர்க்குச் செல்வீரே

கப்பற்காரன் இன்னிசை

செல்வமிகுஞ் சகோதரியே சிறந்தகப்ப லாலிறங்கி
வல்லபரன் கருணைபெற்று மாநிலத்தில் வாழ்ந்திருப்பீர்
புல்லனெந்தன் வினையகன்றும் புண்ணியத்தால் நன்மைபெற்றேன்
எல்லையிலும் பதம்போற்றி யெனதுநகர் செல்வேனே

கன்னி இன்னிசை

காந்தனினை யோனுலுங் காப்பிலிக ளாலுமற்ற
வேந்தர்பின்னே னுலுமிந்த மீகாமன் றன்னாலும்
ஏந்திழையென் கற்புக் கிடறணுகா திரட்சைசெய்தாய்
ஆர்ந்தவிந்தக் காட்டிலுமுன் னடைக்கலமென் மாதாவே

கன்னி கொச்சகத் தரு

கொச் :

விரைசேர்மலரும் பாசடையும் மிகுமஞ்சரியுங் கருகாமல்
எரிசேர்தருவிற் பிரபையெழ ஏகசுதனைக் கரத்தேந்தி
வருமாமுனிமோ சேதனக்கு மகிழ்ந்துகாட்சி புரிந்தவளே - ஆதி

தரு : பரமதிவ்ய ரூசைப் பூவே - கற்புப்
பாவையர்க் கெல்லாமோர் கோவே - தேவ
இரசமது வார்பூங் காவே - ஏழைக்
கிரங்குவாய் தேவமா தாவே

கொச்ச :

கனகச்சுடர்மா முடிபுனையென் காந்தன்ரூமை யெம்பரதோர்
பின்னவனெனவீ ணவதூறு பேசவிறைவன் வேசையென்று
அனீதமழுவ ரிடத்தளிக்க அடர்வெங்கானி லவர்கள்செய்த - வஞ்ச

தரு : வினையகற்றி யென்னை யாண்டீர் - முடி
வேந்தனினை யோனல் மீண்டீர் - என்றுந்
தனைநிகரில் லானை வேண்டி - யருள்
தாரும்மா தாவேதாள் பூண்டேன்

கொச்ச :

அரங்கத்திருந்து தண்டலைநா டாளுமிறைவன் கட்டளைக்குத்
தரங்கக்கடலி லூருவோட்டுந் தருமிகாமன் தவறனுகா
திரங்கிப்புகழ்வா னஞ்சுதன்னை யேவிநவஞ்செய் தெனைக்காத்த
[- நன்மை

தரு : வரங்குலவு மரியம் மாளே - எந்தன்
மனத்துயர் தீர்த்திடு மிவ்வேளை - உந்தன்
அருங்கமலச் செம்பொற் ருளை - நித்திய
அடைக்கலம் புகுந்தே னேளை

கொச்ச :

அரியும்புலியுங் கடகரியும் அடருங்கடுவா யோனும்
சரியுங்காவி லொருபேதை தமியாள்வகையென் செய்வேனே
புரியுங்கிருபைத் தயாபரியாய்ப் புகழ்மூவுலகும் போற்றிசெய்ய
[- வந்த

தரு : மரியகன்னி யேமுன்னின்று - கூளி
வல்வினையந் தன்னை வென்று - தேவ
உரிமைபெற் றிரக்ஷை கொண்டு - எனக்
குதவிசெய்ய வேணு மின்று

கொச்ச :

காட்டிலிலையுங் காய்கனியுங் கருதுங்கிழங்கும் மழைநீரும்
ஊட்டவுணவாய்த் தந்துநித்தம் உதவிக்கிருபை புரிந்தவளே
ஈட்டமுடனுன் புரிதருமம் இல்லையெனக்குன் விருகமலச்
[- செம்பொற்

தரு : ருட்டுணைகள் தஞ்சந் தாயே - யிந்தச்
சமையமருள் தந்தாள் நீயே - அம்மா
நீட்டுபர மாதி சேயே - யுந்தன்
திருக்கடைக்கண் ணேக்கு வாயே

சபை கவி

முத்துறழ் நகையார் காட்டில் முறைவளர்ந் திருந்தா ளன்புற்
றித்தரை யனைத்துங் காக்கும் எம்பர தோரெண் டிநிக்கு
நித்திய கற்பு மாதை நீதிகே ளாமற் செய்த
புத்தியீ னத்தை யோர்ந்து சிலமொழி புகலு வாரே

எண்டிறீக்கு எம்பரதோர் தரு

தன்னிகரில் லாதவனே - யாதி
தந்தைசுத னுனவனே
இந்நிலத்தி லடியேன் - தன்னை
யீடேற்ற வேண்டுமையா

சிறுவயதில் முறைவழுவா - மன்றல்
செய்திருந்த தையலவள்
நிறைதவமும் பொறையறிவும் - கன்ம
நெறியினுமா வுறுதியுள்ளாள்

வதுவைசெய்து இதுவரையுந் - தன்ம
வழிதவருக் கிளிமொழியாள்
மதியிலிந்தப் பவம்நினைந்த - தென்ன
வகையிதுவோ விறையவனே

தையலுமோ நீதியுள்ளான் - எந்தன்
தம்பியுமோ தவறுசொல்லான்
கையுமெய்யு மாகவேதான் - சாட்சிக்
காரரையு மொப்புவித்தான்

ஆகிலுமோர் மறுமொழிதான் - நானு
மவளிடத்திற் கேளாமல்
சேகரங்கொய் திடநிரூபித் - துரை
செப்பியதுந் தப்பிதந்தான்

தந்திரஞ்சேர் மந்திரியே - நீயும்
சாற்றியநா ளேமுதலாய்ச்
சிந்தைமிக நோகுதையோ - நானும்
செய்ததொரு மதியீனந்தான்

கோவமது பாவமென்று - முன்னோர்
கூறியசொல் மீறியேயான்
பூவுலகிற் செய்தகுற்றம் - தன்னைப்
பொறுத்தருளும் பரப்பொருளே

மந். இன்னிசை

செய்யுமொரு காரியங்கள் தேர்ந்துசெய்வார் தேராதார்
வையகத்தில் மெத்த மனஸ்தாப முண்டெனவே
ஐயமற முன்னோர்சொல் லறிந்துமதை யெண்ணாமல்
தையலைக்கொண் டீர்பின் சலித்தினியென் செய்திடுவோம்

சபை கவி

வளமலி ரோமை நாடாள் மன்னவ னெண்டி ரிக்குத்
தளமலி தம்பி யானேன் தமையன்கா தலியைச் சொன்ன
பழவினைத் தொந்தத் தாலே பற்றிய குட்ட ரோகம்
அழுகெழு சரீரத் தாற்று தழன்றழு ழலம்பி னானே

எம்பரதோர் தம்பி தரு

வானுடும் மண்ணுலகுந் தானாக்கி நின்றசத்திய நாதா - இந்த
வகையான குட்டரோகஞ் சுகமாக நின்னருள்செய் நாதா
மேனுளி லேயவர்க்கும் நானகச் செய்தபெருந் தீதோ - என்ன
வினையோ விருந்தெனக்கித் தனைதூரம் வந்ததுதா னேதோ

பொன்போல வேயிருந்த அன்பாகியவெனது தேகம் - எங்கும்
புண்ணாகி யேபொறுக்க வொண்ணாமல் வந்தகுட்ட ரோகம்
நன்பாக மாறியுடல் முன்போற் றெளியவருள் செய்வாய் - யேசு
நாதா செழுங்கமலப் பாதா வுனைநம்பினேன் மெய்யாய்

உனைவோ டெரிவுகடுப் பளவோ வில்லாமல்மிக வாச்சே - யிப்போ
ஒருநாளென் ருலுங்கண்ணி லரிதாந் துயில்வராமற் போச்சே
வளமாக நம்பினவர்க் குனமிது வஞ்சகஞ்செய் தேனோ - செல்வ
மகராச கன்னியர்க்குச் சதிமானஞ் செய்ததினாற் றானோ

ஏதுவோ வறிகிலேனிப் புவிமீது நானிதற்கென் செய்வேன் - இதற்
கிப்போதி லேமருந்து தப்பாமற் செய்திடுகி லுய்வேன்
மதுவோடு தொங்கலணி பதிராச னென்தமையன் முன்னே
[- சொல்லி
மலிவா கியமருந்து நலவோடு செய்யச்சொல்வே னிப்போ

தம்பி இன்னிசை

அண்ணேயென் னுருயிரே யடியேன் சரீரமெல்லாம்
புண்ணான குட்டம் பொறுக்க முடியாதே
பண்ணான பண்டிதரைப் பார்த்தழைப்பித் தெந்தனக்கு
எண்ணாமல் நல்லமருந் திப்போசெய் விப்பீரே

எம். கவி

அம்புவி தனிலென் நேச அனுசனே பயப்ப டாதே
தம்பிரா னருளா லுந்தன் சரீரநோய் நீங்குங் கண்டாய்
வம்பகல் மதிவல் லோனே வாகடங் கற்றோர் தம்மை
இம்பரிற் சுறுக்கிற் கூட்டி யிங்குவந் திடச்செய் வாயே

பரிகாரிமார் வரவு

கவி

தெண்டிரை சூழு மிந்தச் செகதல மனைத்துங் காக்கும்
எண்டிரிக் கரசன் தம்பிக் கெழுந்தவன் குட்டம் மாற்ற
மண்டலந் தன்னில் மிக்க மருந்துவா கடங்கள் கற்ற
பண்டிதர் சபையின் மீது பரிவொடு தோற்றி னாரே

சபைத் தரு

என்ணெய் குளிகைகளும் - குழம்பு
மெடுத்துச் சிமிழில் வைத்தே
அன்ன லருஞ்சபையில் - வயித்திய
ரன்பொடு தோற்றினரே

வாகட தத்துவமும் - கைநாடி
வகையுஞ் சுரவிதியும்
பாகுபத மனைத்தும் - பயின்றிடும்
பண்டிதர் தோற்றினரே

செந்தூர லேகியமும் - தயிலமுஞ்
சேமமுட னெடுத்தே
தந்தரத் திற்றெளிந்த - கற்றோர்கள்
சபையினில் வந்தனரே

பரி. கவி

தரைபுகழ் ஞான நீதி தருமமும் விளக்க மாக
அரசியல் செலுத்துந் திண்டோ ளதிபனே போற்றி போற்றி
பரவுமும் சமுகத் தன்னிற் பண்டித ரெங்கள் தம்மை
வரவழைத் திட்ட செய்தி வழுத்துவீர் மன்னர் கோவே

எம். கவி

வழுத்துமெனக் கேட்டருளும் வைத்தியரே
மணிக்கொலுவில் வைகுமிப்பார்
செழிக்குமெந்தன் தம்பியுடற் செறிந்த குட்டந்
தணைமாற்றச் செகத்தின்மீது
அழைத்ததும்மை யிதற்குநல்ல அவுடதஞ்செய்
தேமாற்றி லதிகஞ்சிந்தை
களிக்கவெகு மதியருள்வேன் கைபார்த்து
நன்மொழிநீர் கழறுவீரே

பரிகாரிகள் கலித்துறை

வையக வேந்தர்க் கிளையவ னேகிட்ட வாருமுந்தன்
கைதனைத் தாரும்நன் நாடிக் குணங்களைக் கண்டறிவோம்
செய்வதுண் டாம்நல் லவுடத முண்பிணி தீருமினி
மெய்யிது பாரும் வயித்திய ரேசுகம் மேவிடுமே

மேவுங்கை நாடியிற் பித்தக் கொதிப்பு மிகுத்தவிந்த
நோவும் வருத்தமுந் தீர்ந்திடுங் காண்செழு நுண்கமலப்
பூமென் றெடையணி பொற்புய னேயிப் பொழுதுமனஸ்
தாபப்படாதே சுபமாக்க லாமிது சத்தியமே

பரிகாரிமார் தரு

1-ம் பேர்: கலைதெரி பெரியோனே - நீகண்ட
கைநாடிக் குணமென்ன பொய்யாமற்சொல்
2-ம் பேர்: மலைநிகர் புயவாமா - கைதனில்
வாதங் கொதித்துநிற்ப தாகக்கண்டேன்
1-ம் பேர்: வாதமென் றுரைத்தாயே - பிணியிது
வளம்பெறு பித்தத்தைக்கொண்
டெழுந்ததடா
2-ம் பேர்: ஏதமி லிடுமடையா - கைநாடி
யிசைவுநீ யொருபோது மறியாயோடா
1-ம் பேர்: என்னையோ மடையனென்றாய் - நீயிந்த
இலங்கையிற் சமர்த்தனோ புலம்பாதேபோ
2-ம் பேர்: உன்னைநா னறியேனோ - நீயிப்போ
வுயர்ந்த பரிகாரத்திற் றெழுந்தாயோ
1-ம் பேர்: தெளிந்ததிற் குறையென்னடா - பரிகாரந்
தெரியாதோ குணபாட மறியேனோ
2-ம் பேர் எழுந்துதுள் ளுவதென்னடா - நானுனைப்போல்
இடையிட்டு வந்தவனோ கிடவப்பாலே
1-ம் பேர்: அகந்தையாய்ப் பேசாதே - மட்டக்களப்
பானென்ற வயித்தியன் பேரனியான்
2-ம் பேர்: உகந்தவன் பேரனென்றால் - வாதத்தி
னுரைதரு நடையென்ன பகருமிப்போ
1-ம் பேர்: அறிவுறு வாதமிப்போ - மரங்களை
யசைத்து நடக்குதிம்மட் டறிந்திலையோ

2-ம் பேர்: தறுகுறும் பிதென்னடா - வுனக்குநான்
சரசத்துக் காளோவுன் பெருமை யிதோ

1-ம் பேர். பெரிதென நினையாதே - பிணியிது
பித்தத்தி லெழுந்த துத்தமங்காண்

2-ம் பேர்: பொருமிய கோபத்தினுல் - வன்மித்துப்
புரத்தினிற் கொதித்துப்புண்
ணுரத்ததுதான்

1-ம் பேர்: உரத்தபுண் ணிதற்கினிலும் - எதுவானும்
உரைத்துக் கொடுத்துக்கொஞ்சம்
பறித்துக்கொள்வோம்

2-ம் பேர்: விருப்பமோ டிதுபுத்திதான் - யினிநல்ல
வேடிக்கை யிருபேருங் கூடிக்கொள்வோம்

பரி. இன்னிசை

வேந்தர் தொழும்வேந்தே யிக்கவுந்தன் தம்பியர்க்குப்
போந்தகுட்ட நோயோர் பொழுதினிலே மாற்றுதற்குச்
சேர்ந்ததங்கச் செந்தூரம் செய்துதரு வோமதற்கு
அந்தரங்க மாகவெங்கட் காயிரம்பொன் வேண்டுமையா

எம். இன்னிசை

மண்டலத்தில் மிக்கமதி மந்திரியே கேட்டிடுவீர்
தண்டமிழ்ச்சே ரென்னுடைய தம்பிதுன்பம் மாற்றுதற்கு
விண்டமருந் துச்செலவு வேண்டியதா மாயிரம்பொன்
பண்டிதர்கள் கைக்குப் பரிந்து கொடுப்பீரே

மந். கவி

அலைவளை புவியி லின்னம் அதிகாரம் பண்ணலல் லாது
பலகலை நூல்கள் கற்றுப் பரிகாரம் பண்ணு மென்றே
இலகிய பழைமை மெய்யாச் சினியபண் டிதரே வாரும்
உலவிய பணமிந் தாரு மூமக்கிது லாபந் தானே

பரியாரிமார் தரு

1-ம் பேர்: பண்டிதரே யின்றெமது தோழே - எமக்குப்
பாக்கியம்ப லித்ததிந்த வேளை
திண்டிற லரசர்தந்த பேழைப் - பணந்
திறந்து பகிர்ந்துகொள்வோம் நாளை

2-ம் பேர்: இறையவன் மனத்தயவு பூணும் - படிக்
கிளையவன் பிணியகற்ற வேணும்
விறல்மிகு சரீரசுகந் தோணும் - படி
மிக்கநல் மருந்துகொடுங் காணும்

1-ம் பேர்: பார்த்திவர்க் கிளையவரே வாரும் - நல்ல
பற்பமொன் றிதையருந்திப் பாரும்
காத்திரத்துக் கிந்தஎண்ணெய் சேரும் - குட்டம்
கதிர்முகப் பனிகளென்னத் தீரும்

2-ம் பேர்: அவுடதம் மகாவதிகந் தாழ்ச்சி - யல்ல
அநேகதுன்பக் காரர்பெற்ருர் மீட்சி
தவறறத் தெளியுமுந்தன் பூட்சி - எங்கள்
தலைமுறையிற் கண்கண்டகை யாட்சி

1-ம் பேர்:- பத்தியமுப் புப்புளியா காது - பசுப்
பால்தயிரு மாமச்சமா காது
நத்துபன்றி மான்முயலா காது - காடை
நல்லிறைச்சி யாகும்வேரு காது

2-ம் பேர்: இத்தொகைக் கறியுடனே சோறு - தின்ன
எட்டுநாளி லிந்தக்குட்டம் மாறும்
உத்தம சரீரசுகந் தேறும் - பின்னே
புரினிலெங் கள்சமர்த்தைக் கூறும்

சபை கவி

படித்தபண் டிதர்க ளந்தப் பற்பமு மெண்ணெய் தானும்
கொடுக்கமன் னவன்தம் பிக்குக் குட்டம்மீண் டுரக்கக் கண்டு
இடத்துள்ளோ ரெவர்கேட் டாலும் இருக்கட்டும் பார்ப்போமென்று
நடத்திவிட் டவர்தம் மூர்க்குக் கற்றவ ரேகினுரே

தண்டலைராயன் தம்கி தரு

ஐயையோவிந்த ஊரினில்மிக்க வறிவுள்ள
கற்றோரே - இந்த
மெய்யெல்லாம்வன் சிரங்குவந்தாற்போல்
விதனம்மிக வாச்சே

காவிலேசிறுபுண் ணென்றிருக்கபலர் கரப்பனென்
றேமொழிந்தார் - இப்போ
மேலெல்லாங்குட்டம் போலக்கலித்து
மிகுதிதழும் பாச்சே

காந்தல்நோவுங் கடுப்பும்விதனமுங்
கண்ணுறங் கொட்டாதே - கற்ற
மாந்தரேநீங்கள் தானிதற்கான
மருந்தொன்று சொல்லீரோ

தேசமீதுள்ள வாலிபர்தம்மிற் றிறமுற்
றிருந்தேனே - அந்த
நேசமாதுனக் குச்செய்பாவம்
நமக்குப் பலித்ததுவோ

என்னவோவறி யேனிந்தக் குட்டநோய்
ஏன்வந்ததெந்தனுக்கு - இதை
மன்னனுமென்தமை யனிடத்திலெவ்
வாறு பகர்ந்திடுவேன்

தம்பி இன்னிசை

நிலவுபொழி தரள நிறைகவிகை நிழலிலிருந்
துலகுபுரந் தருளு முற்றவெந்த னண்ணலரே
குலவுசரீர மெல்லாம் குட்டம்போற் கலித்ததையா
இலகுமருந்து செய்வித் தென்வருத்தம் நீக்குவீரே

தண்டலைராயன் தரு

அன்னை பாலா - வரு - மன்னர் கோலா - என்றும்
அருளுள் ளோனே - பாவ - மருளில் லோனே
சொன்ன பாதா . அரு - ளன்ன தாதா - உண்மைச்
சோதி யோனே - வன்மம் - போதி யானே

பொன்னி நாடா - எமக்கென்னு மீடா - நன்மைப்
போத நீதா - சந்திய - வேத நாதா
நின்னை நானே - மன - துன்னி னேனே - ஐயா
நிதமும் நீரே - எமக் - குதவு வீரே

கோதில் ஞானம் - நிறை - மாதை யினர் - காவிற்
கொலைசெய் போதே - கண்டு - விலகி யிதே
நீதி யான - சேய்க்குத் - தாதியாக - என்றும்
நேசமாக - வைத்தேன் - வாச மாக

மாது தானே - செய்த - தீது தானோ - என்ன
வகைய தாமோ - வந்த - தொகையே தாமோ
ஏதி னாலே - மனம் - வாதை தானே - குட்டம்
இற்றை நாளே - தம்பிக் - குற்ற தேனோ

உலக மீது - வஞ்சங் - குலவு தீது - ஏது
முடைய தாலோ - வுல - கடைவ தாலோ
அலகை ரூது - தன்னை - நிலைகொள் ளாது - நீக்கி
யாளு வாயே - பர - மாதி நாதா

தன். ராய. கவி.

வருத்தமில் லாமல் வெல்லை மலையினிற் கனிகை யின்ற
திருத்தயா பரனர் நன்மை செய்குவார் பயப்ப டாதே
உரத்தனே சுறுக்கிற் சென்று ஊரினிற் சமர்த்த ரான
மருத்துவர் தம்மைக் கூட்டி வருகுவாய் விரைவிற்றுனே

பரிகாரிமார் வரவு

கவி

பாகடர் மொழிமின் னூர்கள் பசும்புன லுழக்கில் வாளை
பூகடர் மடல்கள் கீறிப் புடைத்ததண் டலைநன் நாடாள்
கோகடர் குவடொப் பான கொற்றவ னுரைதப் பாமல்
வாகடர் சபையின் மீது மகிழ்வொடு வருகின் றாரே

பரிகாரிமார் தரு

தரையெங்கும் புகழும் பிரதான — மான
தண்டமிழ்க் கலைகற்ற பண்டிதர் நாமே
வரைதங்கும் முனிவர்கண் டுரைத்த — மூலி
மருந்துவா கடநூல்கள் மிகுந்தறி வோமே

துய்தான கைநாடி விதியும் - நல்ல
சுரவிதி யுடனேசாஸ் திரவிதி தானும்
மெய்யான நயனநல் விதியும் — தலை
விதியொன்றுதவிரமற் றவையெல்லாம்மறிவோம்

அங்காதி பாதமே முதலாய் - மருந்
தகராதி குணபாடஞ் சுரநூல்க ளெல்லாம்
இங்கான வாய்ப்பாடஞ் சொல்வோம் - எங்கட்
கிணையுண்டோ விவடத்திற் பரிகாரி மார்கள்

பெருவயின் காமாலை கட்டி - நல்ல
பிடங்குசிரங் கென்றெங்க ளிடம்வந்த பேர்க்கு
ஒருபொழு தினிற் சுகமாக - நல்ல
வுச்சித மூலிக ளுண்டிதோ பாரும்

மலையாளம் வங்காளம் முதலாய் - அந்த
மதுரைப் பட்டணத்துடன் வடகரை யிருய்த்
தலையான சித்தாதி மார்கள் - தந்த
தக்கமூ லிகளெங்கள் கைக்குளுண் டாமே

மருமொய்த்த தண்டலை ராயன் - இப்போ
வரச்சொல்லியெமைவெகு சுறுக்கினி லழைத்தார்
திருமொய்த்த சமூகத்தின் மீது - நாங்கள்
சென்று திருவுள மென்னென் றறிவோம்

பரிகாரிமார் கவி

தானதா யிருக்கு மேக தம்பிரான் தயவு பெற்றுக்
கானநா டதனை யாளுங் காசினி மன்னர் கோவே
மானமாஞ் சமுகந் தன்னில் மருத்துவ ரெங்கள் தம்மை
ஈனமற் றழைத்த செய்தி இயம்பும்நா மறியத் தானே

தண். ராய. கவி.

அறிவுசெறி வயித்தியரே பகரக் கேளும்
அன்புசெறி தம்பிதன தாகத் துற்ற
சொறிவுசெறி குட்டமெல்லா மின்று நன்றாய்ச்
சுகமாக மருந்துசெய்யும் துன்பந் தீர்ந்தால்
உறுதியுட னுமக்குவெகு மதிநான் செய்வேன்
உங்கள்மன மகிழவென துரைதப் பாதே

பரிகாரிமார் கவி

தப்பித மில்லா மன்னன் தம்பியே யிங்கே வாரும்
செப்புகை தனைப்பார்த் துள்ள செய்திகள் சொல்வோங் கேளும்
அப்பனே யிது கரப்பன் அருமருந் தொன்றில் நாங்கள்
இப்போ மாற்றிடுவோந் தோழா இனிதுநீர் பாரும் வாரும்

வாருறுங் கொங்கை நல்லார் மதனனே வலக்கை தாரும்
தீருமும் முடலிற் குட்டம் திடனிது கரப்பன் புண்தான்
ஆருமே மெய்க்க நல்ல அவுடத மொன்று தாரேம்
பாருமி ரைந்து நாளிற் பறந்திடுஞ் சிரங்கு தானே

பரிகாரிமார் தரு

1ம் பேர். வல்ல தண்டலை நாடு புரந்திடும்
மன்ன வன்றிருப் பின்னவ னேயும்
செல்ல வங்கத்திற் குட்ட மின்று
திருந்த நாம்சொல் மருந்தொன் றுகேளும்

2ம் பேர்: செந்தூர மொன்றுதந் தோமிதனை நீர்
தின்று வாருமோர் மண்டல மட்டும்
எந்தவா தையுஞ் சொந்தமே தீர்க்கு
மென்னெ யாமிது புண்ணுக்குப் பூச

1ம் பேர்: காந்தல் நோவு சொறிவுநின் ருற்புக்கை
கட்டுவி ரிந்தக் கொட்டை மருந்தை
ஆந்த ரங்கமா மிந்த வவுடதம்
அண்ண லேகுட்டந் திண்ணமாய்த் தீரும்

2ம் பேர்: பத்தியஞ் சொல்லில் தூதுளங் காய்பசுப்
பாலுடும்பு சுரு வறக் கீரை
நெத்தலிப் பொடி கத்தரிப் பிஞ்சுநன்
நெய்யுங் கூட்டியுண் ணையமில் லாமல்

1-ம் பேர்: அன்னங் கொள்வ தரைவயி ருக
வதனிற் பாதிக் கருந்துந் தண்ணீரை
மன்ன னேவயின் காற்பங்கு சும்மா
வைத்திருக்க வராதுபுண் நோயே

2-ம் பேர்: ஆகந் தேறு முதிரமு மிக்கும்
அழகு காட்டுவித் தன்னத்தைத் தேடும்
நாகம் போல்மொய்ம்பு பூரித்தி டும்பெலன்
நன்னுங் காணுமிவ் வண்ணம் நடந்தால்

1-ம் பேர்: இந்த வண்ணமே யெங்கள் மருந்தை
எண்ண மன்றிநீ ருண்ணுவி ராயின்
வந்த குட்ட வியாதியு னக்கின்று
மாறுமாகமுந் தேறும்மெய் தானே

2-ம் பேர். ஆயிரம் பதினாயிரம் பேருக்
கதிகம் மாற்றி நிதியங்கள் பெற்றோம்
போயி ரும்பொன் னரனில்நா லைந்து
பொழுதில் மாறும் வழுவில்லை மன்னு

பரிகாரிமார் கவி

மருவுதன் டலைநன் ருடாள் மன்னனே யுமது தம்பி
அருகுசென் றிருந்து குட்ட மகலநன் மருந்து செய்தோம்
தரைதனில் முன்னைக் கிப்போ சகாயம்மேல் நன்றாய் மாறும்
உரைதரு மெமதூர்க் கேக உத்தர வருளுவீரே.

தன். ராய. கவி

வீரமிகும் பண்டிதரே மகிழ்ச்சி யானேன்
மெத்ததிக வுபகாரம் விளங்கு முங்கட்
காரமணி மாலையிதோ பணிபட் டாடை
ஆளடிமை வயல்தோட்ட மநேகந் தந்தேன்
ஊர்தனிலுங் களுக்கின்னும் வேண்டிடும் பல்
உபகாரம் யான்புரிவே னுவப்ப தாக
ஈரமலர்த் துடவைபுனை யுமதூர்க் கின்று
இனிமைபெற நடந்துசெல்வீ ரின்புற் றேதான்.

கன்னி வனத்திற் பரணித்தரு

பரணி: உலகம் பரமும் பலபொருளும்
உகந்து படைத்துப் புரந்தருளும்
வலவம் பரன்கற் பணைவழியாய்
வருந்தி நடவா திருந்தேனென்றோ - பூவிற்

தரு: பலவஞ்ச கம்புரியும் பாவவடி யாளின்றே
பகைவன் கணங்களெற்றிற் பழுதுபோகா
முன்னின்றே
இலகும்வரந் தந்தெனக் கிரங்கக் கடனிற்குண்டே
ஏனைக்கிவ் வேளைமரி யாளேநின் தஞ்சமொன்றே

பரணி: ஒருமெய்ப் பொருளா கியதாதைசூ
ருகந்த மகளா யவர்சுதனைத்
தருமெய்த் தாயா யிஸ்பிரித்துச்
சாந்து நன்மை தரித்தவளாய் - எங்கள்

தரு: பரிசுத்த ஞானதிவ்ய பாக்யபதி யுன்னையே
பதுமத்தலர்பொற் பாதம் பரவுகின்றே னன்னையே
வருமித்து ரைத்ததூறு வகைவிபரந் தன்னையே
மன்னன் தெளியநீதி பண்ணும்மரி யன்னையே

பரணி: மன்றல் பொழிந்து மணிபுனைந்து
மணமே புரியும் மகிழ்நனெனும்
வென்றி யரசன் தன்வாக்கால்
வேசை யெனக்கேட் கவுமுறையோ - அம்மா

தரு: ஒன்றுமறி யேனேழைக் குலகத் துனதுதஞ்சம்
உண்டென்றே ரையுறுதி கொண்டதென துநெஞ்சம்
அன்றுவ யிரமனத் தசடர்புரிந்த வஞ்சம்
அகலும்படி யடியாட் கருள்நின் சரணகஞ்சம்

பரணி: பெருகுங் கடுவின் டடியகன்று
பிரியுங் கவடு பலநீட்டி
வரிவண் டடரு மலர்பரப்பி
வாழு டளாவும் வனக்காட்டில் - பாவிக்

தரு: கொருதஞ்ச மும்வேறிலை யுமதுகடைக் கண்ணேக்கும்
உலகிற் புலைஞர்களா லுறுமவமா னம்நீக்கும்
தருமத்தி யாக்கைசேர்தற் பனமேதாச ரைக்காக்கும்
தாயேதேவ மாதாவே நீரேயெனை யாளாக்கும்

கன்னிவனத்தில் உலா

தாயே கிருபைத் தயாபரியே சந்தமரி
யாயே புவியோர்க் கடைக்கலமே - சேயாகத்
தற்பரனைப் பெற்ற தவத்தியே தாரணியில்
துர்லபமாங் கற்புச் சுடரொளியே - பொற்புறையும்
கன்னியர்க்கெல் லாமரசே காரணியே யிவ்வேளை
தன்னில் நம்பினே னுன் சரணதுணை – உன்னும்
தலத்தி லடியாள் தனைச்சிறந்த ராச
குலத்துதிக்க நின்னிரக்கங் கூர்ந்தீர் - நிலைத்திடுமெய்
வேதநெறியால் விளங்குபிர சாதமெல்லாம்
ஆதரவோ டேழைக் கருளினீர் - நீதிதிகழ்
ஏந்தலுயர் ரேமை எம்பரதோ ரெண்டிரீக்குக்
காந்தையென வேயெனையுங் கற்பித்தீர் - வேந்தன்
செருசேல் நகர்காணச் செல்ல வவர்தம்பி
தருதீ துருமற்தற் காத்தீர் - விரிசோதிச்
செம்பொன் முடிசூடும் செம்மலிடத் தேகியவர்
தம்பிசொன்ன பொய்யாற் தலைவரெனை - வம்பியென்று
காட்டிற் சிரந்துணிக்குங் காப்பிலியால் வேற்றரசை
வேட்டைக் கனுப்பி விலக்கினீர் - நாட்டமிகு
தண்டலைநா டண்ணல் தனையன் றனைவளர்க்க

அன்றவன்பின் னேனு மவமதியாய் - மண்டலத்தில்
என்னை விரும்பி எழில்மதலை யைத்தடிய
மன்னவன் மீட்டென்னை வனத்தனுப்ப - மின்னுருவில்
ஏற்றிய தண்டேல் இடறகல வானுஞ்சைத்
தோற்ற வனுப்பித் துணைச்செய்தீர் - சாற்றுபெருங்
காட்டில் மழைநீருங் காய்கனியு மோதனமாய்
ஊட்டி யுய்யும்வண்ண முதவினீர் தீட்டிலும
தற்புதங்கள் தானு மளவுண்டோ வின்னமுமென்
கற்பிட நுருமலென்னைக் காருமம்மா - நித்தியமும்
மாதாநீ நும்முடைய மைந்தனென்தந் தைமற்றும்
மூதாதி தாதர் முதலாக - நீதிமிகு
மகிமைசெறி மோட்ச வாளர்களெல் லோரும்
தகைமைமிகு மென்னுடைய சகோதரராம் - அகமகிழ்வுற்
றிங்குலகில் நானடியாள் எப்போதும் நம்பினேன்
தீங்ககற்றி நல்லிரக்கம் செய்குவீர் - பூங்கமலப்
பாதம் பணிந்தேன் பராபரியே யான்புரிந்த
ஏதம் பொறுத்து எளியாள்முன் - பூதலத்தில்
தோற்றி யுமது துணைச்செய்தென் துக்கமெல்லாம்
மாற்றி யருளும் மரியனையே - போற்றியுன்னை
நப்பினேன் பாதம் நமஸ்காரந் தாயேயிந்
தம்புவியில் தாரும் அருள்

சம்மனசு வரவு

வசனம்

அற்புத மரிமா தாவை அகத்தில்நே சித்துப் போற்றுங்
கற்புய ரிராச மாதே கண்விழித் திடுவ தாகத்
தற்பரப் பொருளைப் பெற்ற தாயார்வந் தாரி தோபார்
பொற்பதாஞ் சலிகள் செய்து புகல்திரு மொழிகேட் பாமால்

பாரில்மெய்ஞ் ஞானநீதி பரவுமென் மகளே யுந்தன்
சீரிய கற்பின் கீர்த்தி திசையந்தந் தேங்கு லாச்சு
சாருபுன் மிடிமை துன்பந் தரித்திரம் யாவும் நீங்கும்
சேருநற் புகழும் மிக்க செல்வமுஞ் சிறப்பு முண்டாம்

ஆம்பெருந் தவத்தை நண்ணி அருந்துய ருற்ற தாலே
மேம்பல பலனுந் தன்ம மேன்மையும் பெறுவீ ராக
நோம்பல குட்ட மாற்றும் நுவலவு டதமீ தாகும்
ஓம்பெருங் கப்பல் நாளைக் கொன்றுஇவ் விடத்தில் மேவும்

மேவுமவ் வுருவோ ருன்னை விளங்குநன் நகரிற் சேர்ப்பார்
தாவுமெம் பரதோர் தீவின் தலைவனு மறிய லாகும்
பூவுல கினிலென் நேசம் புதல்வியே வாழ்க வென்று
தேவமா தாவு னக்குச் செப்புவ தறிவ தாக

கன்னி பரணி

பரிபூரணியே போற்றி தயாபரியே மரியேபோற்றி - தயைபுரி
காரணியே போற்றி நித்திய புகழ்ச்சி புகழ்ச்சியம்மா
அரியபாவி எனக்காக அம்மாநீ ரித்தனைகிருபை
தரைமேற் செய்நீ ரடியாள்நின் சரணமயரே னயரேனே

கன்னி தரு

கனகமுடி மன்னர்குலத் தாளே — நித்திய
கருணைநன் மழைபொழி காரணியே மாமரியம் மாளே
உனதுதஞ்சந் தஞ்சமென்றுந் தானே — யிந்த
உலகினி லடியவள் உனக்கடைக் கலமென்றடைந் தேனே

மருமலர்க் காவிலெனக் காய்வந்தீர் — குட்ட
வகைபல பிணிகளும் மாறுமென்றுரேர் பாசடையைத் தந்தீர்
திருமலர்ப்ப தங்கண்டன்றே யுய்த்தேன் — உந்தன்
செயகரு ணைகள்பெறச் சிறியள்நானிங் கென்னதவஞ்
[செய்தேன்

அனையபொரு ளும்படைத்தோன் தாயே — வந்த
அடர்வினை விலகிடும் ஆறுதலு மாதரவும் நீயே
எனையுமர் திருக்கடைக்கண் பாரும் — வஞ்சர்
இடுபடி றகலவுன் னிலங்குசெம்பொற் பாதமலர் தாரும்

அரிபுலி கரடியும்பற் கன்றும் — மெத்த
அதிமத முடனுறை அணிவனத்தை யூடறுத்துச் சென்று
தருகடற் கரைதனிலிப் போது — நிற்பேன்
தருமுரு வருமெனத் தற்பரியின் கற்பனைதப் பாது

கப்பற்காரன் வரவு

கவி

திரிபுவன முந்தற் காக்கும் தேவனைப் பயந்த தாயார்
கிருபைபரா பரதமின் னூர்க்குக் கிடைத்தவுத் தரந்தப் பாமல்
விரைமலி பொருள்க ளீட்டும் வியாபாரக் கப்பற் காரர்
உரைபுனற் கங்கை நீந்தும் உருமிசை வருகின் றாரே

கப்பற்காரன் தரு

சீரான கப்பல்தனை நீர்மி திறக்கிச்
செப்பரிய பாய்மரந் தப்பற நிறுத்தி
நேரான பாய்விரித் தாராரு மெய்க்க
நீலவரி யுவரிமே லோடுதே கப்பல்

கரிமா மருப்புநவ மணிவெள்ளி செம்பொன்
கருதரிய கப்பல்தனி லரிதாக வேற்றி
பெரிதான தண்டலைநன் நகர்மீது சென்று
பிசகன்றி விற்றவெகு பொருள்தேட வேதான்

இப்போது மிக்கதிசை தப்பாது பார்த்து
எரிக்கும்நட் சேத்திரக் குறிப்பாக வேதான்
மெய்ப்பான சுக்கான் பிடிப்பர்க ளாக
விரைவான சுழிதன்னி லலையாம லோடும்

வளமான பீரங்கி முழவோ டதிர்ந்து
வடிவான ருவுகாற் கொடிதா னுயர்த்தி
உளமோடு ராகபன் னிசைதா னொலித்து
உரைமேவு திரைதன்னில் விரைவாக ஓட

ஓடமது நீர்பாடு சாடிட விடாதே
உற்றசல் லிக்களத் தேறவும் விடாதே
கோடையிது சீர்காற்று ஓடுதல்த டாதே
குளிர்வாடை பெருகுமுன் கரைகாண லாமே

கப்பர்காரன் கவி

தெளிவுறு மெனது நேசஞ் சிறந்தநற் கலாசி னோரே
சுழிதனி லொதிங்கிக் கப்பல் சூழ்திசை மாறி யோடி
வளர்வளந் தருகு சேர்ந்தோம் மகிழ்ந்துபா யிழக்கு மிப்போ
எழில்பெறு கல்லு வைப்பீர் இயல்பறிந் தேக லாமே

கலாசு கவி

வர்த்தக னாரே யிந்த வளர்கடற் கரையி லிங்கே
சித்திரைச் சிலைபோ லேயோர் தெரிவையர் நிற்பதாகும்
மைத்தரு வனத்தூ டிந்த வரைக்கும்மா னுடரைக் காணோம்
புத்தியி லுணர்ந்து சென்று புதுமையை யறிகு வீரே

கப்பற்காரன் கவி

கானக மீதிலாருங் கண்டது கேட்ட தில்லை
மானவ ருளதென் றன்பு மருவுமென் கலாசி னோரே
பூநில மீதி லிந்தப் புதுமையைப் பார்ப்ப தற்கு
ஈனமில் கப்ப லாலே இறங்கிநீர் வருகு வீரே

கன்னி இன்னியை

கப்பலில்நின் றிறங்கிவந்த கருதருமென் பிறவிகளே
எப்பொருளும் படைத்தருளும் ஏகபரன் கருணையினால்
மெய்ப்புறுநற் பவசுபெற்று மென்மேலும் வாழ்ந்திருப்பீர்
இப்புவியி லொருபேதை எனக்குதவி செய்வீரே

கப்பற்காரன் இன்னிசை

செய்யதய வுரைத்தருளும் தேன்மொழியே கேட்டிடுவீர்
வையகத்தி லுமதூர்ப்பேர் மாதாப்பி தாவாரோ
தையலர்நீர் சொன்னாலுன் றனையுருவி லேயேற்றி
எய்துமொரு நகர்சேர்ப்பேன் எண்ணமின்றிச் சொல்வீரே

கன்னி இன்னிசை

சொல்லுகிலென் சகோதரனே துலங்குமென்னூர் ரோமைநகர்
எல்லையில்ரா சாத்தியென என்பே ருரைத்திடுவார்
வல்லகுற்ற வாளியென வனத்திறைவர் போட்டதுவாம்
வெல்லும்நகர் சேர்க்கில் வெகுதரும முண்டாகும்

கப்பற்காரன் கவி

ஆகுமென் மடமா தேயுன் அன்புரை கேட்ட தாலே
நாமினி யெதுவந் தாலும் நன்நகர் சேர்ப்ப துண்டு
தாமத மில்லா தெங்கள் தமதுகப் பலிலே வாரும்
பாமலி கலாசி னோரே பாய்விரித் தெழுநாம் செல்வோம்

மனது மகிழ்ச்சி கூருமே — கடலில்வளர்
மயிலைச் சிறப்புப் பாருமே
சினைமக ரங்கள் பாயுமே — திரண்டுழக்கிச்
சிறையா வினங்கள் மேயுமே

கெளிறு கிளைக்கன் கீளியும் — ஓராவுங்காடன்
கிளையும் விளைமீ னாளியும்
களறுங் கயலும் பாலையுங் — செங்கண்ணியுல்லன்
குருக்குப் பாரையுங் காலையும்

முரலுங் கட்டாவுங் கூடுமே — துள்ளிக்குதித்து
முடுகிட் டினத்தைத் தேடுமே
வரிசைச் சிறப்புக் காணுமே — எல்லோரும்நல்ல
மனதுசந் தோஷம் பூணுமே

தண்டலை நாட்டை நாடியே — எல்லோரும்நல்ல
சங்கீர்த ராகம் பாடியே
சென்று நிதியந் தேடுவோம் — நமதுகப்பல்
திசைதப்பி டாம லோடுவோம்

கப்பற்காரன் கவி

திறல்செறி கலாசா னோரே சிறந்ததண் டலைநன் நாட்டின்
துறையிதாங் கப்பற் பாயைச் சுருக்கிநற் கல்லு வைத்து
அறைதரு சரக்கி தெல்லாம் அரியகிட் டங்கி வீட்டில்
நறவுறப் பதித்துப் போட்டு நல்விலைக் கினிவிற் பீரே

கன்னி இன்னிசை

பேதையென்னைக் கானகத்தாற் பிறங்குமிந்த மாநகரில்
ஆதரவோ டேற்றிவந்த அண்ணே சகோதரனே
சோதிபரப் பொருள்தன் துணையுண்டா மூங்களுக்கு
மேதினியிற் போய்ப்பிழைக்க விடைதாரும் மிக்கோரே

கப்பற்காரன் இன்னிசை

மிக்கதவப் பேறுடைய மின்னே யுமைப்போலத்
தக்கநெறி யுள்ளோரைத் தாரணியில் யான்காணேன்
உய்க்கும்நின் புண்ணியத்தால் உவந்தெமையும் மறவாமல்
திக்கறிய விவ்வூரிற் சென்றுபிழைத் திருப்பீரே

கப்பற்காரன் தரு

மின்னு மாமலர்ப் பொய்கைவ ளந்திகழ்
மிக்க தண்டலை நாட்டினில் வந்து
உன்னு வாணிபஞ் செய்ததில் மெத்த
ரொக்க மாகக் கிடைத்தது காணும்
பொன்னும் மாமணி யும்புரி முத்தும்
புருட ராகம் பவளமு மெத்தும்
மன்னு நீல வயிரமுஞ் செய்ய
மரக தங்களும் மாற்றிக்கொண் டேனே

கொள்ளு கின்ற சரக்கின் முதலொடு
கோடி பொன்கண்ட லாப முரைக்கில்
விள்ளு நாலரைக் கோடியும் மூர்த்தி
விராக னுதாயம் விற்றுக் கண்டேனே
வள்ள லெந்தன் கண்ணகரோ ராயிரம்
ஆகும் நாளினி மானவர்க் கெல்லாம்
உள்ள செல்வம் மிகுதி பெருகிட
உம்பர் நாத னுதவுயுண் டாமால்

வாம மிஞ்சு மலர்மகள் நோக்க
மலிந்து வெந்தன் மனைதழை வெய்த
ஏமமிஞ்சிய பாய்க்கியம் பெற்றிட
ஏசுநாத ரிரக்கமுண் டாமே

பூம லிந்திடு மாலைக ளாடப்
புகழ்ம லிந்தவென் னேவலர் கூடப்
பாம லிந்திடு சிந்திசை பாடப்
பசும்பொன் மாமனை மீதுசெல் வேனே

வழிக்குட்டக்காரன் வரவு
கவி

காசினி புகழும் ராச கன்னிதன் டலைநன் நாட்டில்
மாசில்லா மணிபோல் வந்து மாதவம் புரியும் நாளில்
தேசுசேர் சரீரந் தன்னில் திகழ் குட்ட ரோகக் காரன்
ஆசில்லாச் சபையின் மீது அன்புடன் வருகின் றுனே

குட்டக்காரன் தரு

ஆதிசரு வேசுரனே அற்புதனே தற்பரனே
நீதிதிக ழாரணனே நித்தியனே கர்த்தாவே
மூவுலகமும் படைத்து மூன்றுவிர லாற்றுங்கித்
தாவுபல வுயிர்களுக்குந் தக்கபடி யீபவனே
தேவகரு ணகரனே திரிசுடரே யொருபொருளே
பாவவினை நீக்கியென்னைப் பாதுகாருந் தாதாவே
பூவுலகி லகங்காரம் போக்குதற்குக் காத்திரத்தில்
மேவுகுட்ட நோய்மாற வேதபர னேயருள்கூர்
குத்துவலி நோவுளைவு குலவுகாந்த லெரிவுடனே
மெத்ததிக சீழோடி விதனமாகு தம்பரனே
கையடிமு விபொருத்து கரன்கட்டி யேவெடித்து
மெய்முழுதும் புண்ணுன விதனம்மாற்று மம்பரனே
பாரிடத்தா லெமைமீண்டு பாக்கியமேசக் கிஷமகிமை
சீருடன்பங் கருள்வோனே தீங்ககற்றிக் காருமையா

கன்னி இன்னிசை

வருந்தி விதனமுற்று வாடுகின்ற மானிடனே
திருந்து முமதுடலில் சேர்ந்தகுட்ட நோய்தனக்கு
மருந்துசெய்து மாற்ற வயித்தியரா ருமிலேயோ
இருந்து புலம்புவதேன் யானறியச் சொல்வாயே

குட்டக்காரன் தரு

அன்னை தன்னி லதிக தயவாய்
அன்பு பேசு மணங்கே கேளீர்
இந்நி லத்தி லெங்கள் பாவ
இடராற் குட்டம் வந்த தம்மா

இரவும் பகலும் அபயக் குரலாய்
எரிவு காந்தல் உளைவு கடிதாய்
விரவு வருத்தம் பொறுக்கொண் ணாதால்
வெகுபண் டிதர்க ளிடத்திற் பகர்ந்தேன்

பண்டி தர்கள் மருந்து செய்தால்
பத்து மடங்கு கடினம் பண்ணும்
தென்டி ரைசூழ மூலகி லதிக
செலவல் லாமற் சுகமொன் றிலையே

அன்பு பேசு மின்கோ தையரே
அரிய மருந்தே தெனும்நீ ரறிந்தால்
உம்புண் ணியத்தா லெளியேன் பிணிதீர்ந்
துய்ய வுதவி செய்யுந் தாயே

கன்னி இன்னிசை

தக்கவெந்தன் பிறவியரே சந்தமரி தன்னருளால்
விக்கனமிக் குட்ட வியாதிசுக மாக்கிடுவேன்
திக்கறிய வென்முன் திடனாக நீர்வாருங்
கைக்குழையால் மெய்துடைத்தேன் காத்திரநோய்
[நீங்கிடுமே

சபை கவி

மேதினி மதிக்கும் ராச மின்னனை சகலத் துக்கும்
ஆதியம் பரன்தா யிந்த அருங்குழை மருந்து தன்னால்
காதிய குட்ட ரோகர் காயத்திற் றுடைத்த பின்னர்
தீதில்லா துடல்நோய் மாறிச் செகதினிற் றழைத்துய் தாரே

குட். காரன் இன்னிசை

எங்கள் சரீரத் தெழுந்தகுட்ட நோய்மாறி
இங்குநா முய்ய இரங்கியெம்மைக் காத்தவளே
தங்கு முமதுதிருத் தாமரைத்தாள் போற்றிசெய்தேன்
எங்கு முமதுபுக ழெப்போது முண்டாமே

கன்னி கவி

என்னைநீர் புகழ வேண்டாம் யாவையும் படைத்த நாதன்
அன்னைசெய் நன்மை யீது அகத்தினில் மறந்தி டாமல்
இந்நிலத் திடர்நோய் நீங்கி யினிதுவாழ்ந் திருப்பீ ராக
உன்னுமிந் நகரில் யானும் உகந்திருந் திடுகு வேனே

சைப கவி

கட்டழ குடைய ராச கன்னிதண்டலைநா டெய்தி
மட்டவிழ் குழைம ருந்தால் மகிழ்வுட னநேகம் பேர்க்குக்
குட்டநோய் மாற்றுஞ் செய்தி குறித்தவந் நகரி லுள்ளோர்
சட்டமுற் றழைக்கத் தீவிற் றலைவனு மறிந்திட் டாரே

தன். ராய இன்னிசை

காவலனென் வாசல்நிற்கும் கட்டியகா ராகேளாய்
மேவுகுட்ட நோயகற்றும் மின்னனையா ளெங்கொருத்தி
ஆவலுற வுண்டாம் அவளையெந்தன் சமுகமுன்னி
தாயழைத் ததிசுறுக்கில் தான்வந் திடுவாயே

கட்டியகாரன் தரு

கண்டவருண்டோ - ஆராகிலுங்
கண்டவருண்டோ

கண்டவ ருள்ளதோ பண்டிதங் கற்றிடும்
கன்னி யொருத்தியை இந்நில மீதினில்
தண்டலை மன்ன னழைத்து வரச்சொல்லித்
தாட்டிக்கை பண்ணுறார் நாட்டுச் சனங்களே (கண்டவ...)

இந்த இறையவன் தம்பி தனக்கு
எழுந்தவன் குட்டத் தழும்புகள் மாற்றிட
வந்த வயித்திய ரால்முடி யாததை
மாற்றுவ ளாமந்தக் கீர்த்தி மடந்தையைக் (கண்டவ..)

தையல் தவத்தி லுயர்ந்தவ ளாம்வெகு
தானம் மெய்ஞ்ஞானந் தரித்தவ ளாமவள்
கையி லொருகுழைக் கொப்புமுண் டாமந்தக்
கன்னி யொருத்தியை இந்நில மீதினிற் (கண்டவ...)

பண்டித ரேதமிழ்ப் பாவல ரேயிந்தப்
பாருள்ள வர்த்தக ரேகமக் காரரே
தண்டலை மன்னவன் தம்பிநோய் தீர்த்திடக்
தக்கவள் தன்னையித் திக்கிலா ராகிலுங் (கண்டவ..)

கட். கார. இன்னிசை

மெல்லியரே நல்லதவம் மிக்கவளே திக்கனைத்தும்
சொல்லியமா புகழுடைய தோகையே ஆரணங்கே
வல்லதண்டேல் நகராளும் மன்னனும்மைக் கூட்டிவர
எல்லையிலெந் தனைவிடுத்தார் இப்போ வருவீரே

கன்னி பரணி

நிந்தா தரவோ டுமதுபதி
நேர்ந்து வருவோன் மதலைமலர்ப்
பந்தோ டலைய லமிழ்ந்தாமல்
பால னுயிர்காத் தாண்டவளே
இந்தா தரையில்தே வரிருக்
கெளியா னென்ன பணிபுரிவேன்
செந்தா மரைத்தா ளினைமறவேன்
தேர்வேந் தவையிற் செல்வேனே

கன்னி இன்னிசை

தஞ்சமென்றோர் தனைக்காக்கும் தாரரசர் கோமானே
மிஞ்சுபுக ழாதிகர்த்தன் மிகுகிருபை யுண்டாக
வஞ்சியென்னை யுஞ்சமுகம் வரவழைத்த காரியமேன்
இஞ்செகத்தில் யானறிய இயம்புவீர் மன்னவனே

தண். ராய. கவி

இயம்புமென் றுரைத்த மின்னே எனதுதம் பியினன் பான
சயம்பெறு முடலிற் குட்டந் தனைச்சுக மாக்கி விட்டால்
புயம்பெறு பணிபட் டாடை புகழ்செறி பவுசு மிக்காய்
நயம்பெறத் தருவே னெந்தன் நன்மொழி தவறு தன்றே

கன்னி இன்னிசை

தாவுபுகழ்க் கானதிபன் தம்பியே யிங்கேவா
மேவுதுன் னுடலிலுள்ள வியாதியாய்க் காணவில்லை
பூவில்முன்செய் யூழ்வினையாற் போட்டதுசற் குருவிடம்போய்
பாவவுச்சா ரணம்புரிந்தால் பலபிணியும் நீங்கிடுமே

தன். ராயன் தம்பி தரு

கன்னி மரியைதரு பாலனே - உய
ராதிபரனே மனுக் கோலனே
கன்னி ராசமங்கை தனக்குயான் - செய்த
கன்மம் பலித்தது மெய்யாகுமே

பாவ மனுவளவில் லாதவள் - தேவ
பரனை யடிபணியும் மாதவள்
பூவை தனக்குச்செய்த குற்றந்தான் - குட்டம்
போட்டு வருத்துதிது திட்டந்தான்

குழந்தை வயதிற்செய்த பாவத்தைப் - பொறுத்துக்
குருவே யருள்மெய்ஞ்ஞானத் தீபத்தைச்
செழுந்தே னூறுமலர்ப் பாதனே - தயை
செய்து காருமேசு நாதனே

பாவப் பொறுதிதரு வாயென்றே
பரவுங் குருவினிடத்திற் போயின்றே
ஏவும் பிழைகள்முற்றுஞ் சொல்லியே - கொம்பிசம்
ஏற்கக் குருவிடத்திற் செல்லுவேன்

குருவரவு

கவி

தருதிரி சுடரோன் ஞான தற்பரன் தரையிற் சொன்ன
விருதுறு சத்திய வேத மேன்மையை விளக்க மாக
மருவுறு மனுக்கட் கோதி வளர்கதிப் பெறுபே றய்க்கும்
குருவுல கனைத்தும் போற்றக் குறிக்கருஞ் சபைவந் தாரே

குரு தரு

அற்புதனே தற்பரனே - எங்கள்
ஆரணனே காரணனே
பதமபாத மேயருளி - இந்தப்
பாவிதன்னைக் காருமையா

அப்பொழுது மிப்பொழுதும் - கன்னி
யானமரி யாளிடத்தும்
மெய்ப்புதல்வ னுகவந்த - நாதன்
மெய்ப்பதத்துக் கேபுகழ்ச்சி

ஆதரையிற் பேதகமாம் - பாவ
அலகைவினை யணுகாமல்
ஓதுபத்துக் கற்பனையின் - மறை
யுரைபகர்வே னிறையவனே

மேதினியுள் ளோரனைத்தும் - உந்தன்
வேதநெறி யோதிடவும்
தீதலகை வினையறவும் - தயை
செய்யுமென தையாவே

மூவுலகும் போற்றிசெய்யும் - ஒரு
முதலோனடி யிணைபணிந்து
தேவபரன் சன்னிதியில் - நானுஞ்
சென்றிருப்பேன் வென்றிபெற

குருவசனம்

பேறுபல் பொருளுந் தந்த பேரின்ப ஞான தேவன்
மாறகல் செழும்பூம் பாதம் வாழ்த்தியிங் கிருப்ப தாமால்

தன். ராய. தம்பி இன்னிசை

தாவுதிருச் சபைவிளங்கும் சத்தியவே தக்குருவே
தேவரீர் சீர்பாதம் சென்னியில்வைத் தேனடியேன்
பூவுலகி லேபெரிய பொல்லாத பாவியியான்
பாவவுச்சா ரணம்புரிந்து பத்திபெற வந்தேனே

குரு வசனம்

காவலன் தம்பி யேகேள் கற்பனை பத்தின் வண்ணம்
தேவகற் பனைக ளைந்தின் சேரொழுங் காக வேதான்
நீபுரி காரி யங்கள் நிகழ்த்திலக் கணமுஞ் சாயல்
மாவலர் சிந்தையாலும் வாக்கினுற் கிரியை யாலும்
மேவுமுன் பாவ மெல்லாம் விளம்புவாய் பயப்ப டாதே
தாவுமுன் துரோக மெல்லாம் தம்பிரான் பொறுத்துக் கொள்வார்

தன். தம்பி வசனம்

தயவுறு குருவே யானும் தலையான பவங்க ளேழும்
பயமறச் செய்த தன்றிப் படியிலென் தமையன் சேயை
இயல்புற வளர்த்த தாதி யென்கூட இணங்கா தாலே
செயமுறு மகவைக் கொன்று செய்யிழை பேரில் வைத்தேன்

வைத்தவள் தனையுங் கொல்ல வகைபுரிந் தேனென்
னண்ணன்
சித்தம திசையா தாலே சேர்ந்தபாழ்ந் தீவு தன்னில்
தத்துவத் துடனே யேற்றித் தள்ளவித் துரோகஞ் செய்தேன்
புத்தியி லுணர்ந்து பாவப் பொறுதிதந் தருளு மையா

குரு கவி

ஐயமற் றன்று நீசெய் யரும்பவப் பொறுதி வேண்டில்
எய்துமுன் தமையன் முன்போய் இதுகதை யெல்லாஞ் சொல்லி
உய்யநற் பொறுதி கேட்டு உகப்புடன் வந்தீ ரென்றால்
வையக மதிலும் பாவம் வானவன் பொறுப்பா ருண்மை

தண். ராய. தம்பி தரு

விண்ணும் புவியும் சகல பொருளும்
விளங்கப் படைத்துப் புரப்பவா வெந்தன்
அண்ண னிடத்தி லிதனை யெப்படி
அறைகுவே னையோ - ஐயோவிது
முறையிதோ வையோ

மன்னன் றனது மகவை வதைத்து
மடந்தை தன்னையும் வனத்திற் றுரத்தி
இன்னம் நானென்று சொன்ன வுடனே
ஏசுவா ரையோ - சிரந்தன்னை
வீசுவா ரையோ

மனதி லொளித்தி டாதித் தன்மையை
மன்ன னிடத்திற் சொன்னா லொழிய
எனது வருத்தம் நீங்கி டாததற்
கென்ன செய்குவேன் - இனியெந்த
வண்ண முய்குவேன்

அத்தனே பரி சுத்தனே பர
மாதியேயுயர் சோதியே யெங்கள்
கர்த்த னேயினி நித்த மெனக்குன்
கருணை கூருமே - எனையிந்தத்
தருணங் காருமே

நன். ரா. தம்பி இன்னிசை

முன்னவனே பிள்ளை தன்னை மோசமுறக் கொன்றதுயான்
அன்னநடைத் தாதியைவிண் அவதாறு யான்மொழிந்தேன்
இந்நிலத்தில் இதுபிழையை ஏகபரர்க் காகவேதான்
உன்னுமனம் பொறுத்தால்யான் உடற்சுகம்பெற்
றுய்வேனே

தண். ராய. தாழிசை

அம்ப ராபுவியி லிந்தமா கொடுமை
ஆர்செய் வார்மன மழற்றுதே
அதிக மாதயவு தருச கோதரியை
அவக டம்பகர முறைமையோ
கொம்ப னாரெந்நகர் வந்தனுள் முதலாய்க்
குறைவில் லாதபுகழ் நிறைவதாய்க்
குலவு நன்மைதவ நெறிநன் நீதிபல
கூடிவந் ததுவெந் நாடுதான்
தம்பி வார்த்தைகளை நம்பி நன்மைநிறை
தையல் தன்னைவளர் வெய்யகான்
தன்னி லேற்றிவிடு மன்ன பாவமது
தன்னை நானுமெது சொல்லுவேன்
வம்ப னீதுசெய லாகுமோ விவனை
வையமீதி லெது செய்குவேன்
வானவா கருணை யானவா பரம
மைந்தனே யுமது தஞ்சமே

கன்னி இன்னிசை

வேந்தே சலியாதே மிக்கவுந்தன் தம்பியர்க்குப்
போந்த பொறுதியிப்போ புவியிற் கொடுத்தீரால்
ஆய்ந்தபர மேகாதி யருட்கிருபை தன்னருளால்
ஏந்திழையாம் பாவியையும் இன்னமுங்கா ணப்பெறுவீர்

தண். ராய. கவி.

பெறுதவக் கன்னி சொன்ன பேச்சிரு செவியிற் கேட்டு
இருதயங் கமலம் போல இனியநல் மகிழ்ச்சி யானேன்
உறுசிறி யவன்செய் குற்றம் உளத்தினிற் பொறுத்தே னிப்போ
மறுவகன் றுலகிற் செல்வ வாழ்வுபெற் றிருப்ப தாமே

கன்னி கலித்துறை

துன்றிய தண்டலை மன்பின் கனிமரி தொல்பெயரால்
இன்றொரு நோன்புநீ காத்திடு வாயுன் னெழில்புரத்தில்
அண்டிய குட்ட மகலும் மருந்தத னாலுடல்நோய்
இன்றி வெகுபுக ழாய்ச்சுகம் பெற்றுய் திருந்தருளே

சபை கவி

செயம்பெறு மன்னர் பின்னேன் செய்பிழை பொறுத்துப் பின்னர்
வயம்பெறு மருந்தாற் கன்னி மற்றவன் பிணிகள் மாற்றி
முயன்றவன் காடுதன்னில் முறைமுறை தனக்கு வந்த
பயன்றருங் கதைக ளெல்லாம் பார்த்திவர்க் குரைத்திட் டாளே

கன்னி தரு

மனமகிழும் மன்னவனே கேளும் - அன்றும்
மனையி லிருந்துமது தனதரு ளாலே
தனமிகுங் குழந்தையை வளர்த்த - அந்தத்
தாதியென வுரைக்கும் பாவிநான் தானே

அரிய வுமதுதம்பி யானேன் - பொல்லா
அலகை வலையிலுழன் றிடர்செய்த தாலே
பெரிய வனத்திலென்னை யேற்ற வம்பு
பேசுமி காமன்வெகு மோசம தாகப்

பரவை தனிலெறிவே னென்று - பொல்லாப்
பாவமொழி யுரைக்கத் தேவ அருளாலே
விரவிய சம்மனசு வந்து - தீது
விலக்கி வனத்தில்விட்டு இன்னமு மன்பாக

மாகபரன் றுய்வந்து காட்சி - நல்கி
வங்கமொன் றிங்ருகரை சேர்ந்திடு மென்றும்
ஆகத்திற் குட்டநோய்கள் தீர்க்க - இந்த
அவுடதந் தானும் தந்தார் ராசகோமானே

மாதர்க் கரசிசொன்ன வண்ணம் - கப்பல்
வந்ததச் சோங்குதன்னில் வந்திவ்வூர் சேர்ந்தேன்
ஓதற்கரியவுந்தன் தம்பி - தனக்
குற்ற பிணிதவிர்க்கச் சொற்றதி னாலே

கோதுற்ற பாவப்பிணி தீர - வேத
குருமுன் பொறுதி பெற்று வருகெனவிட்டேன்
விட்ட குருவினப ராதம் - இன்னம்
மீளவுமைப் பொறுதி கேளென்ற தாகும்

திட்ட மிவைகள்வெளி யாச்சே - எல்லாம்
தேவசித்தத் தின்படியா மன்னர்கோவே

தண். ராய. கவி

கன்னியர்க் கரசே கற்புக் கன்னியே நின்னைக் கண்டு
நன்மனப் பிரிய மானேன் நலமுற வாழ்க்கை வாழ்க
உன்னைநின் கற்பின் கீர்த்தி உலகெலாம் விளக்க மாக
மன்னுநற் புகழும் நன்மை வரமுமுற் றிருப்பி ராக

தண், ராய, தம்பி. - மதிமதன் தரு

கன்னிசுத்த ஞானமானே கற்புராச கனியேயுனைநான்
சொன்னகுற்றம் பொறுமிப்போதுன் துணைமலர்த்தாள்
[தொழுதேன் மின்னே

மாநிலத்துன் கற்புநீத மகிமைதன்னை யறியாவண்ணம்
நான்நினைத்த பாவம்நீக்கி நன்மையீய்ந்த வுண்மைமறவேன்

வேதநீத ஞானமேவு மிக்கசெப மின்னேபொன்னே
மாதரசே பேதையான்செய் வஞ்சம்நீக்குந் தஞ்சந்தானே

உடலுலகங் கடியென்றிந்த உற்றமூன்று சத்துராதி
அடல்செய்பாவ மதனாற்சொன்ன அறிவில்லாமை பொறுமின்னுரே

கற்பனைகள் பத்தும்மீறிக் கருதுபாவ நினைவுகூறிப்
பொற்கொடிநின் பேரிற்சொன்ன புத்தியீனம் பொறுமின்னுரே

உலகிலுன்புண் ணியமுந்தயவும் உண்மையாகு முன்னேயறிகில்
குலவுபாவ நினைவுநினையேன் கோதில்லாளுன் பாதம் போற்றி

தன்மக்கருத்தும் சரீரசுகமும் சகலநன்மைப் பெறுபேறனைத்தும்
நன்மைப்பொருளு மெனக்குண்டாக நாதனிடம்மன் றுடும்மானே

மிக்கசெல்லவம் விளங்கிவழங்க மிடிமைதுன்பம் யாவும்நீங்க
மக்கள்கூட்டம் தழைவுபெருக மகிமைபண்ணும் மடமின்னுரே

தண். ராய. இன்னிசை

கற்பா ரணங்கே கருதுமொழி யொன்றுளதாம்
நற்பாக்கியமுமிந்த நாடுமென்தம் பிக்குரித்தால்
பொற்று ரவன்றனைநீர் புணர்ந்திருந்தால் நன்றல்லவோ
நிற்பாக் கியமே நினைவுணர்ந்து சொல்விரே.

கன்னி இன்னிசை

சொல்லருமென் சகோதரனே துலங்குவனத் திருந்திடுநாள்
நன்நகர்ரே மாபுரிக்கு நான்நேர்ந்த நேர்த்தியொன்ரும்
வல்லவிரா யப்பர்திரு வளர்பதிக்கு நானுமின்று
செல்லவுத்தா ரந்தருவீர் செயல்பிறகு சொல்வேனே

தண். ரா. கவி

செயல்பெறு மெனது நேசந் திகழ்சகோ தரியே நீரும்
தயவுடன் ரேமைக் கேகித் தக்கநன் நேர்த்தியீந்து
இயல்புடன் மீண்டு வாரும் இருநிலத் தினிலெல் லோரும்
நயமிகு சுகமும் வாழ்வும் நன்மையும் பெருகத் தானே.

கன்னி தரு

அன்னம்மாள் சேயே - பரனை
யருளிய தாயே - அடைக்கலம்
இன்னமும் நீயே - எனையின்
றிரட்சைசெய் வாயே
மன்னவன் தம்பி - சொல்பொய்யை
மகிழ்நனும் நம்பி - மனத்தினில்
அன்னவர் வெம்பி - யொன்றுர்கைக்
களித்தனர் வம்பில்

வம்பர்கள் கூட்டிக் - கொண்டேகி
மருமலர்க் காட்டி - லவர்புரி
யும்பல கோட்டி யகற்றி
யுகந்தெனை மீட்டீர்
நம்பிநா னேனை - கானுடன்
நகர்க்குற்ற நானை - அவருடை
தம்பியோர் கானை - செய்வஞ்சந்
தவிர்த்தாயவ் வேளை

அவ்வியா பாரம் - புரியுரு
வாளனந் நேரம் - மனத்தினி
லொவ்விய கோரம் - லிலக்கிய
துன்னுபகாரம்

நவ்விக ளாட்சி - கொள்காவினில்
நண்ணிய காட்சி - யளித்திந்தக்
குவ்விலென் பூட்சி - தனக்குக்
கொடுத்தனை மீட்சி

மீட்டுமவ் வஞ்சர் - வன்குட்டம்
விளைந்ததாற் கெஞ்ச - யான்வந்து
வாட்டமில் கொஞ்ச - மருந்திலே
மாற்றலுன் தஞ்சம்
காட்டக மன்னன் - பின்ரேனுக்கு
கண்ணியிடச் சொன்ன - விதங்கண்டு
நீட்டரு மன்னன் - நான்ரேமைக்கோர்
நேர்த்தியுண் டென்ன

என்ன நடந்து - வளநக
ரெல்லை கடந்து - எஸ்பாஞ்ஞூர்
தன்னை யடைந்து - பிழைக்கவித்
தன்மை தொடர்ந்து
கன்னிநான் சொல்ல - வுனது
கருணைசெய் வல்ல - கற்பாரணி
யின்னம்நீ யல்லா - தியாரென்னை
யிரட்சிக்க வல்லார்

தண்டலை ராயனுந் தேவியுந்
தம்பியும் மங்களத்தரு

ராயன்: ஏகனே யாரணனே - மெய்வேத
இறையவனே பரனே
யோகனே காரணனே - எமக்குன்
னுதவிபுரியு மையா

தேவி: தேக சுகப்பேறும் - சந்தானமும்
செல்வப் பெறுபேறும்
ஓகை பெறவுதவும் - மாதாவே
யுமக்கே நமஸ்காரம்

தம்பி: ஆகமிக மகிழத் - தேவாதி
யருள்நித முண்டாக
ஈகைமுடி யிறைவர் - குலக்கன்னிக்
கென்றுமிஸ் தோத்திரமே

ராயன்: மேதகு மம்பரனே - யுமது
விழித்தயை நோக்கியென்றும்
ஓதிய செல்வசுகந் - தருவை
யுமக்கே யடைக்கலமே

தேவி: தீதுவினையகலப் - பலபொருள்
சேர மகிழ்வாக
ஆதிப ராபரனே - யுமது
அருட்கண் திருப்புமையா

தம்பி: பாதிமதி மிதித்த - கருணைப்
பராபரி யேகனியே
நீதிசே ராகசுகம் - பெற்றுய்த்திட
நின்தயை செய்வாயே

ராயன்: வாம மிகுபுவியச - ளிறைவனென்
மைந்தர் மனைமாதும்
பூமலி செல்வசுகம் - பெற்றென்றும்
புவிதனில் வாழ்வோமே

தேவி: தாமமலி சரீர - சுகமுந்
தழைவு மிகப் பெருகி
நாமமலிந்த பரா - பரியுமர்
நன்மைபுரிந் தருளே

தம்பி: தேமலி செந்நெல்வயல் - விளைவுறு
செல்வம் மிகப்பெருகி
பாமலி நன்மைமிகப் - பெற்றுய்யப்
பரன்றயை செய்வாமே

ராயன்: செய்யத யாபரனே - யுமர்திருச்
சித்த மிரங்கியாம்
உய்ய வுதவுமையா - மூபேரு
மொருபொரு ளானேனே

தேவி: தையல ருக்கரசே - கிருபைத்
தயாபரி யேதரைமேல்
எய்து முதவிசெய்து - எந்தன்னை
யிரட்சைசெய் தாளுமம்மா

தம்பி: வையக நீதினிலே - எமது
வறுமை யகற்றிநிதம்
துய்யசுக பேற்றைத் - தந்தாளுஞ்
சுருதி மறைப்பொருளே

எம்பரதோர் வண்ணம்

வானமும் புவியும் - சுடர்
வால சந்திரனும் - ஒளிர்
வாயிலங்குதா ராகணங்களும்
நீர்தருங்கட லும்பொருள்யாவும்

ஆறுதி னந்தனிலே - அரு
ளாதியம் பரனுர் - சர
ரூரவிந்தமெந் நாளும் நம்பின
பேரையாண்டு புரந்தருள் சோதி

வாடை தருங்குளிர்கால் - வீசு
மாரியம் பொழுதே - மனு
வாகவந்தத மேவையும் புரி
தீதன்றிட அன்புசெய் தேவன்
வனசமலர்ப் பாதமென்றும் பரவியே

வாசமுறுங் குழல்சேர் - மட
மாதணங் கையான் - மலர்
மாலை தங்குகல் யாணமுஞ் செய்து
நீதி பொங்க நடத்திடு நாளில்

ஆர்ப மிகுஞ்செருசேல் - நக
ரானநற் றலமே - கான
ஆசைகொண்டினை யோனையுங்குல
மாதையுந்தல மிங்கரசாள
வாய்மை மொழிந்துடனே - செல்ல
மாதுதம்பி யையே - அவ
மானபங்கம தானவம்புசெய்
தாளெனும்படி வந்தவனோதி
வளரு விசுவாச மன்று புரியவே

மேவு கொடுஞ்சினமே - யுறும்
வேளைவந் தனளால் - சொல்
விவேகமந்திரி மாரொடுங்குறி
யாதுபொங்கி யடர்ந்தெழு காவில்
கோறல் புரிந்திடவே - மொழி
கூறிவன் கண்ணர்பால் - இடக்
கோதை யின்றரு நீதமொன்றுமே
கேள்வி யின்றியே யிய்ந்ததினாலே
மேதகு சிந்தனைதான் - மிக
வாயிரங்கு தையோ - எது
வேளையுஞ்செய் தியானமும்வெகு
தானமுந்தவ முந்தருமாது
வினையறிகி லாளிதெந்த விதமதோ

மேரு வளர்ந்திடுகா - விடை
வேனலுங் கொடிதாய் - உடல்
வேர்வெழும்பிட வேநடந்திட
நாய்மிகுஞ்சின வஞ்சகர் தான்வெகு
கோர முடன்தள்ளியே - யெது
கோறல் செய்தனரோ - மிகு
கோபமிங்குயர் பாவமென்றுமுன்
னோர்மொழிந்த துணர்ந்ததினாலே
மேரைகள் வந்ததையோ - எவர்

வேய்வு வஞ்சனையோ - மன
மீதறிந்திடான் றுவருந்துயர்
தீரவந்தருள் தந்தென்னையாளும்
மிகுகருணை யான தந்தை புதல்வனே

எம்பரதோரும் மந்திரியும் தரு

எம்பரதோர் : அந்தமாமட மங்கைக்கிவ் வண்ணம்
அவனியில் வந்ததினால் - எந்தன்
சிந்தைமீதி லயர்க்கரி தாகுதென்
செய்குவேன் மந்திரியே

மந்திரி : முந்தவே யிவை பார்ப்பதென் னாதிம்
முறைபுரிந் திரினிமேல் - நல்லோர்
நிந்தமும் போன காரியம்மீட்டும்
நினைப்பார்க ளோவரசே

எம்பரதோர் : தம்பிசொன்னதல் லாமல் மறுமறு
சாட்சியும் வந்ததினால் - பின்னை
நம்பவேண்டிய தல்லவோ சொல்லுமென்
நடப்புறு மந்திரியே

மந்திரி : கொம்பனார்தன்னைக் குற்றமுள் ளாளென்று
கொன்றிடத் தீர்வையிட்டீர் - இனி
எம்பிரான்சித்தத் தின்படி யாம்மனத்
தெண்ணிக்கை யேனரசே

எம்பரதோர் : எண்ணமிதன்றி நன்றுமென் தம்பிக்
கெழுந்தவன் குட்டமதை - எந்த
வண்ணமாற்றுவ தென்றுவென்னுள்ளம்
மலங்குது மந்திரியே

மந்திரி : மண்ணிலேபின் னவன் பிணி மாற்றவிம்
மாநகர் பண்டிதரால் - இன்னு
மண்ணலேயிய லாதென்றப் பால்விட்
டகன்றன ராதிபனே

எம்பரதோர் : இந்தவூருள ராலிய லாதெனி
லென்செய்வ திங்கினிநாம் - வேறே
எந்த நாட்டிலு முண்டெனக்கேட்டு
இயம்புவாய் மந்திரியே

மந்திரி : சந்தநாகடர் சூழ்வள மேவுமெஸ்
தாலிய மாநகரி - தன்னில்
வந்தோர்மா திப்பிணி பலபேருக்கு
மாற்றின ளாமரசே

எம்பரதோர் : வண்மைசேருமோர் தூதனையேவி
வயித்திய வஞ்சிதன்னை - இங்கே
உண்மையாக வழைத்திடுவாயென்
னுளமகிழ் மந்திரியே

மந்திரி : தண்மைசேருநின் தம்பியுடற்பிணி
தான்சுக மாக்குதற்கு - இப்போ
அண்ணலே யழைப்பித்திடுவேன்சலி
யாதையும் மன்னவனே

மந்திரி கவி

மேதினி மதிக்குங் கீர்த்தி மிக்ககட் டியகா ராகேள்
ஆதிபன் றனது தம்பி யாகத்திற் குட்டம் மாற்றக்
கோதில்பண் டிதமின் னுரைக் கூட்டிவந் திடுதற் கிப்போ
தூதுவர் தன்னைச் சென்று சுறுக்கினி லழைத்தி டாயே

தூதர் வரவு

கவி

சென்னியில் வரத்தி மின்னத் திருமலர் மாலை யார
மின்னுபொற் பணிகள் துன்ன மென்பதச் சுதங்கை பன்ன
மன்னவ னென்டி நீக்கு வழுத்துகட் டளைக்கிப் போது
தன்னிக ரில்லாத் தூதர் சபைதனில் தோற்றி னரே

சபைத் தரு

செந்நெல் வளமலியும் - நல்ரோமைத்
திருநக ரெம்பரதோர்
சொன்ன மொழிப்படிக்கு - அழகெழு
தூதுவர் வந்தனரே

வல்ல கலையறிவில் - நற்புத்தியில்
வார்த்தை நளினமதில்
சொல்லு விறல்மதிசேர் - புகழ்தரு
தூதரும் வந்தனரே

இந்தரை மேலிணங்கார் - தமைச்சென்
றிணக்க வணக்கமிகத்
தந்திரத்திற் றெளிந்த - நற்றூதர்
சபைதனில் வந்தனரே

தூதுவர் கவி

தரைபுகழ் ரோமை நாடாள் தரணிபர் கோவே போற்றி
விரைசெறி வாகைசூடும் வேந்தனே போற்றி போற்றி
உரைதரு தூதரெம்மை உவப்புட னுமது முன்பில்
வரவழைத் திட்ட செய்தி வழுத்துவீர் மன்னர் கோவே

எம். கவி

மன்னனென் சமுகந் தன்னில் வந்ததூதுவரே கேளீர்
இந்நிலம் புகளெஸ் தால்ய வெனுநகர் தன்னில் நீர்போய்ப்
பன்னுவன் குட்டம் மாற்றும் பரிகாரி யெனுமோர் பேதை
அந்நக ருளதாந் தேடி அழைத்துநீர் வருகு வீரே

தூதுவர் தரு

1ம் பேர் :

இந்நிலம் போற்றுமன்னர் மன்னவன் சாற்றுவண்ணம்
எஸ்தாலிய நாடுதனக் கேகியே - யந்த
நன்நவம் சேருமடக் கன்னிகை யாரெனவே
நாடுதனில் தேடியழைப்போ மிப்போ

2ம் பேர் : தெண்டிரை சூழ்புவியிற் பண்டிதந் தானறிந்த
செய்யவொரு தையல்வந்த தாமிங்கே
[• யவவைக்
கண்டபே ராரெனினும் விண்டிடீரோ வுமக்குக்
கருதுபல பொருள்கள் தருவோமிப்போ

1ம் பேர் : கொந்நுலாங் காவில்மட மந்திபாய்ந் தேசிறந்து
கொக்கரிந்து முக்கனியைத் தாவியே • பித்துட்
பந்துபோன் ருடமது நைந்துவார்ந் தோடுரேமைப்
பார்த்திவன் சொற் சாற்றுதூதர் நாங்களே

2ம் பேர் : மட்டுலா வாகையுனைந் திட்டரா சேந்திரசெய
மன்னவன்றன் பின்னவனுக் கேயிப்போ • வந்த
குட்டமாம் நோய்கடன்னை இட்டமோ டேயகற்றக்
கூடியவர் நாடுதனில் வேருருண்டோ

கன்னி இன்னிசை

அம்மா அடியார்க் கடைக்கலமே யாதரையாள்
பெம்மான் றவிதுகுலப் பேதையே மாதாவே
இம்மா நிலத்தோர்க் கெழுந்த குட்ட நோய்மாற்றி
யும்மாதர வால்நான் உடற்பிழைப்புக் கொள்வேனே

தூதுவர் கவி

தோழனே கேளா யிந்தச் சொல்லருந் தெருவில் மீது
காளம்நேர் விழியின் மாது கையிலோர் குழைக்கொப் பேந்தி
ஏழைபோல் வாருள் நாங்க ளிவள்பெய ருர்கள் தானிவ்
வேளையா ராய்ந்து கேட்டு விபரமிங் கறிவோம் வாரும்

தூதுவர் இன்னிசை

செங்கரத்தி லேயோர் சிறந்தகுழைக் கொப்பேந்தி
பொருகுதவ மெஞ்ஞானப் பூரணியே வாழ்கவென்று
மங்களங்கள் கூறிவரு மாதேநீ ரார்பெயருர்
தங்கவுரை செய்திடுவீர் தயவாயறி யத்தானே

கன்னி கலித்துறை

தானெந்த வூர்பெயர் கேட்டு வருதற் சகோதரரே
நானிந்த நாட்டிற் பிழைக்கவந் தேனென் நடப்பேதென்றுல்
ஊனந்தரு குட்ட நோய்மாற் றவுடத முண்டதனுல்
மானங்குன் ருமல் வயிறு வளர்த்தலென் வாய்மையிதே

தூது கவி

வாய்மைசேர் மாதே நீர்சொல் வாசக மனைத்துங் கேட்டு
தூய்மன மகிழ்ச்சி யானேம் சோபனப் பிரிய மாக
ஏயமன் னெண்டி நீக்கு இளையவன் குட்டம் மாற்ற
நேயமுற் றழைக்க வந்தோம் நிருபர்முன் வருகு வீரே

கன்னி தரு

மன்னன் றவிதுகுலந் தன்னிலுதித்த திவ்விய
மாசில்லா ராசகன்னி மாதாவே தாயே
தன்னைநிக ரில்லானை முன்னம் புவியிலளித்
தாளே சரணந்தேவ தாயாரே யம்மா

பண்ணும் பலாபத்திலும் முன்னின்றெனது முகம்
பார்த்தாதரவு செய்யும் ஆத்தாளே யம்மா
என்னை யொருபொருட்டாய் உன்னுங் கிருபைசெய்து
இரட்சைசெய் தாயுமக்கி ஸ்துத்தியந் தாயாரே

தாலத்தரசன் செரு சேனைக்கேகவே யவர்
தம்பிஎன்னை மொழிந்த வம்பதெல்லாமகற்றி
ஏலப்போ யங்கவனென் மேலிற்சுமத்திச் சொல்ல
இறைவன் சினந்திருந்த தறியாமல் அம்மா

மாலைத் திருக்கணவன் பால்சென்று வென்னையொரு
வார்த்தைகேளா மற்கொல்லத் தீர்த்தாரே யம்மா
ஆலக்கடு மனத்த ரால்விக்கின முருமல்
அன்றுமென்னை யேரெட்சிக் கின்றவளே யம்மா

பாவிக்கிரங்கி மலர்க் காவிற் றிருக்கருணை
பண்ணும் பராபரியே பெண்ணரசே யம்மா
ஆவிக்கருந்து ணையே மாவிக்கனந் தவிர்க்கும்
அன்னைமரி மாதாவே கன்னிகையே யம்மா

கோவென் பதிமுன்னின்னம் மேவும்படி கருணை
கூரும்பரம கிரு பாகரியே யம்மா
தாவுஞ் செழுங்கமலப் பூமென் றிருப்பதமே
தஞ்சந் தஞ்சமுமக்கே யஞ்சலஞ்ச லென்னம்மா

கன்னி இன்னிசை

மன்னவனே மன்னர் மணிமுடியே மாசணுகா
அன்னை கன்னி மாமரியாள் அருள்பெருகி வாழ்ந்திருக்க
இந்நிலத்தில் மாபாவி எனையுமது சமுகமதில்
உன்னியழைப் பித்ததென்ன உத்தரவு சொல்வீரே

எம். கவி

உத்தரவு வருள்வீ ரென்ன உரைத்திடும் மடமின் னரே
மெத்தவென் னிளையோன் குட்டம் வெகுவயித் தியர்கள் தம்மால்
நத்திமாற் றிடவொண் ணுதால் நானுன்னை யழைத்தேன் மாற்றில்
சித்தமே மகிழ்தி யாகம் செய்குவே னுண்மை தானே

கன்னி இன்னிசை

தானுக வந்தபரன் தாயாரரு ளல்லாமல்
நானுக மாற்றுதற்கு நன்மைப்பே றுண்டாமோ
ஆனுலுந் தேவசித்தம் அளவிடுதற் கெட்டாதால்
கானுர் மருந்துசெய்வேன் காளையே வாருமிங்கே

கன்னி கலித்துறை

அரசர்க் கிளைய வரேசொல்லக் கேளுமும் மாகத்தினில்
விரவுற்ற குட்ட முடலா லெழுந்த வியாதியல்ல
தரைதனில் நீர்செய்த பாவத்தி னுல்வந்த தாமிதைப்போ
வருசற் குருவிடத் துச்சரித்தாற் றுன்பம் மாற்றுவனே

தம்பி தரு

பலபொருளும் படைத்த சத்யநாதா - திரிபுவனப்
பாக்கியனே வாக்கியமறைப் போதா
அலகில் நன்மைக்கட லானதாதா - யான்புரிந்த
அறியாமை பொறுத்தருள் செய்வாயே

கற்புநெறி குன்றுத தவமா - மயில்ராச
கன்னிகையைச் சொன்ன அவமானம்
நற்புவியிற் பலித்ததென்ன வேதான் - திடமாக
நானுமென துள்ளத்துணர்ந் தேனே

அன்னைபெற்ற பாலகனே பரனே - தேவதிவ்ய
ஆரணனே காரணமெய்ப் பொருளே
கன்னிமத லேனபவம் பொறுத்தீர் - வலதுபக்கக்
கள்வனுக்குப் பெறுபேறு கொடுத்தீர்
முன்னமத மேவைகுற்றந் தவிர்த்தீர் - அவைபோலென்
முகத்திரக்கம் பார்த்தருள்செய் வீரே

இனிமேலிந்த அவநீதம் புரியேன் - உமதுதய
வென்னுளம் விட்டொருபோதும் பிரியேன்
முனிவான தகற்றி யடியேன்மேல் - உமதுதிவ்ய
முண்டக விழிநோக்கு வீரே

குரு தரு

தன்னிகரில் லாதவனே - ஏக
தற்பரனே யற்புதனே
சொன்னமய மானவனே - திரி
சுடரொளியே சரணமையா

மேவுமத மேவையுண்ட - பழ
வினையகல மலையிடையே
பாவைமரி யாயிபெற்ற - சிறு
பாலகனே போற்றியையா

ஆதிகிரு பாகரனே - எம
    தாரணனே காரணனே
சோதியொளி யானவனே - யுமக்
    கிஸ்தோத்திரந் தோத்திரமே

அருவுருவு மானவனே - யெம்மை
    யாண்டவனே மீண்டவனே
இருகதியுஞ் செய்தோனே - யாறு
    லெட்சணனே அர்ச்சனையாம்

எப்பொருளும் படைத்தழிக்கக் - காக்க
    இயல்புடைய நாயகனே
முப்பெயரொன் றுனவனே - யுந்தன்
    முண்டகத்தாள் தெண்டனையா

தொல்புவியில் நீருரைத்த - உண்மைச்
    சுருதிமறை நூலதனைப்
பல்பெயருந் தானறிந்து - நின்னைப்
    பரவவருள் புரியுமையா

அஞ்ஞான மடரிருளில் - உழன்
    றுண்மையறி யாதவர்க்கு
மெய்ஞ்ஞான மறைபயிற்ற - நன்மை
    மேவாலய மதனிற்செல்வேன்

குரு வசனம்

வானமும் புவியு மின்னும் மற்றுள்ள பொருளுஞ் செய்து
தானதா யிருக்கு மேக தற்பரப் பொருளைப் போற்றி
ஞானநற் செப தியானம் நலம்பெறப் புரிந்திப் போது
ஈனமில் கோவில் தன்னில் இருந்திடு வேனன் பாக

தம். இன்னிசை

பொய்வேத இருட்படலம் போக்கிநன்மை தேக்குமுயர்
மெய்வேத வழிகாட்டும் மின்கதிர்போல் வருகுருவே
துய்தான நின்கமலத் துணைச்சரணம் போற்றிசெய்தேன்
செய்பாவப் பொறுத்தல்பெறச் சிறியேனிங் குற்றதாமால்

குரு வசனம்

உற்றவெம் பரதோர் நேசம் உடையதம் பியரே கேளீர்
நற்றிமுட் டிட்டு நின்று நல்மனஸ் தாப மாக
வெற்றிசேர் சிலுவை யிட்டு வேதகற் பனையின் வண்ணம்
முற்றுநின் பாவமெல்லாம் மொழிந்திடும் பரனுக் கின்றே

தம்பி வசனம்

அம்பரர்க் கேராப் பாவம் அநேகஞ்செய் ததுமல் லாமல்
எம்பர தோரென் முன்னோன் இயல்செரு சலேநா டெய்த
இம்பரி லவர்தன் பாரி யெனுமிராக் கினியை நானும்
வம்புறு பவத்துள் ளாக்க மனதினி லாசை யாகி

ஆகம்நொந் திருக்கும் வேளை அரிவைகண் டாய்ந்து கேட்க
ஓகையோ டுரைத்தே னந்த ஒண்டொடி கோட்டைக் கப்பால்
ஈகைசேர் வீடு கட்டி இருமதில் வருவே னென்று
போகவுய்த் திருந்தேன் வந்து பூட்டிபூன் மதிலாற் றந்து

மதுரச மொழியாள் காவல் வைத்தைந்து வருடத் தின்பின்
அதிசெரு சலேநாடுற்ற அண்ணல்தன் வரவு கேட்டுப்
புதுமனை திறந்து விட்டாள் பூபதி யிடம்முன் நான்போய்ப்
பதியிலென் குற்றமெல்லாம் பாவைமேற் சுமத்தி வைத்து

மைவிழி யாரென் பேரில் மையலாற் றுரந்தா ளென்றும்
ஐயமற்றி ணங்கா தாலே அடைத்தனள் மறிப்பி லென்றும்
பொய்யுரைத் துண்மை செய்து பொய்ச்சட்சி யநேகம் விட்டுத்
தையலைத் தடிவித் தேனிச் சதிவினை பொறுஞ் சுவாமி

குரு கவி

பொறுக்கரி திந்தப் பாவம் புவியிலுன் தமையன் முன்போய்
மறுப்படாக் கற்பு ராச மடந்தையைச் செய்த தீங்கு
முறைப்படி யிறைவர்க் கோதி முன்னவன் பொறுதி வாங்கி
மறுத்தவந் துரைப்பா யாகில் வானவன் பொறுப்பா றுண்மை

தம்பி தரு

ஐயையோநா னென்னசெய்வேன் - இனி
யண்ணல்முன்னென் னென்றுசொல்வேன்
செய்தகுற்றம் வைய கத்தில் - சொல்லத்
தீருமென்று கூறினரே

முன்னவன் முன்சொன்ன வுடன் - என்னை
முனியாரோ துணியாரோ
இந்நிலத்தோர் வையாரோ - விதற்
கேதுசெய்வேன் வானவனே

நான்புரிந் தகுற்ற மெல்லாம் - அவள்
நரபதிக்குச் சொல்லாமல்
தான்பொறுத்து விட்டாளே - நானுந்
தன்னுலகப் பட்டேனே

நரபதியென் னுரையதனை — அன்று
நம்பவரி தென்றுரே
தரைதனிற்பொய்ச் சாட்சிகளும் - விட்டுச்
சத்தியமுஞ் செய்தேனே

புவியிலுள்ளோர் ரினிநானென்றுல் - வசை
புரியாரோ சிரியாரோ
அவமதிக்கா ளானேனே - ஆதி
அம்பரனே தஞ்சமையா

மனதிலொழிக் கின்றுலும் - குட்டம்
மாறவகை வேறில்லையே
இனியெதுதான் வந்தாலும் - அண்ணல்
இடத்திதை யுரைத்திடுவேன்

தம்பி இன்னிசை

வளம்பெருகும் ரோமைநகர் மன்னுவென் முன்னவனே
விளங்குகற்பு ராக்கினிமேல் வீணவதூ றெடுத்துரைத்தேன்
களங்கமென்மேல் நீரறிகிற் கனைவீர் சிரமெனவென்
குழந்தைமதி யாற்புரிந்த குற்றம் பொறுப்பீரே

எம்- தாழிசை

ஆர்க டுரவவ நீதியிது செயல்
ஐயையோ கொடிய பாவியே
அன்று மாதுபுரி கின்றதி தெனவே
அண்ணிநின் னுறுதி பண்ணியே
நேர்கெ டாததவ மேவு மாதுதனை
நீசர்தா னதிக மோசமாய்
நிலமீ தேயுலவு பலவ கோரமொழி
நிந்தை தன்னையினி யென்சொல்வேன்
சீர்கொ டார்புனையு மெனதமைச்ச னெடு
செய்பியாய்ந்து செய்தே னில்லையே
தேவனே கருணை நாதனே யுமது
திருவுளத் திலிது சித்தமோ
போர்கொ டாவுவிறல் வசியினு
மிழிஞு புலைஞு னின்சிரசு தன்னையே
பொடிய தாகவிழ வரிய
வேயெனது புந்தி மீதுசின முந்துதே

மந்திரி இன்னிசை

மண்ணுளும் வேந்தர் மணிமகுடம் போன்றவனே
எண்ணுமற் செய்ததினல் இத்தாரம் வந்ததையா
கண்ணுன பூபதியே கடுங்கோபந் தானுறி
விண்ணுத னைத்துதித்தால் மிடிமையெல்லாம் நீங்கிடுமே

எம்பரதோரும் மந்திரியுந் தரு

எம்பர :

ஆறுலுஞ் சொல்லக்கேளாய் மந்திரியே - புவியிலிவன்செய்
அந்நீதந் தன்னை யென்ன சொல்லுவேன்

மந்திரி :

வானுடம் பரன்தானே யிரங்குவார் - சலித்திடாதேயும்
மனப்பொறுதி யெத்தனைக்கும் நல்லதையா

எம்பர : ஐயோவனலில் நெய்போ லுருகுதே - எனதுமனது
ஆறுதில்லை யெவ்வாறும் மந்திரியே

மந்திரி :

செய்போதெவையும்மெய் யாய்ந்திடல் நன்றும் - அல்லாதுகவலை
சேருமென் றறியீரோ மன்னவனே

எம்பர :

அந்நாள்மன்றல்செய் திந்நாள் வரையுமோர் - தவறில்லாள்தன்னில்
அசடர்சொல் பொய்யை நிசமாயெண்ணினேன்

மந்திரி :

தன்னால்வந்ததி லென்னே மன்னவனே - முதலித்தொகைநான்
சற்றேயறிகி லுற்றிடா திவையே

எம்பர : அந்தோ புவியிலிந்தா கடிகந்தான் - தவத்தில்மிகுத்த
அரியகன்னிக்கு வருவதேதையோ

மந்திரி :

நிந்தா தரைபுரந்தா திபனேகே - ளுலகிலாண்டவர்
நீதவாளரைச் சோதிப்பா ரையோ

எம்பர :

அன்பாரும் புகழ்மின் கோதையரைத்தான் - அடையலர்வந்
தன்றேகொடுமை கொன்றுரோ வையோ

மந்திரி : நன்பாருலகை யன்போடி ரட்சிக்கும் - சருவநாயகி
நன்மைதா னந்தக் கன்னிக்குண்டையா

எம். இன்னிசை

சொல்லருமென் மந்திரியே தோகையைக் கொண்டேகுமந்த
முல்லைவன மெங்கே முடிச்சிரங்கொய் திட்டாலும்
வல்லதவக் கன்னிசுத்த மான வெனும்புகழை
நல்லசங்கை யாய்க்கொணர்ந்து நாட்டில்வைப்போம்
[போற்றுதற்கே

கன்னி கலித்துறை

மன்னவர் மன்னவ னேயும் மனத்துயர் மாற்றியுந்தன்
பின்னவன் குற்றம் பொறுத்தருள்வீ ரிந்தப் பேருலகில்
கன்னிகை தேவ தயாபரி தன்நற் கருணையினால்
இன்னமும் பாவியைக் காண்பீர் தெய்வீக விரக்கமுண்டே

எம். கவி

இரக்கமில் லாது காந்தைக் கினிதுநீ செய்த குற்றம்
தரைக்குள்யான் பொறுத்தே னெந்தன் தம்பிநீ சலிக்க வேண்டாம்
பரப்பொருட் டாயி ரக்கப் பார்வைமென் மேலும் பெற்றுப்
புரத்தில்நோய கன்று வாழ்வு பொருந்திவீற் றிருப்பா யாக

கன்னி இன்னிசை

காவலன் பின்னோனேயுன் காத்திரநோய் நீங்குமிதோ
தேவபரன் தாய்பேராற் செபமாலை யொன்றுவைப்பாய்
மேவுமென்கைக் குழைமருந்தால் மெய்தனைத்து டைத்துவிட்டேன்
தாவுமுடற் சுகம்பெருகித் தழைவுபெற்று வாழ்வீரே

தம்பி கவி

அன்புறு தாய்போல் வந்த அரிவையே நின்னா லென்மெய்
வன்பிணி யகன்றுய் தின்று வச்சிர காயம் பெற்றேன்
உன்புகழ் அவனி மேல்நீ டூழியும் வாழ்க வாழ்கப்
பொன்பொலி கமலச் செம்பொற் பூம்பதம் போற்றினேனே

எம். இன்னிசை

அன்னைகன்னி மாமரியாள் அருட்கிருபைப் பேறுடைய
மின்னனையே ஞான விளக்கே குலக்கொடியே
என்னுடைய துக்கமகன் றென்மனது தேறுதற்கு
உன்னுடைய பேரு ருறுதியுடன் சொல்வாயே

கன்னி கலித்துறை

சத்திய நாதன் றனக்கு மவர்சொற் றருமறைக்கும்
பக்திகொள் மான ரெவர்க்குமொவ் வாதவன் பாவத்தினால்
நித்திய காவிற் றுணித்திடத் துட்டர்முன் நீர்கொடுத்த
நத்திய பாவிநானுல காளுநன் நரபதியே

எம். இன்னிசை

உண்மைசெறி வேதசபைக் கொழுங்காகக் கைப்பிடித்த
வண்மைசெறி மாதே மணியே மணிவிளக்கே
பெண்மயிலே யுன்மேற் பிழையணுவில் லாமலிந்தத்
தண்மையெல்லாங் கையேற்கத் தம்பிரான்சோ தனேயோ

எம்பரதோருங் கன்னியுந் தரு

எம்பர.

வன்னமட மாமயிலே - கற்பு
மாதரசே பேதையரே நீதிதவ ருதமின்னே
நின்னையான் பாருலகில் - செய்த
நிந்தனையை யுந்தனது சிந்தையிலெண் ணுதேமின்னே

கன்னி

மன்னர்புக ழாதிபனே - மன்னர்
மாமுடியே பூபதியே கோமணியே காதலனே
என்னுடைய பவமகற்றப் - பரம
ஏகனரு ளாருமீதும் மால்வருவ திலையரசே

எம்பர.

அரசர்குல மடமயிலே - இந்த
அம்புவியில் தம்பிசொல்லை நம்பியேமாற் றவருடைய
கரமதனிலே கொடுக்க - வுந்தன்
கற்புமகி மைக்குவந்த அற்புதங்கூ றுவைமயிலே

கன்னி

தருவனமி தடையலர்கள் - தங்கள்
தனக்கிணங்கென் றெனைத்தொடர்ந்தார் வனத்திலவம்
[வாராமல்
விரவியகான் நகரிறைவன் - அங்கு
வேட்டைசெய்வோன் காட்டிலென்னை மீட்டுதவி னுரரசே

எம்பர

முத்தனைய நகையாரே - தன்ம
முறைவழுவாப் பிறைநுதலே நறைகமழ்பூங் குழல்மாதே
புத்தியினம் யான்புரிந்தேன் - உந்தன்
புண்ணியம்வந் தண்ணரியென்னை மண்ணுலகில் காத்த
[மின்னே

கன்னி

தத்துவத்தன் டலையிறைவன் - என்னைத்
தாயினுமன் பாயிருத்திச் சேவைவளர்த்திட விசைத்தார்
நித்தவன்தம் பியுமிவன்போல் - என்மேல்
நேசமுற்ருன் மோசமென்றேன் ராசகுமா ரனைவதைத்தான்

எம்பர.

தீற்றுமதி நுதலாளே - நல்ல
கிஞ்சுகவாய் வஞ்சியரே கஞ்சமலர் முகமாதே
போற்றுதவம் மிகுத்தவளே - இந்தப்
பூதலத்தி லாதிலுற்ற காதையென்ன கூறுமின்னே

கன்னி

பார்த்திவன்நீ தியைவிளங்கிக் - கொல்லல்
பாவமென்ருேர் தீவில்விட மேவுகப்பல் தனிலனுப்ப
ஆற்றிடைத் தண்டேல் வருத்த - அந்த
ஆந்தரத்தி லெந்தை நாதன் வந்துதவி நந்ததையா

எம்பர.

ஈனமுருத் தேன்மொழியே - எந்தன்
இருவிழியே குருமணியே விரைசெறிபூங் குழல்மாதே
மானமிகுங் காதலியே - பெற்ற
மகிமைதனக் குவமையென்ன புகலுமகா அரிதரிதே

கன்னி

கானகத்தி லிருந்திடுநாள் - தேவ
கன்னிமரி யன்னைவந்து உன்னருங்காட் சிகளவித்து
தானமிகுங் குழைமருந்து - ஒன்று
தந்தோர்கப்பம் வந்திடுங்காண் உன்தன்நகரக் கேகுமென்
ருர்

எம்பர.

அனநடைசேர் கிளிமொழியே - எங்கள்
ஆண்டவளாற் கண்டவரம் பூண்டவளே பூவையரே
வனசமுக மனேமாதே - அந்த
மன்னன்நகர் தன்னிலுள்ள தென்னநவஞ் சொல்லு
[மின்னே

கன்னி

நினதுதம்பிக் குறுபிணிபோல் - அந்த
நிதிதிகழ்கா னதிபதியன் அதிகதம்பிக் குற்றதினால்
அனநகர்சென் றவனுடலில் - குட்டம்
ஆற்றிமனம் தேற்றியுள்ளம் தேற்றமுங்கூ றினனிறையே

எம். கவி

இறையவன் றனது கோத்ர ராக்கினி கிருபை யாலே
நறைதரு சகல செல்வ நன்மையுங் கிடைத்த தாமால்
பிறையன நுதலே வாழ்வு பெறுபல பாக்கிய முண்டாம்
நிறைமணித் தவிசின் மீது நேசமுற் றிருப்ப தாமே

மந். கவி

அன்னையே யாதிநாதன் அருள் பெற்ற புதல்வி யேநற்
கன்னியே யுமது செம்பொற் கழலினை போற்றி போற்றி
நின்னைவஞ் சகர்செய் பொல்லா நிந்தைக ளனைத்தும் நீங்கி
உன்னுநற் பவுசு பெற்று உலகினில் வாழி தானே

தம்பி இன்னிசை

பொறைமே வரியதவப் பூவையே தாயேநின்
நறைசேர் செழுங்கமல நற்பாதம் முத்திசெய்தேன்
அறியாமற் செய்தகுற்றம் ஆண்டவர்க்காய்ப் பொறுத்தெனது
குறைநீங்கிக் தழைவுபெறக் குறித்தவரந் தாருமம்மா

கன்னி இன்னிசை

மண்ணுலகில் நீதானும் மற்றேரு மெனனசெய்வார்
எண்ணரும் பாவியெனக் கித்தூரம் வந்ததுவாம்
விண்ணுலக ராக்கினியை மென்மேலும் போற்றிசெய்து
பண்ணுறுநற் சுகமுமிகு பவுசுபெற்று வாழ்ந்திருப்பீர்

தம்பி தரு

மின்னுங் கிரணபசும் பொன்னின் முடிபுனைந்த
வேந்தர்புகழ் தவிது ஏந்தல் குலத்தில்வந்த
கன்னிமரி யேதிரு நன்மை நிறைந்ததிவ்ய
கற்பலங் காரியேயுன் பொற்பதம் முத்திசெய்தேன்

மன்னவர் சிங்கமெந்தன் அண்ணல்தேவி யேயும்மை
வஞ்சனை செய்ததுட்ட பஞ்சபாத கன்நானே
என்னையுமது மலர்ப் பொன்னம்புயக் கண்ணேக்கி
இந்தரை மீதுயான்செய் நிந்தைபொறு மென்தாயே

பாசமென துளத்தை மோசம்புரியு மோகப்
பாவத்தை மூட்டிமன வேகத்தைக் காட்டியதால்
ஆசற் பனுமனுகா ராசகுலத் துதித்த
அன்னையே யான்புரிந்த தின்மை பொறுத்தருள்வீர்

ஆவைமரி யனைமுன் பாவியெனக்கு வேண்டி
அன்போடிறைஞ்சி யெந்தன் வன்பவம் மாற்றுமம்மா
தேவபரா பரனே பூவில்யான் செய்த கன்மத்
தீமை விலக்கியுய்ய நாளுங்கி ருபைசெய்வீர்

கன்னி கவி

தலைவனுக் கிளைய செல்வத் தம்பிநீ புரிந்த குற்றம்
பலவும்நான் பொறுத்தே னேக பரனுக்கும் பொறுதி யாகும்
உலகினில் வினைகள் நீங்கி யுடற்சுக நன்மை பெற்று
நிலைதரு செல்வ மோங்க நீடூழி வாழி தானே

எம். கவி

செழுங்குழவிப் பிறையனைய நுதலே சற்றுந்
தீண்டாத கற்பணங்கே தெவிட்டாத் தேனே
விளங்குமனை யேயென்னிரு விழியே நேசம்
மிக்கவளே தக்கவுன்னை மேனாட் செய்த
களங்ககல முரசொலிப்பித் துலகுள் ளோருங்
காவலரும் வரவழைத்துக் கண்முன் பாக
விளங்குவெகு மானதிரு விழாக் கொண்டாடி
மகிமைமிகப் புரிந்திடுவேன் மகிழுத் தானே

கன்னி இன்னிசை

காவலனே யென்நேசக் கணவனே கேளுமிந்தப்
பூவுலகில் வாழ்வு புனல்மேற் குமிழியதாம்
மேவுமெனக் கின்றுதரும் வெகுமான மொன்றுளது
தாவுதவத் தியராகத் தருவிருத் தாரமையா

எம். கவி

சொல்லரிய கற்புநெறி வழுவா நன்மைச்
சுடரான மடவரலுன் சொல்லுக் கிப்போ
எல்லையில்மா மனமகிழ்ச்சி யானே னீதோ
எனக்குமிகு சம்மதியா மின்பங் கூர
முல்லைதரு வனத்தி லெய்தி யென்றும் ஞான
முறைவழுவா திருபேரும் முதல்வ நாதன்
வல்லபதங் கைதொழுது மகிமை பெற்று
மாநிலத்தில் நீடூழி வாழி தானே

எம்பரதோரும் தேவியும் தம்பியும் மங்களத்தரு

எம்பர: ஏர்மேவு திரிசுடாய் — நின்ற
ஏகசரு வேசுரனே
நேர்மேவு நின்கருணை — தர
நித்தியபுகழ் மங்களமே

தேவி பேர்மேவு புகழ்வளரச் — செல்வப்
பெறுபேறு முண்டாகக்
கார்மேவு நின்கருணைக் — கடைக்
கண்ணோக்கும் மாதாவே

தம்பி: பார்மேவு மானருய்ய — வந்த
பாக்கியமே வாக்கியமே
தார்மேவு மாமரியாள் — செம்பொற்
ருளிணைகள் சோபனமே

எம்பர: வஞ்சகவல் வினையகல — மனை
மாதுதழை வுண்டாகக்
கஞ்சமலர்க் கண்ணோக்கும் — ஆதி
காரணனே யாரணனே

தேவி: கொஞ்சுமகப் பேறுடனே — நன்மை
குலவுபல பாக்கியமும்
நெஞ்சுமகி முத்தருவாய் — என்றும்
நித்தியசுப மங்களமே

தம்பி: மிஞ்சுசெல்வ பாக்கியமும் - புகழ்
மிகுசரீர சுகவாழ்வும்
இஞ்செகத்திற் றந்தருள்வாய் - எங்க
ளேகபரன் மாதாவே

எம்பர: சத்துருக்கள் பின்வாங்க - என்றுஞ்
சகலநன்மை யும்விளங்க
நித்தியசந் ததிகளுய்யத் - தேவ
நீதிபெற மங்களமே

தேவி: எத்திசையும் புகழ்விளங்க - எனக்
கிருநிதியங் கைகூட
சத்திநா யகன்கருணை - என்றுந்
தழைவுபெற மங்களமே

தம்பி: நத்துசெல்வ மேவிளங்கப் - பல
நன்மைகளு முண்டாகப்
புத்திரசெல் வமும்நிறைந்து - மிகப்
புகழ்வளர மங்களமே

எம்பர: மாதமும் மாரிபெய்து - செந்நெல்
வளமிகுந்து விளைவாகி
மேதினியெல் லாந்தழைக்க - நன்மை
விழிதிருப்பு மம்பரனே

தேவி: கோதைகற்புக் குன்ருமல் - என்றுங்
குறையாத நன்மைபெற
மாதுகன்னி மாமரியாய் - செம்பொன்
மலரடிக்கு மங்களமே

தம்பி: நீதிநெறி யும்விளங்கி - நன்மை
நிறைந்துசெல்வம் பெற்ருேங்கத்
தாதவிழ்செம் பொன்மலர்த்தாள் - துணை
தந்தருளும் மாதாவே

எம்பர: தாக்கணங்கென் காதலியும் - நானும்
சந்ததமுந் தழைவுபெற்று
ஆக்கமிக வுண்டாக - என்றும்
அனவரத மங்களமே

தேவி: வாக்குலவு மனைமகவும் - பொருள்
வளமுமிக வுண்டாகிப்
பாக்கியம்பெற் றுய்திடவே - நன்மைப்
பலன்பெருக மங்களமே

தம்பி: தேக்குமலர் மகள்சேர - என்றுஞ்
செல்வசுப முண்டாக
ஊக்கமிகு பொருள்சேர - நன்மை
யுற்றசுப மங்களமே

பொது மங்களத் தரு

ஏராருந் தாதைபரர்க்கும் மங்கள வாழ்த்து - சுத
னிஸ்பிரீத்துச் சாந்துவுக்கும் மங்கள வாழ்த்து
சீராருந் தாய்மரிக்கும் மங்கள வாழ்த்து - அர்ச்சிய
சிட்டசஞ் சூசையப்பர்க்கும் மங்கள வாழ்த்து

சம்மிக்கேலறுக் காஞ்சுக்கும் மங்கள வாழ்த்து - நவ
சபைவளர் தேவதாதர்க்கும் மங்கள வாழ்த்து
அம்முனிவர் கன்னியர்க்கும் மங்கள வாழ்த்து - சகல
அர்ச்சியசிட்ட வாளர்கட்கும் மங்கள வாழ்த்து

சந்தந்தோனி மாமுனிக்கும் மங்கள வாழ்த்து - வேத
சாட்சிசெவஸ்தியா முனிக்கும் மங்கள வாழ்த்து
சொந்தமனை மாதுதழைக்க மங்கள வாழ்த்து - சுப
சோபனசந் தோஷமுற மங்கள வாழ்த்து

நித்தமும்நன் திதழைக்க மங்கள வாழ்த்து - தேவ
நேசம்மிகப் பெருக மங்கள வாழ்த்து
சத்திய மறைதழைக்க மங்கள வாழ்த்து - உண்மைச்
சந்தப்பாப் பவைதழைக்க மங்கள வாழ்த்து

நித்தியசுகம் பெருக மங்கள வாழ்த்து - மானர்
நீடூழி வாழ்ந்திருக்க மங்கள வாழ்த்து
பத்திவிசு வாசம்மிக மங்கள வாழ்த்து - வெகு
பாக்கியம்பெற் றுய்திருக்க மங்கள வாழ்த்து

வேந்தர்சம தானமுற மங்கள வாழ்த்து - நன்மை
மெய்ஞ்ஞான மேசிறக்க மங்கள வாழ்த்து
சேர்ந்துசந் தானந்தழைக்க மங்கள வாழ்த்து - சுக
செல்வமுடன் வாழ்ந்திருக்க மங்கள வாழ்த்து

மிடிமைநோய் பிணியகல மங்கள வாழ்த்து - என்றும்
மெய்ச்சுகம்பெற் றுய்திருக்க மங்கள வாழ்த்து
படியில்நற் பொருள்பெருக மங்கள வாழ்த்துப் - பல
பாக்கியம்பெற் றுய்திருக்க மங்கள வாழ்த்து

மாதமும் மாரிபெய்ய மங்கள வாழ்த்துச் செந்நெல்
வாரிமிக வேபெருக மங்கள வாழ்த்து
மேதினி யடிமையுய்ய மங்கள வாழ்த்து - என்றும்
மேன்மைபெற்று வாழ்ந்திருக்க மங்கள வாழ்த்து

வாணிகம் மிகப்பெருக மங்கள வாழ்த்து - பூவில்
வர்த்தகர் நிதந்தழைக்க மங்கள வாழ்த்து
தோணுநன் நிதிபெருக மங்கள வாழ்த்து - சுப
சோபனமாய் வாழ்ந்திருக்க மங்கள வாழ்த்து

பாரிலிக் கதைசிறக்க மங்கள வாழ்த்து - இதைப்
பாடியாடு வோர்தழைக்க மங்கள வாழ்த்து
பேரிய லிசைவிளங்க மங்கள வ ழ்த்து - கேட்கும்
பேரவையெல் லாந்தழைக்க மங்கள வாழ்த்து

மேழிச் [illegible] தழைத்து வாழ்க வாழி - இந்த
[illegible] புழவுதொழில் வாழ்க வாழி
ஆழிட [illegible] மாடாடு வாழ்க வாழி - எங்கள்
அ[illegible]பொருள் தழைக்க வாழ்க வாழி

நற்புறு சுகம்பெருகி வாழ்க வாழி - இலங்கை
நாடுமிகவே தழைத்து வாழ்க வாழி
பொற்புறு மெண்டிறீக்குநகர் வாழ்க வாழி - கற்புப்
புண்ணியரா சாத்திகதை வாழ்க வாழி

தண்டலைத் தலைவர்நிதம் வாழ்க வாழி - மற்றுஞ்
சகலபெரி யோர்தழைத்து வாழ்க வாழி
தண்டமிழ்க் கலைஞர்சங்கம் வாழ்க வாழி
தானியம் மிகப்பெருகி வாழ்க வாழி

மன்னூர்மா தோட்டநகர் வாழ்க வாழி - இதில்
வாழ்சகல மானருய்து வாழ்க வாழி
பொன்னூரரண் மனையும் வாழ்க வாழி - என்றும்
பூமாது வாழ்ந்திருந்து வாழ்க வாழி

மன்னார் மாவட்டப்
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின்
வெளியீடு — 1

மன்னார் நாட்டுப் பாடல்கள்

முதலாம் பதிப்பு
1964

பதிப்பாசிரியர் :

கலாநிதி
சு. வித்தியானந்தன்